பக்கங்கள்: 16

விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | ஆவணி 08 வெள்ளிக்கிழமை 24.08.2018 | கதிர் 292

### இனி இது ரகசியம் அல்ல!

கூட்டமைப்பின் நேற்றைய நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் இடம்பெற்ற வாதப் பிரதிவாதங்களை அடுத்து சம்பந்தர் – விக்னேஸ்வரன் சந்திப்பு சாத்தியமா என்ற ஐப்பாடு எழுந்திருப்பதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நாடாளுமன் பக்கம் 03

## வடக்கு, கிழக்கு அபிவிருத்தி செயலணியைப் பகிஷ்கரிக்கும்

# விக்னேஸ்வரனின் கோரிக்கையை தூக்கிக் கடாசியது கூட்டமைப்பு

## நாடாளுமன்றக் குழு நேற்று ஒன்றுகூடி ஏகமனதாக முடிவு

கொழும்பு, ஒக்ஸ்ட் 24

வடக்கு, கிழக்கு அபிவிருத்திச் செயலணி என்ற பெயரில் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள அமைப்பின் நடவடிக்கைகளைப் பகிஷ்கரிக்க வேண்டும் என்று வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் எழுத்தில் முன்வைத்த கோரிக்கையை நேற்று பரிசீலனைக்கு எடுத்துத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு அக் கோரிக்கையைத் தூக்கிக் கடாசி நிராகரித்தது. அந்தச் செயலணியின் நடவடிக்கைகளில் பூரணமாகப் பங்குபற்றுவது என்றும் கூட்டமைப்பு எம்.பிக்கள் தீர்மானித்தனர்.

பக்கம் 14

### ஜனாதிபதி செயலணி குறித்து

## சம்பந்தனுக்கு விக்கி எழுதிய விடயம் என்ன?

கொழும்பு, ஓக.24

வடக்கு மாகாண முதல்வர் விக்னேஸ்வரனின் கோரிக்கையை நிராகரித்து வடக்கு, கிழக்கு மாகாண அபிவிருத்திக்கான செயலணிக் கூட்டத்தில் பங்கு பற்றுவது எனக் கூட்டமைப்பு நாடாளுமன்றக் குழு தீர்மானித்ததாக அறிவிக்கப்பட்ட போதிலும், முதல்வர் விக்னேஸ்வரன் கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்

பக்கம் 03

## பலாலியிலிருந்து விமான சேவை பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகும்

### புலனாய்வுப் பிரிவு எச்சரிக்கை

கொழும்பு, ஓக.24

பலாலியிலிருந்து நேரடியாக தமிழ்நாட்டுக்கு விமான சேவைகளை ஆரம்பிப்பது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என்று, புலனாய்வுப் பிரிவினரால் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பலாலி விமான நிலையத்திலிருந்து தமிழகத்துக்கு

பக்கம் 14

## நேபாளத்தில் மோடியை சந்திக்கின்றார் மைத்திரி

கொழும்பு, ஓக.24

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அடுத்த வாரம் பேச்சுக்களை நடத்துவார் என்று எதிர்பார்க்கப்படுவதாக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பிம்ஸ்ரெக் எனப்படும் வங்காள விரிகுடா விளிம்பு நாடுகள்

பக்கம் 14

## பரந்தனில் விபத்து; இருவர் படுகாயம்




கிளிநொச்சி, ஓக.24

கிளிநொச்சி, பரந்தன் சந்தியில் கார் ஒன்றும் பஸ் ஒன்றும் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் காயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்திய

பக்கம் 14

## வாள்வெட்டுக் கும்பல் பறித்த மோ.சைக்கிள் எரிந்த நிலையில்




யாழ்ப்பாணம், ஓக.24

கொக்குவில் பிரம்படி ஒழுங்கையில் எரியூட்டப்பட்ட நிலையில் மோட்டார் சைக்கிள் ஒன்று நேற்று மீட்கப்பட்டது.

வாள்வெட்டுக் குழுவால் பறித்துச்

பக்கம் 14

## வெடுக்குநாறி மலைக்கு அனந்தி நேற்று பயணம்



வவுனியா, ஓக.24

வவுனியா, வெடுக்குநாறி மலைக்கு வடக்கு மாகாண வடக்கு மாகாண மகளிர் விவகாரம் மற்றும் சமூக சேவைகள் அமைச்சர் அனந்தி சசிதரன் நேற்று விஜயம் செய்தார்.

அங்குள்ள சிவன் ஆலயத்தில்

பக்கம் 14

## குள்ள மனிதர்கள் குறித்து முறைப்பாடு ஏதுமில்லை

### டக்ளஸ் எம்.பியின் கேள்விக்கு சட்டம், ஒழுங்கு அமைச்சர் பதில்

கொழும்பு, ஓக.24

யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்களை அச்சுறுத்தி வருவதாகக் கூறப்படும் குள்ள மனிதர்கள் விவகாரம் தொடர்பாக இதுவரை எவ்வித முறைப்பாடுகளும் பதிவு செய்யப்படவில்லை என சட்டம் ஒழுங்கு

## விசேட மேல் நீதிமன்றின் முதலாவது அமர்வு இன்று

கொழும்பு, ஓக.24

பாரிய நிதி மோசடி மற்றும் இலஞ்ச ஊழல் குறித்து விசாரிப்பதற்காக அமைக்கப்பட்ட விசேட மேல் நீதிமன்றத்தின் முதலாவது அமர்வு இன்று வெள்ளிக்கிழமை இடம் பெறவுள்ளது.

முதலாவது வழக்கு விசாரணையாக முன்னாள் ஜனாதிபதி

பக்கம் 14

## எல்லை நிர்ணய அறிக்கை மீது வாக்கெடுப்பு நடத்துவதில் சர்ச்சை

மாகாண சபைத் தேர்தல் தொடர்பாக மாகாணத் தொகுதிகளின் எல்லை நிர்ணயக் குழு சமர்ப்பித்த அறிக்கை மீது நாடாளுமன்றத்தில் இன்று விவாதம் நடக்கும். ஆனால் அதன் மீது வாக்கொடுப்பு நடத்துவதா என்ற முடிவு இழுபறியில் நீடிக்கிறது.

நேற்று கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இது குறித்துக் காரசாரமாக விவாதிக்கப்பட்ட போதிலும் முடிவு ஏதும் எடுக்கப்படவில்லை. இவ்விடயம் குறித்து கட்சித் தலைவர்கள் இன்று பிற்பகல் 3 மணிக்குக்

பக்கம் 14

## பன்னீர்செல்வம், செங்கோட்டையன் 18ஆம் திகதி யாழ்ப்பாணம் வருவர்

### யாழ். பொது நூலக நிகழ்வில் பங்குபற்றுவர்

யாழ்ப்பாணம், ஓக.24

தமிழ்நாடு துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்ச்செல்வம், தமிழகக் கல்வி அமைச்சர் செங்கோட்டையன் ஆகியோர் எதிர்வரும் 18 ஆம் திகதி யாழ்ப்பாணம் பொது நூலகத்தில் நடைபெறும் ஒரு நிகழ்வில் பங்கு

பக்கம் 14

# சகவாழ்வுக்கும் நல்லிணக்கத்திற்கும் பௌத்தமே தலைமைத்துவம் வழங்குகிறது!

## வடக்கு ஆளுநர் குரே தெரிவிப்பு

பௌத்தம் பலவந்தமாக எவரையும் மதத்தில் இணைந்து கொள்ளுமாறு வற்புறுத்தும் சமயம் அல்ல எனவும், சகவாழ்வு மற்றும் நல்லிணக்கத்திற்கு பௌத்த சமயமே தலைமைத் துவம் வழங்குகிறது எனவும் வட மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே தெரிவித்துள்ளார்.



30 ஆண்டு கால போரில் கடுமையாக சேதமடைந்த காங்கேசன்துறை திஸ்ஸ விகாரையை நிர்மாணிப் பதற்கான அடிக்கல்லை நேற்று மன்தினம் வட மாகாண ஆளுநர் ரெஜி னோலட் குரே நட்டு வைத்தார்.

இதன் பின்னர் அங்கு கூடியிருந்தவர்கள் மத்தியில் உரை யாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு–

பௌத்த சமயத்தை தவிர உலகில் வேறு எந்த வழிப்பாட்டு தலங்களிலும் தெய்வங்களின் படங்கள் அல்லது வேறு மத தலைவர்களின் படங்கள் வைக் கப்படுவதில்லை என்பதுடன் வழிப்பட வாய்ப்பில்லை.

எனினும் பௌத்த சமயத் திற்கு அப்படியான வரையறைகள் கிடையா. பௌத்தம் பல வந்தமாக எவரையும் மதத் தில் இணைந்து கொள்ளுமாறு வற் புறுத்தாது. இதனடிப்படையில் நோக்கினால், சகவாழ்வு மற்றும் நல்லிணக்கத்திற்கு பௌத்த சம யமே தலைமைத் துவம் வழங்கு கிறது என்பது தெளிவானது.

நிர்மாணிப்பதற்காக அடிக் கல் நட்டு இந்த விகாரை, எதிர் காலத்தில் தமிழர்கள் தர்ம உப தேசங்களை கேட்கவும், துறவ ரம் பூணும் இடமாகவும் மாற வேண்டும் என பிரார்த்திக் கின்றேன்.

மேலும் இந்த இடம் இனங்கள் மற்றும் மதங்களுக்கு இடையி லான வேற்றுமையை உருவாக் காத இடமாக இருக்க வேண்டும் என்றும் பிரார்த்திக்கின்றேன். அத்துடன் இந்த இடம் மனிதா பிமானம் மற்றும் நல்லிணக்கத் தின் வேறாக இருக்க வேண்டும் என்றும் வேண்டுகிறேன்.

இன, மத, ஜாதி பேதங்கள் இன்றி புத்த பகவானினால் செயற்பட முடிந்தது என்றால், அந்த மதத்தை பின்பற்றும் எமக்கு பேதங்கள் இன்றி செயற் படமுடியும். சீன பௌத்தம், தாய் வான் பௌத்தம், பர்மா பௌத் தம், தாய்லாந்து பௌத்தம், ஜப்பான் பௌத்தம் என எங்கு பௌத்தம் இருந்தாலும் பௌத்த தர்மத்தில் மாற்றங்கள் இல்லை. பௌத்தம் எங்கிருந்தாலும் எங்கு பரவினாலும் ஒரே தர்மம்.

இதேவேளை, மகாத்மா காந்தி மற்றும் நெல்சன் மண்டேலா ஆகியோருக்கு உலகில் சம தர் மத்தின் போதனைகள் புத்த ப கவான் மூலமே கிடைத்தன. விகாரை என்பது வேறு மதங் களை யும், வேறு இனங்களை யும் சவா லுக்கு உட்படுத்தும் இடமாக இருக் கக்கூடாதுஎனவும் ஆளுநர் ரெஜி னோல்ட் குரே குறிப்பிட்டுள்ளார்.

# அம்பாந்தோட்டை, கொழும்பு துறைமுகங்களுக்கு சென்றார் ஜப்பானிய பாதுகாப்பு அமைச்சர்!



இலங்கைக்கு விஜயம் மேற்கொண் டுள்ள ஜப்பானிய பாதுகாப்பு அமைச்சர் இட்சுனோரி ஒனோடெரா, நேற்று முன்தி னம் அம்பாந்தோட்டை மற்றும் கொழும்புத் துறைமுகங்களுக்குச் சென்று பார்வை யிட்டார்.

சீனநிறுவனத்தின் கட்டுப்பாட்டில் உள்ள அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு ஜப்பானிய பாதுகாப்பு அமைச்சர் சென்ற போது, அவருடன் செய்தியாளர்கள் எவரும் உள்ளே அனுமதிக்கப்படவில்லை.

பலத்த பாதுகாப்புடன் அம்பாந்தோட்டை துறைமுகத்துக்குச் சென்ற ஜப்பானிய பாதுகாப்பு அமைச்சர் அங்குள்ள நிலைமை களை நேரில் பார்வையிட்டதுடன், துறை முகத்தின் செயற்பாடுகள் குறித்து அதி காரிகளிடம் கேட்டறிந்து கொண்டார்.

அதேவேளை, கொழும்பு துறைமுகத் துக்கும் சென்று அதன் செயற்பாடுகள் முன்னேற்றங்களையும் ஜப்பானிய பாது காப்பு அமைச்சர் ஆய்வு செய்தார்.

இதன்போது, இந்த ஆண்டின் முதல் காலாண்டில், அதிக வளர்ச்சி வீதத்தை எட்டிய உலகின் முன்னணித் துறைமுகங் களில் கொழும்பு துறைமுகம் இடம்பிடித் துள்ளது நன இலங்கை துறைமுக அதி கார சபையின் தலைவர் பராக்கிரம திசநாயக்க தெரிவித்தார்.

ஜப்பானின் நிதியுதவியுடன் கட்டப்பட்ட ஜெயாகொள்கலன் முனையம், கொழும்புத் துறைமுகத்தின் 80 வீத வருமானத்தை ஈட்டித் தருகிறது என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

# கிழக்கு கடற்படை தலைமையகத்திற்கு ஜப்பான் பாதுகாப்பு அமைச்சர் விஜயம்!

உத்தியோகபூர்வ விஜயத்தை மேற் கொண்டு இலங்கை வந்துள்ள ஜப்பான் பாதுகாப்பு அமைச்சர் நேற்று முன் தினம் கிழக்கு கடற்படை கட்டளை தலை கத்திற்கு விஜயம் செய்தார். இவரை கட்டளை தளபதி றியல் அட்மிரல் சுமித் வீரசிங்க வரவேற்றார்.

இதனை தொடர்ந்து கிழக்கு கடற்படை பிரிவிற்கு பொறுப்பான பிரதிக்கட்டளைத் தளபதி கொமண்டர் நந்தன ஜயரத்ன கிழக்கில் கடற்படையினர் மேற்கொள்ளும் பணிகள் தொடர்பிலும் ஜப்பான் பாது காப்பு அமைச்சருக்கு விளக்கமளித்தார்.

இதேவேளை, ஜப்பானிய பாதுகாப்பு அமைச்சர் இட்சுனோரி ஒனோடேரா பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்தனவைச் சந்தித்தார்.

பாதுகாப்பு அமைச்சில் கடந்த செவ் வாய்க்கிழமை இடம்பெற்ற இச்சந்திப்பின் போது ஜப்பானிய பாதுகாப்பு அமைச்சர் மற்றும் இலங்கை பாதுகாப்பு இரா ஜாங்க அமைச்சர் ஆகியோருக்கிடை



யில் சுமூக கலந்துரையாடல் இடம் பெற்றது.

இந்த கலந்துரையாடலில் இலங்கைக் கான ஜப்பான் தூதுவர் கெனிச்சி சுக னுமா, மேலதிக செயலாளர் – நாடாளு மன்ற அலுவல்கள், கொள்கை மற்றும் திட்டமிடல், பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானி, இராணுவ மற்றும் விமானப் படை தளபதிகள், கடற்படை அதிகாரிக ளின் பிரதானி, கடலோர பாதுகாப்புப்படை பணிப்பாளர் மற்றும் அமைச்சின் அதி காரிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# பிரபாகரனின் மரணத்தினால் நாம் மகிழ்ச்சி அடையவில்லை!

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் கொல்லப்பட்ட போது, தானோ, அல்லது தனது சகோதரியான பிரி யங்கா காந்தியோ மகிழ்ச்சி யடையவில்லை என்று இந்தி யாவின் காங்கிரஸ் கட்சித் தலைவர் ராகுல் காந்தி தெரி வித்துள்ளார்.

ஜேர்மனியில் ஹம்பேர்க் நகரில் Bucerius Summer School இல் கடந்த செவ் வாய்க் கிழமை நடந்த நிகழ் வில் பங்கேற்று உரையாற் றிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வரு மாறு–

வன்முறைகளால் எனது குடும்பத்தில் இரண்டு பேரை இழந்திருக்கிறோம். எனது பாட்டி (இந்திரா காந்தி) மற் றும் எனது தந்தை (ராஜிவ் காந்தி ஆகியோர் கொல்லப் பட்டனர். எனவே வன் முறைகளால் நான் அதிகம்



ராகுல் காந்தி கூறுகிறார்

பாதிக்கப்பட்டிருக்கிறேன்.

நான் உண்மையில் எனது அனுபவங்களில் இருந்து பேசுகிறேன். வன் முறைக்குப் பின்னர் நீங்கள் முன்னேறுவதற்கு உள்ள ஒரே வழி மன்னிப்புத் தான். வேறு வழி இல்லை. மன் னிப்பதற்கு நீங்கள் சரியாக என்ன நடந்தது, ஏன் நடந் தது என்று புரிந்து கொள்ள வேண்டும்.

எனது தந்தை 199இல் கொல்லப்பட்டார். எனது தந்தையைக் கொன்றவர், 2009இல் சிறிலங்காவில் கொல்லப்பட்டுக் கிடந்ததைக் கண்டேன்.

நான் எனது சகோதரி பிரியங்காவை தொலை பேசியில் அழைத்தேன். இது மிகவும் விசித்திரமானது, ஆனால் நான் மகிழ்ச்சிய டையவில்லை. இறந்து கிடந் தவர் எனது தந்தையைக் கொன்றவர் என்ற அடிப்ப டையில், நான் கொண்டாட வேண்டும். ஆனால் எப் படியோ நான் மகிழ்ச்சியடை யவில்லை என்றார் அவர்.

அதற்கு நானும், மிகவும் சரி, நானும் கூட மகிழ்ச்சி யடையவில்லை என்றேன்.

நான் மகிழ்ச்சியடை யாததற்குக் காரணம், அவ ரது குழந்தைகளின் நிலை யில் இருந்து தான் நான் பார்த்தேன்.

அவர் விழுந்து கிடக்கும் போது, உண்மையில் என் னைப் போன்ற பிள்ளைகள் அழுது கொண்டிருப்பார்கள் என்றே நான் உணர்ந்தேன். என்றும் அவர் தெரிவித்துள் ளார்

# தேர்தல்களை கலப்பு முறையில் நடத்த வேண்டும் என்பதே ஸ்ரீல.சு.கவின் நிலைப்பாடு!

மாகாணசபை மற்றும் நாடாளு மன்ற தேர்தல்களை கலப்பு முறை யில் நடத்த, தேர்தல் முறையில் மாற்றங்களை செய்ய வேண்டும் என்பதே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிலைப்பாடு என அமைச் சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள் ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு–

அரச ஊழியர்களின் சம்பள முரண்பாடுகளுக்கு முழுமையான தீர்வு வழங்கப்படும். இதற்கான அறிக்கை இரண்டு மாதங்களுக் குள் முன்வைக்கப்படும் என எதிர் பார்க்கப்படுகிறது.

மேலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மறுசீரமைப்பு பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. கட்சியின் மாநாட்டை சிறப்பாக நடத்த எதிர்பார்த்துள்ளோம்.

மாகாணசபைகளின் எல்லை நிர்ணய அறிக்கை தொடர்பான விவாதம் குறித்து தீர்மானம், இன்று (நேற்று) நடைபெறும் கட்சித் தலை வர்களின் கூட்டத்தில் எடுக்கப்படும்.



அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவிப்பு

மாகாணசபை எல்லை நிர்ணய அறிக்கைக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகள் கிடைக்கா விட்டாலும் அதனை அமுல்படுத்த மாற்று முறைகள் உள்ளன.

இதற்கு அமைய சபாநாயகர், பிரதமர் தலைமையில் 5 பேர் கொண்ட குழுவை நியமிக்க வேண் டும். அந்த குழு இரண்டு மாதங்க ளுக்குள் ஜனாதிபதிக்கு அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்க வேண்டும்.

அந்த அறிக்கையில் எல்லை நிர்ணய அறிக்கையை ஏற்றுக் கொண்டதாக பரிந்துரை முன்வைக் கப்பட்டால், நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் அவசியமில்லை எனவும் மஹிந்த சமரசிங்க குறிப்பிட்டுள்ளார்.

# முல்லை வெள்ளாங்குளத்தில் விபத்தில் இருவர் உயிரிழப்பு



முல்லைத்தீவு மாவட்டம் மாங்குளம், வெள்ளாங்குளம் வீதியில் நேற்று மாலை கப்ரக வாகனம் ஒன்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் இரண்டு பேர் உயிரிழந்துள்ளனர்.

முல்லைத்தீவு மாங்குளம் வெள்ளாங்குளம் வீதியின் கல்விளானுக்கும் கணேசபுரத்துக்கும் இடைப்பட்ட பகுதியில் நேற்றுப் பிற்பகல் வெள்ளாங்குளத்திலிருந்து மல்லாவி நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிளும் மல்லாவியிலிருந்து வெள்ளாங்குளம் நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த கப்ரக வாகனம் ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின.

இதன்போது மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவர் உயிரிழந்த தமையுடன், மற்றையவர் படுகாய மடைந்த நிலையில் மல்லாவி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்தின்போது மாந்தை கிழக்கு விநாயகபுரம் ஒட்டங்குளத்தைச் சேர்ந்த அந்தோணிப்பிள்ளை சுரேஷ்குமார் (வயது 27) என்பவர் உயிரிழந்துள்ளார். இவரது சடலம் மல்லாவி ஆதார வைத்தியசாலையில் உள்ளது. சம்பவ இடத்தில் உயிரிழந்த அதே இடத்தைச் சேர்ந்த சிவகுமார் புனிதகுமார் (வயது 25) என்பவரது சடலம் முழங்காவில் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இவ்விபத்து தொடர்பான விசாரணைகளை இலுப்பைக் கடவைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## ஒட்டு சுட்டானில் இரண்டு தலைகளுடன் பசுக்கன்று



முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் புளியங்குளம் பகுதியில் இரண்டு தலைகளுடன் பசுக்கன்று ஒன்றை மாடு ஒன்று ஈன்றுள்ள சம்பவம் பிரதேச மக்களை வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

ஒட்டுசுட்டான் பகுதியில் விவசாயி ஒருவரின் வீட்டில் உள்ள மாடு ஒன்றே இந்த கன்றை ஈன்றுள்ளது . கன்றும் தாய்பசு வும் நலமாக இருப்பதாக மாட்டின் உரிமையாளர் தெரிவித்தார்.

இந்த அதிசய பசுக்கன்றை நூறுக்கணக்கான மக்கள் சென்று பார்வையிட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## யாழில் இன்று முதல் 3 நாள்கள் யாழ். – கிளி. முஸ்லிம்கள் ஒன்று கூடல்

யாழ். – கிளிநொச்சி முஸ்லிம் பேரவை ஏற்பாடு செய்துள்ள யாழ். மற்றும் கிளிநொச்சி முஸ்லிம் மக்களின் ஒன்றுகூடல் நிகழ்வு இன்றும், நாளையும், நாளை மறுதினமுமாக தொடர்ந்து மூன்று நாள்கள் யாழ். ஒஸ் மானியாக் கல்லூரி வளாகத்தில் நடைபெறும்.

**இன்றைய நிகழ்வு**

இன்றைய அங்குராப்பண அமர்வு இன்று மாலை 4 மணி முதல் இரவு 9.30 மணி வரை யாழ்., கிளிநொச்சி முஸ்லிம் பேரவைத் தலைவர் சகோதரர் ஏ.ஸி.மஹானாஸ் தலைமையில் நடைபெறும்.

வடக்கு மாகாணக் கல்வி, கலாசார, விளையாட்டு, இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் பிரதம விருந்தினராகப் பங்குபற்றுவார்.

விசேட விருந்தினர்களாக யாழ். மாநகர சபை உறுப்பினர்களான கே.எம்.நியாஸ் (நிஸாம்), எம்.எம்.நிபாஹிர், பாலச்சந்திரன், மா.அருள்குமரன், இரா.செல்வவடிவேல், ஜெயந்தினி நாகேஸ்வரன், யாழ். மாநகர சபை ஆணையாளர் த.ஜெயசீலன், யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் வருண ஜயசுந்தர, யாழ். மாவட்ட ஜம்இய்யத்துல் உலமா தலைவர் மௌலவி சுபியான், யாழ். ஒஸ்மானியாக் கல்லூரி அதிபர் சேகு ராஜிது, கதீஜா பெண்கள் கல்லூரி அதிபர் ஜான்ஸி கபூர் ஆகியோர் பங்கு பற்றுவர்.

மாலை 6.45 மணி முதல் இரவு 9.30 மணி வரை கிராம சேவையாளர் ஆர். சப்பீர் தலைமையில் ஆன்மீக அமர்வுகள் இடம்பெறும். பிரசித்தி பெற்ற உலமாக்களினால் விசேட பயான்கள் நிகழ்த்தப்படும். அமர்வுகள் நாளையும் நாளை மறுதினமும் மாலை 3.30 மணி முதல் தொடர்ந்து நடைபெறும். (உ)

## மன்னார் மனித எச்ச விசாரணைகளுக்கு காணாமற்போனோர் அலுவலகம் ஆதரவு

### அதன் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, ஓக.24

மன்னார் சதொச நிலையத்துக்கான கட்டடப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட மனித எச்சங்கள் தொடர்பிலான விசாரணைகளுக்குக் காணாமற்போனோர் அலுவலகம் முழுமையான ஒத்துழைப்பை வழங்கும் என அதன் தலைவர், ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் தெரிவித்தார்.

மீட்கப்படும் மனித எச்சங்கள் அடையாளம் காணப்படுமாயின் அவர்களின் உறவினர்களுக்கு உதவுவதற்கும் காணாமற்போனோர் அலுவலகம் நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் –

மன்னாரில் தற்போது இடம்பெற்றுவரும் மனித எச்சங்கள் தொடர்பான அகழ்வுப் பணிகளுக்குக் காணாமற்போனோர் அலுவலகம் நேரடியான பங்களிப்பை வழங்குகின்றது. அத்துடன், அந்தப் பணி விடயங்களையும் மதிப்பீடு செய்து வருகின்றது – என்றார்.

## சம்பந்தனுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனிடம் உண்மையில் என்ன கோரினார் என்ற விடயம் நேற்று கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் கூட முழுமையாக முன்வைக்கப்படவில்லை என்று தெரிய வருகின்றது.

சம்பந்தனுக்கு விக்னேஸ்வரன் எழுதியது தனிப்பட்ட கடிதம் எனக் குறிப்பிட்டு, ஆகையால் அதனை முழுமையாக வாசிக்க முடியாது எனத் தெரிவித்து, கடிதத்தின் ஒரு பந்தி மட்டுமே கூட்டமைப்பின் ஏனைய எம்.பிக்களுக்கு சம்பந்தனினால் வாசித்துக் காட்டப்பட்டது.

ஆங்கிலத்தில் அமைந்த அந்தக் கடிதத்தின் ஒரு பந்தியை ஆங்கிலத்திலேயே சம்பந்தன் வாசித்துக் காட்டினார்.

அந்தக் கடிதத்தின் உண்மையான முழு விவரமும் வருமாறு:–

கௌரவ இரா.சம்பந்தன்
எதிர்கட்சித் தலைவர்
தலைவர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
கொழும்பு
22.08.2018

என் அன்புள்ள சாம் அவர்களுக்கு!

**ஜனாதிபதி செயலணி**

வடக்கு கிழக்கு மாகாணத்தின் பொருளாதார முன்னேற்றம் பற்றிய ஜனாதிபதி செயலணியில் பங்குபற்ற வடமாகாணத்தில் இருந்து கௌரவ ஆளுநரைத் தவிர நானும் எமது பிரதம செயலாளருமே அழைக்கப்பட்டமை உங்களுக்குத் தெரிந்திருக்கலாம்.

கூட்டத்திற்கு நான் செல்லவில்லை. இது சம்பந்தமாக நான் ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்தின் பிரதியை இத்துடன் அனுப்பி வைக்கின்றேன்.

குறித்த கூட்டத்தில் நான் பங்கு பற்றியிருந்தால் நான் அரசியல் ரீதியாகப் பல நன்மைகளைப் பெற்றிருப்பேன். ஆனால் தமிழர்கள் தங்கள் பிரச்சினைக்கான தக்க தீர்வொன்றை பெறமுடியாதே இருக்கும்.

தற்பொழுது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற அங்கத்தவர்கள் 16 பேருக்கும் அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் குறித்த செயலணிக் கூட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளார்.

பொருளாதார ஊக்கிகளே அரசியல் தீர்விலும் பார்க்க தமிழர்களுக்கு இத்தருணத்தில் முக்கியத்துவம் அளிக்கக் கூடியவை என்று நீங்கள் நினைத்தால் குறித்த கூட்டத்தில் பங்கு பற்ற நீங்கள் முடிவெடுக்கலாம்.

ஆனால் அரசாங்கமானது பொருளாதார ரீதியாக எங்களுக்கு பல நன்மைகளைக் கொடுக்க எப்பொழுதும் ஆயத்தமாகவே உள்ளதென்றாலும் அரசியல் ரீதியாக ஒரு தீர்வைக் கொடுக்க மறுக்கின்றது என்பதே என்னுடைய தனிப்பட்ட கருத்து. ஆகவே எமது 16 நாடாளுமன்ற உறுப்பினர்களும் குறித்த செயலணி கூட்டங்களில் பங்கு பற்றாது "அரசியல் தீர்வு முதலில்; பொருளாதார முன்னேற்றம் அதன் பின்னர்' எனக் கூறுவதே உசிதம் என நான் கருதுகின்றேன். மத்திய அமைச்சர்கள் சுமார் 12 பேரும் அவர்களுடைய செயலாளர்களும் இன்னும் சிலரும் படையினரில் உயரதிகாரிகளுந்தான் குறித்த செயலணியில் அங்கம் வகிக்கின்றார்கள். இவ்வாறான கூட்டங்களில் படையினருக்கு என்ன பங்கு என நான் கேட்டிருக்கின்றேன்.

உங்களுடைய கருத்தை எனக்குத் அறியத்தரவும்.

நன்றி

இங்ஙனம்,
அன்புடன்
நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்
முதலமைச்சர்
வடமாகாணம்

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றக் குழுக் கூட்டத்தில் விக்னேஸ்வரனின் கோரிக்கைக் கடிதம் சமர்ப்பிக்கப்பட்டமையை அடுத்து பல்வேறு எம்.பிக் களும் பிரதிபலித்த கருத்துகள், இந்த இரு தலைவர்களின் சந்திப்புக்குத் துளிர் விட்டிருந்த வாய்ப்பை அடியோடு கருகப் பண்ணி விட்டனவாம்.

வடக்கு, கிழக்கு அபிவிருத்திச் செயலணியைப் பகிஷ்கரிக்க வேண்டும் என்ற முதல்வரின் கோரிக்கையைத் தாமும் ஏற்க விரும்பவில்லை என்று கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தனே அந்தக் கூட்டத்தில் திட்டவட்டமாகவும் தெளிவாகவும் கூறிவிட்டாராம்.

அது, சம்பந்தன் – விக்கி இடையே இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தை அணுகுவது தொடர்பில் பாரிய இடைவெளி இருக்கின்றமையை அம்பலப் படுத்தி நிற்கின்றது என்றும் –

இந்தப் பின்புலத்தில் இனி இருவரும் சந்தித்துப் பேசி ஆகப்போவது ஒன்றுமேயில்லை என்றும் – அந்த வட்டாரங்கள் தெளிவுபடுத்தின.

"முதல்வர் விக்னேஸ்வரனின் அலுவலகத்தில் இருந்து ஒருவர் என்னுடன் தொடர்பு கொண்டு முதல்வர் ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் நிற்கின்றார் என்றும், என்னைச் சந்திக்க விரும்புகின்றார் என்றும் கூறினார். நான் ஆகட்டும் பார்க்கலாம் என்று பதிலளித்தேன்." – எனக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் கூறினராம் சம்பந்தன்.

*"ஐயா... நீங்கள் முதல்வர் விக்னேஸ்வரனைச் சந்திப்பதாயின் சந்திக்கலாம். அது உங்கள் விருப்பம். அதில் எங்கள் தலையீடுக்கோ, முடிவுக்கோ இடமில்லை. ஆனால், இப்படி செயலணி நடவடிக்கைகளைப் பகிஷ்கரிக்கும்படி அவர் விடுத்த கோரிக்கைக்கு நீங்கள் எழுத்தில் பதில் ஏதும் கூறத் தேவையில்லை. இதற்கு முன்னர் இந்த ஐந்து வருட காலத்தில் தமது அரசியல் நடவடிக்கைகள் குறித்து கட்சித் தலைமை என்ற வகையில் உங்களுடன் ஆலோசித்து அவர் நடந்திருந்தால் நீங்கள் அவரது இந்தக் கோரிக்கைக்கும் பதில் எழுதத்தான் வேண்டும். முந்தி அவர் அப்படி நடக்கவில்லை. உங்களையும் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களையும் புறம்தள்ளித்தான் நடந்தார். ஆகவே இப்போது நீங்கள் நாடாளுமன்றக் குழு சார்பில் அவருக்கு பதில் ஏதும் எழுத்தில் அளிக்கத் தேவையில்லை.*

*அவராகத் தேடி வந்து உங்களைச் சந்தித்தால் அவருக்கு இந்த முடிவைச் சொல்லுங்கள். அவரைத் தேடிச் சென்று அவரது கோரிக்கையை நாடாளுமன்றக் குழு நிராகரித்து விட்டது என்ற விவரத்தை நீங்கள் தெரிவிக்க வேண்டியதில்லை."* – என்று கூட்டத்தில் பங்குபற்றிய எம்.பிக்கள் பலர் ஒரு சேரப் பதிலளித்தனராம்.

இந்தப் பின்புலத்தில் சம்பந்தன் – விக்னேஸ்வரன் சந்திப்பு கடந்த ஓரிரு நாள்களில் இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்பட்ட சூழல் அடிபட்டுப் போய்விட்டது என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இனி இருவரும் தனித் தனி வழிதான் போலும்...!

-மின்னல்-

நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## இனி எதிரும் புதிருமான போக்கே

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்திக்கான ஜனாதிபதி செயலணியின் கூட்டத்திற்கு வருமாறு கட்சி பேதங்களைக் கடந்து அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களையும் நான் அழைத்துள்ளேன். இது, வடக்கு – கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்தியைத் துரிதப்படுத்தவும், ஜனாதிபதி செயலணியைப் பலப்படுத்துவதற்குமான முயற்சியாகும். அதில் அனைவரும் பங்கெடுக்க வேண்டும் என்று ஜனாதிபதி சிறிசேன யாழ்ப்பாணத்தில் வைத்து அழைப்பு விடுத்துள்ளார்.

வடக்கு, கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் – தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பிக்கள் உட்பட – அனைவருக்குமே இந்தக் கூட்டத்திற்கான அழைப்பு அனுப்பப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

நேற்று மாலை கொழும்பில் கூடிய கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு இது குறித்து விவாதித்துள்ளது.

இந்தச் செயலணி ஏற்கனவே ஒரு தடவை கூடி விட்டது. அது ஆரம்பத்தில் உருவாக்கப்பட்டபோது, தமிழ் மக்களின் தாயகமான வடக்கு, கிழக்கின் அபிவிருத்திக்கான அந்தச் செயலணியில் தமிழ் மக்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் எவரும் இருக்கவில்லை. ஆக, வடக்கு, கிழக்கு மாகாண சபைகளின் முதலமைச்சர்கள் மட்டுமே பதவி வழியாகச் சேர்க்கப்பட்டிருந்தனர். கிழக்கு மாகாண சபை ஏற்கனவே பதவிக் காலம் முடிந்து கலைந்து விட்டதால் அதன் முதலமைச்சர் இப்போது இல்லை.

எஞ்சியிருந்த வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரனும் அந்தச் செயலணியின் கூட்டத்தில் பங்குபற்றவில்லை. அந்தக் கூட்டத்தைத் தாம் பகிஷ்கரிக்கின்றார் எனத் தெரிவித்து அதற்கான காரணங்களையும் அவர் பகிரங்கப்படுத்தியிருந்தார்.

தமிழ் மக்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்றப் பிரதிநிதிகளோடு, அந்தந்தப் பிரதேச மாகாண சபையின் அமைச்சர்களும் அழைக்கப்படாமல் இப்படி அபிவிருத்திக்கான செயலணி என்ற பெயரில் கூட்டத்தைக் கூட்டுவது பெரும் அபத்தம் என்று அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

அப்படி அவர் சுட்டிக்காட்டிப் பகிஷ்கரித்து, பகிரங்கமாக அறிவித்து, அவர் அக் கூட்டத்தைப் புறக்கணித்து நின்றமையால் மக்கள் பிரதிநிதிகளை உதாசீனம் செய்து இந்தச் செயலணி கூட்டப்பட்டமை தவறு என்பது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு சுள்ளென உறைத்திருக்கும்போல.

முதல்வர் குறையாகச் சுட்டிக்காட்டிய விடயத்தைத் திருத்துமாற்போல இப்போது எல்லா எம்.பிமாருக்கும் இந்தக் கூட்டத்தில் பங்குபற்றுவதற்கான அழைப்பு விடுவிக்கப்பட்டிருப்பதாகத் தெரிக்கின்றது.

ஆனால், முதலமைச்சரின் சகபாடிகளான மாகாண அமைச்சர்களுக்கு இதற்கான அழைப்புக் கிடைத்ததோ தெரியவில்லை. ஆனாலும், இந்தச் செயலணி நடவடிக்கைகளில் முதலமைச்சர் பங்குபற்றமாட்டார் என்றே தெரிகின்றது.

இந்தச் செயலணியில் வடக்கு, கிழக்கு படைத் தளபதிகள் முதன்மைப் பிரதிநிதிகளாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

முதலமைச்சரைப் பொறுத்தவரை தமிழர் தாயகப் பிரதேச அபிவிருத்தி தொடர்பில் அவர் சில விடயங்களைத் தொடர்ந்து சுட்டிக் காட்டி வருகின்றார்.

அபிவிருத்தி என்ற மாயமானைக் காட்டி இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்ற சீதையைத் தென்னிலங்கை கவர்ந்து செல்வதற்கு இடமளிக்கக் கூடாது. அபிவிருத்தியை பிறகு பார்த்தாலும், நீதி, நியாயமான தீர்வைத் தமிழ் மக்களுக்குப் பெற்றுக் கொடுப்பதையே நாம் முன்னிலைப்படுத்த வேண்டும். தமிழர்களுக்குத் தீர்வைப் பெற்றுத் தருவோம் என்று கூறி, அதைக் காட்டி வாக்குகளைப் பெற்று, ஆட்சிப் பீடமேறிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் அவரது நல்லாட்சி அரசும், அதனைச் செய்யாமல், அபிவிருத்தி என்ற மாயமானைக் காட்டித் தமிழர்களை ஏமாற்றி விட்டுச் செல்வதற்குத் தமிழ் அரசியல்வாதிகள் துணைபோகவே கூடாது என்பது முதல்வரின் நிலைப்பாடு.

அத்தோடு, இந்தச் செயலணியில் படைத் தரப்பினரின் பங்களிப்பு அதிகம் இருக்கையில், அதை ஏற்று, அதில் பங்கேற்பது தமிழரின் அபிவிருத்தி மற்றும் சிவில் நிர்வாக விடயங்களில் படைத் தரப்பின் தலையீட்டை அங்கீகரிப்பதாகி விடும் என்பதே முதல்வரின் கணிப்பு.

ஆகவே, இந்த செயலணியைத் தமிழர் தரப்பு ஒட்டுமொத்தமாகப் பகிஷ்கரித்து, புறமொதுக்கி, அதனைப் பகிரங்கப்படுத்தி, ஒரு புறம் நல்லாட்சி அரசின் கபடத்தனத்தை அம்பலப்படுத்துவதற்கான ஒரு சந்தர்ப்பமாக இதைப் பயன்படுத்தவும் –

மறுபுறம், தமது ஆட்சியின் அந்தத்தில் இருக்கும் அதிகாரத் தரப்பினருக்கு இனப் பிரச்சினைத் தீர்வை இதய சுத்தியோடு, விரைந்து முன்வைப்பதற்கான ஒரு ‘செக் – மேட்’ நடவடிக்கையாக இந்த உதாசீனப்படுத்தலைப் பிரயோகிக்கவும் –

வேண்டும் என எதிர்பார்க்கின்றார் முதல்வர் விக்னேஸ்வரன் என்று தெரிகின்றது. அதனை அவர் எழுத்தில் கூட்டமைப்புக்கும் தெரியப்படுத்தியிருக்கின்றார்.

ஆனால், கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு முதல்வரின் கோரிக்கையை ஒரேயடியாக நிராகரித்துத் தூக்கிக் கடாசி விட்டது.

ஆக, முதல்வரும் கூட்டமைப்பு நாடாளுமன்ற அணியினரும் தனித் தனிப் பாதையில் வெவ்வேறாகப் பயணிக்க தீர்மானித்துவிட்டனர் என்பது கல்லில் எழுத்தாகத் தெளிவாகி விட்டது.

இனி என்ன? எதிரும் புதிருமான போக்குத்தான்.

# சிகரெட் விற்பனையை நிறுத்துவதில் யாழ்ப்பாண வர்த்தகர்கள் முதலிடம்

## நாடுமுழுவதும் 107 இடங்களில் விற்பனை நிறுத்தம்

சிகரெட் உள்ளிட்ட புகைப் பொருள்களின் பயன்பாட்டை முற்றிலும் ஒழிக்கும் விதமாக அரசு எடுத்த நடவடிக்கை காரணமாக நாட்டின் 107 நகரங்களில் (கிராம மட்ட நகரங்கள்) அவற்றின் விற்பனை நிறுத்தப்பட்டுள்ளது. அதில் யாழ்ப்பாண மாவட்டத்திலேயே அதிகமாக 22 நகரங்களில் புகையிலைப் பொருள்களின் விற்பனை நிறுத்தப்பட்டுள்ளது எனச் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நாடு முழுவதும் புகையிலைப் பொருள்களின் பயன்பாட்டுக்கு முற்றிலும் தடை விதிக்கும் விதமாகப் பொதுச் சுகாதார உத்தியோகத்தர்கள் ஊடாக முன்னெடுக்கப்பட்ட விழிப்பூட்டல் செயற்றிட்டத்தின் மூலம் இந்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

முதல்கட்டமாக 107 நகரங்களில் சிகரெட் உள்ளிட்ட புகையிலைப் பொருள்களின் விற்பனை கடந்த செவ்வாய்கிழமை முதல் முற்றாக நிறுத்தப்பட்டுள்ளன.

இதற்கு பொதுமக்கள் மற்றும் வியாபாரிகள் தரப்பில் இருந்தும் முழு ஒத்துழைப்பு வழங்கப்பட்டுள்ளது என சுகாதார அமைச்சர் ராஜித சேனரத்ன தெரிவித்தார்.

மேலும் 2019ஆம் ஆண்டுக்குள் இதனை 200 நகரங்களாக விரிவுபடுத்துவதுதான் தனது இலக்கு என்றும் அவர் கூறினார்.

தற்போது, யாழ்ப்பாணத்தில் 22 நகரங்கள், மாத்தறையில் 17 நகரங்கள், குருநாகலில் 16 நகரங்கள் உள்ளிட்ட மொத்தமுள்ள அனைத்து மாவட்டங்களைச் சேர்த்து 107 நகரங்கள் இந்த முயற்சியில் களமிறங்கியுள்ளன.

அதுமட்டுமல்லாமல் புகையிலைப் பொருள்கள் மீதான வரி 90 சதவீதம் அதிகரிக்கப்பட்டுள்ளது. புகையிலைப் பொருள்கள் மீது 80 சதவீத அளவுக்கு அதன் தீமையை விளக்கும் விதமாக வாசகங்கள் மற்றும் ஒளிப்படங்கள் அமைய வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது.

பாடசாலை மற்றும் பொது இடங்களில் இருந்து 100 மீற்றர் சுற்றளவில் விற்பனை செய்யவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

மேலும் 2020ஆம் ஆண்டுக்குள் நாடு முழுவதும் புகையிலை உற்பத்திக்கு நிரந்தர தடை விதிப்பது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது என்று சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

# தையிட்டியில் திஸ்ஸ விகாரை அமைக்க ஆளுநரால் அடிக்கல்



யுத்தகாலத்தில் அழிவடைந்த காங்கேசன்துறை தையிட்டி திஸ்ஸ விகாரையை மீள்நிர்மாணம் செய்வதற்கான நிகழ்வு பாதகட விமலஞான தேரர் தலைமையில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்றது.

இதில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே கலந்து கொண்டு விகாரை அமைப்பதற்கான அடிக்கல்லை நாட்டினார்.

1946ஆம் ஆண்டு எழுதப்பட்ட உறுதி அடிப்படையில் பாதகட விமலஞான தேரர் இந்த விகாரைக்குரிய காணியை இனங்கண்டு அதனை மீள நிர்மாணிப்பதற்கான பணிகளை ஆரம்பித்துள்ளார்.

இந்த விகாரை பல நூற்றாண்டுகளாக இப்பகுதியில் இருந்து வந்துள்ளது எனவும் 1954.05.17 ஆம் திகதி இறுதியாக வெசாக் பண்டிகை கொண்டாப்பட்டுள்ளது எனவும் இதன் பின்னர் நாட்டில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தத்தினால் இந்த விகாரை முற்றாக அழிவடைந்திருந்தது கூறப் பட்டது. அதனை மீள் நிர்மாணம் செய்யும் பணிக்கான ஆரம்ப வேலை நேற்றுமுன்தினம் சுப நேரத்தில் ஆரம் பித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் ஆளுநரின் செயலாளர் எல்.இளங்கோவன், பிரதியேக செயலர் ஜே.எம்.சோமசிறி, கிராமசேவையாளர், இராணுவ மற்றும் பொலிஸ் அதிகாரிகள் பலர் கலந்து கொண்டிருந்தனர். (ஐ)

# விளையாட்டு மைதானப் பராமரிப்புக்கு புல் வெட்டும் இயந்திரங்கள் வழங்கல்




வவுனியா, ஓக 24

வடக்கு மாகாண சபை உறுப்பினரும் முன்னாள் சுகாதார அமைச்சருமாகிய மருத்துவர் பத்மநாதன் சத்தியலிங்கத்தின் 2018 ஆம் ஆண்டுக்கான மாகாண குறித்தொதுக்கப்பட்ட கொடை நிதியில் கொள்வனவு செய்யப்பட்ட விளையாட்டுமைதானப் பராமரிப்பிற்கான புல்வெட்டும் இயந்திரங்களும், சுயதொழில் முயற்சியாளர்களுக்கான தையல் இயந்திரங்களும் நேற்றுமுன்தினம் வவுனியாவில் வழங்கப்பட்டன.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மாவட்ட அலுவலகமான தாயகத்தில் நடைபெற்ற நிகழ்வில் புரட்சி வி.க, புளியங்குளம் ஈஸ்வரன் வி.க, சாஸ்திரிகூழாங்குளம் யங்பைற் வி.க., பறன்நாட்டினகல் மலைமகள் வி.க, சாம்பல்தோட்டம் யுரேனஸ்வி.க., இசமளங்களம் லயன்ஸ் வி.க., பூந்தோட்டம்சக்திவி.க., சிதம்பரபுரம் யுனைற்றட்வி.க., கனகராயன்குளம். ஸ்கைபேட் வி.க., தறணிக்களம் காத்தார் சின்னக்குளம் அ.த.க. பாடசாலை ஆகிய 10 நிறுவனங்களுக்கு மைதானப் பராமரிப்பிற்காக புல்வெட்டும் இயந்திரங்களும், 03 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவியாக தையல் இயந்திரங்களும் வழங்கப்பட்டன.

(ஐ)

# 11 மாவட்டங்களில் வறட்சி

கொழும்பு, ஓக 24

நாட்டில் 11 மாவட்டங்களில் நிலவும் வறட்சியால், 5 இலட்சத்துக்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

61 பிரதேச செயலாளர் பிரிவுகளுக்குட்பட்ட மக்கள், வறட்சியால் குடிதண்ணீர்த் தட்டுப்பாட்டை எதிர்நோக்கியுள்ளதுடன், பயிர்ச் செய்கையும் பாதிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, குருநாகல், பொலனறுவை, அநுராதபுரம், அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, புத்தளம் ஆகிய மாவட்டங்களில் தற்போது வறட்சி நிலவுகிறது.

குடிதண்ணீர்ப் பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ள மக்களுக்கு, பவுசர்கள் மூலம் நீரைப் பெற்றுக் கொடுக்க இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் ஊடாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நாளை

25.08.2018
சனிக்கிழமை

நட்சத்திரம் : திருவோணம் மு.ப.11.29
திதி : சதுர்த்தசி பி.ப. 4.02 வரை
சுபநேரம் : 3.05 – 4.35 வரை
இராகுகாலம் : 9.05 – 10.35 வரை

# நல்லிணக்கத்துடன் வாழ வேண்டும் என்பதை வெளிப்படுத்தும் செம்மலை மகாவித்தியாலய மாணவர்களின் புகைப்படங்கள்!







இலங்கையில் இன மத பேத மின்றி அனைத்து மக்களும் நல் லிணக்கத்துடன் வாழ வேண்டும் என்பதை செம்மலை மகாவித்தி யாலய மாணவர்களின் புகைப் படங்கள் வெளிப்படுத்தியுள்ளன.

முல்லைத்தீவு செஞ்சிலுவை சங்க மண்டபத்தில் சமுதாய அபி விருத்தி நிறுவனத்தின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட சம யங்கள் ஊடாக நல்லிணக்கத்தை வெளி படுத்தும் புகைப்பட கண் காட்சி போட்டியின் போது செம் மலை மகா வித்தியாலய மாணவர்க ளின் புகைப்பட ங்கள் காட்சிப்படுத் தப்பட்டுள்ளன.

இது தொடர்பில் செம்மலை மகா வித்தியாலய அதிபர் கருத்து தெரிவிக்கையில்–

முல்லைத்தீவு – செம்மலை மகாவித்தியாலயம் கடந்த கால யுத்தத்தின் போது கடும் சேதங்க ளுக்கு உள்ளாகியிருந்தது. தற் பொழுது புனரமைப்பு செய்யப்பட்ட நிலையில் இந்த பாடசாலையில் போரினால் அதிகம் பாதிக்கப்பட்ட மாணவர்களே கல்வி கற்று வருகின் றனர்.

இந்த நிலையில் கடந்த கால கசப்பான நினைவுகளின் மத்தியில் மாணவர்கள், நாட்டு மக்கள் அனை வரும் நல்லிணக்கத்துடன் வாழ வேண்டும் என்பதை புகைப்படங் களின் ஊடாக வெளிப்படுத்தியுள்ள னர். இதற்கு சுந்தர்ப்பம் வழங்கிய சமு தாய அபிவிருத்தி நிறுவனத்திற்கு நன்றிகள் என்று குறிப்பிட்டுள்ளார்.

முல்லைத்தீவு செஞ்சிலுவை சங்க மண்டபத்தில் சமுதாய அபிவி ருத்தி நிறுவனத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட சம யங்கள் ஊடாக நல்லிணக்கத்தை வெளிப்படுத்தும் புகைப்பட கண் காட்சி போட்டியின் போது செம் மலை மகாவித்தியாலய மாணவர் களின் புகைப்படங்கள் முதல் இடத்தை பெற்றுக்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தங்க நகைகளை கடத்தி வந்த பெண்கள் நால்வர் கட்டுநாயக்கவில் கைது!

கட்டுநாயக்க விமான நிலையத்தில் கொழும்பை சேர்ந்த 4 பெண்கள் நேற்று முன்தினம் மாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

சட்டவிரோதமாக இலங்கைக்கு தங்க நகை கொண்டு வந்த விமான பயணிகள் நான்கு பேர் சுங்கப் பிரிவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள் ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் பிலியந்தலை, பத்தரமுல்லை, முல்லேரியா மற்றும் பம்பலப்பிட்டி பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாவர். இவர்கள் 61, 67, 53 மற்றும் 46 வயதுடையவர்கள் என தெரியவந்துள்ளது.

சிங்கப்பூரில் இருந்து இந்தியா சென்று இந்தி யாவின் மும்பை நகரில் இருந்து இலங்கைக்கு வந்த பெண்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஜெட் எயார்வேஸ் விமான சேவைக்கு சொந்த மான 9 W 255 ரக விமானத்தில் இவர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

இந்த பெண்கள் தாம் அணிந்திருந்த ஆடையில் யாருக்கும் தெரியாத வகையில் இந்த நகைகளை மறைத்துக் கொண்டு வந்துள்ளனர். எனினும் விமான நிலையத்தை விட்டு வெளியேறும் சந்தர்ப் பத்தில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## சிகரெட் விற்பனையைக் கைவிட வர்த்தகர்கள் தீர்மானம்!

இலங்கையில் சுமார் 100 நகரங்களில் சிகரெட் விற்பனையில் இருந்து விலகிக்கொள்ள வர்த்தகர்கள் தீர்மானித்துள்ளனர்.

இந்த தகவலை சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன வெளியிட்டுள்ளார்.

சுகாதார அதிகாரிகள் நாடளாவிய ரீதியில் மேற்கொண்ட நிகழ்ச்சித்திட்டங்களின் பின்னர் வர்த்தகர்கள் இந்த முடிவை எடுத்துள்ளனர் என அமைச்சர் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது தெரிவித்தார்.

இதில் யாழ்ப்பாணத்தின் 22 நகரங்கள், மாத்தறையின் 17 நகரங்கள், குருநாகலின் 16 நகரங்களும் உள்ளடங்குகின்றன என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இந்த நகரங்கள் 2019 ஆம் ஆண்டு வரும்போது 200ஆக உயரும் என்ற நம்பிக்கையையும் அமைச்சர் வெளியிட்டார்.

இதேவேளை 2020ஆம் ஆண்டளவில் புகைப்பிடிக்கும் உற்பத்தியை நிறுத்த அரசு நடவடிக்கை எடுக்கவுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

## இலங்கையில் மோட்டார் வாகனங்களின் விலை மேலும் அதிகரிக்கும்: வாகன இறக்குமதியாளர்கள்

கொழும்பு, ஓக.24

இலங்கையில் மோட்டார் வாக னங்களின் விலை மேலும் அதிகரிக் கும் என வாகன இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

சமகால அரசால் வெளியிடப்பட் டுள்ள புதிய வர்த்தமானி அறிவித்தலின் படி இந்த நிலை ஏற்பட்டுள்ளது என அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

புதிய வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய, முன்னர் மோட்டார் வாகனங்க ளுக்கு 4 வருடங்களாக செலுத்தப்பட்ட வரிப்பணம் தற்போது ஒரே நேரத்தில் செலுத்த நேரிட்டுள்ளது என இறக்குமதி யாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அதற்கமைய 1800 சி.சி. க்கு அதி கமான பெற்றோல் வாகனம், 2300 சி.சி. க்கு அதிகமான டீசல் வாகனங்கள் மற்றும் 200 கிலோ வோட் மின்சார வாகனங்களுக்கு இந்த நிலை ஏற்பட் டுள்ளது.

இதுவரையில் இந்த மோட்டார் வாகனங்களுக்காக அறவிடப்படும் வரிப்பணம் முதல் வருடத்தில் 175,000 ரூபாவில் இருந்து ஆரம்பித்து வருடா வருடம் குறையும் வகையில் காணப் படும்.

புதிய சட்டத்திற்கமைய 7 வருடங் களுக்காக வரிப்பணம் ஒரே நேரத்தில் செலுத்த நேரிட்டமையால் அந்த வரிப்பணத்தை வாகன விலையுடன் இணைப்பதற்கு தீர்மானித்துள்ளோம் என இறக்குமதியாளர்கள் தெரிவித்துள் ளனர்.

அண்மையில் இயந்திர திறன் குறைந்த வாகனங்களுக்கு அரசால் பெருமளவு வரிப்பணம் அதிகரிக்கப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தெற்கு அதிவேக வீதியில் விபத்து; அந்த இடத்திலேயே சாரதி உயிரிழப்பு!

தெற்கு அதிவேக வீதியில் இடம் பெற்ற வாகன விபத்தொன்றில் வாக னச் சாரதி சம்பவ இடத்திலேயே பலி யாகியுள்ளார்.

தெற்கு அதிவேக வீதியின் சூரிய வெவ பகுதியிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த வீதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் திருத்தப்பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த ஜே.சி.பி. இயந்திர சாரதி யொருவர் மதிய உணவிற்காக மோட் டார் சைக்கிளில் சென்று வேலைத் தளதிற்கு திரும்பிக்கொண்டிருக்கும் போது எதிரே வந்த பௌசர் வாகனத் துடன் மோதுண்டுள்ளார். விபத்தின் போது சாரதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இந்த விபத்தில் பலியானவர் மஸ்கெலியா பிரதேசத்தைச் சேர்ந்த 33 வயதுடைய சமிந்த குமாரசிரி என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இந்நிலையில் இந்த பௌசர் வாக னத்தின் சாரதி தப்பி சென்றுள்ள நிலையில் அவரை தேடும் பணிகளில் பொலிஸார் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.

# அமெ., ஜப்பான் போர்க் கப்பல்களை கொள்வனவு செய்கிறது இலங்கை

அமரிக்கா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளிடம் இருந்து போர்க்கப்பல்களை கொள்வனவு செய்யவுள்ளது.

–இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேன தெரிவித்துள்ளார்.

இலங்கையின் அதிகாரிகள் இது தொடர்பில் அமெரிக்கா வில் பேச்சுகளை இந்த வாரத்தில் நடத்தியுள்ள னர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இலங்கைக்கு வந்துள்ள ஜப்பானிய பாதுகாப்பு அமைச்சரும் இலங்கைக்கு இரண்டு போர்க்கப்பல்களை வழங்க உறுதியளித்துள்ளார் என்றும் ஜனாதிபதி தெரிவித் துள்ளார்.

## செங்கலடி நகரை அபிவிருத்தி செய்யும் விசேட கூட்டம்!

மட்டக்களப்பு – செங்கலடி நகரை அபிவிருத்தி செய்யும் விசேட கூட்டம் ஒன்று நடைபெற் றுள்ளது.

இந்த கூட்டம் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் எம்.உதய குமார் தலைமையில் மட்டக் களப்பு மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

செங்கலடி நகரில் அமைந் துள்ள பொதுச்சந்தை பழமை யடைந்து மிகவும் மோசமான நிலையில் உள்ளதால் இது தொடர்பாக அமைச்சர் மனோ கணேசனின் கவனத்திற்கு நாடா ளுமன்ற உறுப்பினர் எஸ்.வியா ழேந்திரன் கொண்டு சென்ற மையை அடுத்து இந்த சந் தையை நவீன வசதிகளுடன் அமைப் பதற்கு இரண்டு கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட் டுள்ளது.

இந்த சந்தை தொகுதியை



அமைப்பது தொடர்பாகவும், செங்கலடி நகரில் பஸ் நிலையம் ஒன்றை அமைப்பது தொடர்பாக வும், செங்கலடி நகர்ப்பகுதியில் எதிர்நோக்கப்படும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டுள்ளது.

நகரில் பல வியாபார நிலை யங்கள் பொதுச்சந்தை என்பன உள்ள போதிலும் குடிதண்ணீரை பெறுவதிலும் இயற்கை கடன் களை மேற்கொள்வதற்கும் நக ருக்கு வருவோர் பெரும் பிரச்சி னைகளை எதிர்கொள்கின்றனர் என்றும் அவற்றை நிவர்த்தி செய்வது தொடர்பிலும் இங்கு ஆராயப்பட் டுள்ளது.

செங்கலடி நகரினை அபிவிருத்திசெய்யும் வகையில் நகரத்தில் மேற் கொள்ளப்பட வேண்டிய தேவையான திட்டங்களை தயாரிக்கும் நடவடிக்கை களை மேற்கொள்ளு மாறு பிரதேச சபைக்கு பணிப்பு ரைகள் விடுக்கப்பட்டன.

இந்த கூட்டத்தில் மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசியக் கூட்ட மைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரன், மட்டக்களப்பு மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர் திருமதி பி.புண்ணிய மூர்த்தி, ஏறாவூர்ப்பற்று பிரதேச சபையின் தவிசாளர், பிரதி தவிசாளர், செயலாளர் மற்றும் செங்கலடி நகர வர்த்தக சங்க பிரதிநிதிகள் உட்படபலர் இக்கூட்டத் தில் கலந்து கொண்டிருந்தனர்.

## மலையகத்தில் வாழும் தமிழ் மக்களின் இருட்டறை வாழ்வுக்கு முற்றுப் புள்ளி!

### மத்திய மாகாண உறுப்பினர் ஸ்ரீதரன்

அமைச்சர் திகாம்பரத்தினால் மலையகத்தில் முன்னெடுக்கப்படு கின்ற தனி வீட்டுத்திட்டமானது மலையகத் தமிழ் மக்களின் இருட் டறை வாழ்வுக்கு முற்றுப் புள்ளி வைக்கத் தொடங்கியுள்ளது என்று மத்திய மாகாணசபை உறுப்பினர் சோ. ஸ்ரீதரன் தெரிவித்துள்ளார்.

தனி வீடமைப்பு திட்டத்தில் வீடுக ளுக்கான திறப்புகளை நேற்றைய தினம் வழங்கி அந்த நிகழ்வில் உரையாற்றும் போதே இதை குறிப் பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

ஹட்டன் பிரதேசத்திலுள்ள பின் தங்கிய பிரதேசங்களில் பூலோரன்ஸ் தோட்டமும் ஒன்றாகும். இந்தத் தோட்டத்தில் உரிய வீடுகள் இன்றி பல குடும்பங்கள் பல்வேறு அசௌ கரியங்களை எதிர்நோக்கி வரு கின்றன. இவர்களின் நலனை கருத்தில் கொண்டு அமைச்சர் திகாம்பரம் முதற்கட்டமாக இந்த தோட்டத்துக்கு 10 வீடுகளை அமைத் துக் கொடுத்துள்ளார்.

இன்று (நேற்று) முதல் உங்கள் இருட்டறை வாழ்வுக்கு விமோசனம் கிடைத்துள்ளது. நிலத்துக்கும் வீட்டுக் கும் உரிமையுள்ள குடும்பத்தின ராக மாறியுள்ளீர்கள்.

சொந்த நிலத்தையும் சொந்த வீட்டையும் பெற்று வருகின்ற எமது மக்கள் இனிமேல் தோட்ட நிருவா கத்தை நம்பியிருக்க வேண்டிய தில்லை. சுயமாக செயற்பட்டு தமது வாழ்வை வளப்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் மத்திய மாகாணசபை உறுப்பினர் சோ. ஸ்ரீதரன் தெரிவித்துள்ளார்.

# முதலீடுகள் தொடர்பான விமர்சனங்களை மறுக்கிறார் சீனாவுக்கான இலங்கை தூதர்!

கொழும்பு, ஓக.24

சீனா, இலங்கையில் மேற்கொள்ளும் முதலீடுகள் தொடர்பில் வெளியான விமர்சனங்களை சீனாவுக்கான இலங்கை தூதர் மறுத்துள்ளார்.

இலங்கை தூதரான கருணாசேன கொடித்துவக்கு பீஜிங்கில் வைத்து இந்த மறுப்பை வெளியிட்டுள்ளார்.

எந்தவொரு தருணத்திலும் இலங்கை, சீனாவின் கடனைப்பெற்றுக்கொள்ளவேண்டும் என்று பல வந்தப்படுத்தப்படவில்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

அம்பாந்தோட்டை துறைமுகத்தில் கூட இலங்கையின் கோரிக்கையின் பேரிலேயே சீனா முதலீடுகளை மேற்கொண்டது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

மேற்குலக நாடுகளும் அதிகாரிகளும் இலங்கையில் சீனாவின் முதலீடுகள் தொடர்பில் பல்வேறு விமர்சனங்களை வெளியிட்டு வருகின்றனர். சீனா, இலங்கைக்கு கடன்களை வழங்கி ஆதிக்க நிலையை ஏற்படுத்தியுள்ளதாக அந்த குற்றச் சாட்டுக்கள் தொடர்கின்றன.

இந்தநிலையிலேயே இலங்கையின் சீனாவுக்கான தூதுவர் தமது கருத்தை வெளியிட்டுள்ளார்.

# கொழும்பு சர்வதேச பாடசாலைக்கு கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயம்!



கொழும்பு, ஓக.24

கொழும்பு மாகோலயில் அமைந்துள்ள யொசிடா சோகன்ஜி சர்வதேச பாடசாலைக்கு கல்வி இராஜாங்க அமைச்சர் வி.இராதாகிருஷ்ணன் விஜயம் செய்துள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற இந்த சந்திப்பில் மலையக மாணவர்களை இப்பாடசாலைக்கு உள்வாங்குவது தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

வணக்கத்திற்குரிய பனகள உபதிஸ்ஸ பாடசாலையின் தலைவராக செயற்படுவதுடன் இப்பாடசாலை ஜப்பானிய அரசின் நிதி உதவியுடன் செயற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பாக மிக விரைவில் அமைச்சில் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ள உள்ளதாகவும் வணக்கத்திற்குரிய பனகள உபதிஸ்ஸ தேரர் நம்பிக்கை தெரிவித்துள்ளார். (க)

# தினசரி ராசி பலன் (24.08.2018)

2018 ஆம் ஆண்டு விளம்பி வருடம் ஆவணித்திங்கள் 8ஆம் நாள் வெள்ளிக்கிழமை திரியோதசித்திதி பகல்12.50 மணி வரை பின்னர் சதுர்த்தசி. நட்சத்திரம்: உத்தராடம் காலை 6.47 மணி வரை பின்னர் திருவோணம். சித்தயோகம் காலை 6.47 மணி வரை பின்னர் அசுபயோகம்.

**ராகுகாலம்** - பகல் 10.40 மணி முதல் 12.12 மணி வரை.

**சுபநேரம்** - காலை 6.04 மணி முதல் 7.34 மணி வரை.

**திவசம் செய்ய வேண்டிய திதி** - ஆடி மாத வளர்பிறை சதுர்த்தசி.

**பிறந்த நட்சத்திர வழிபாடு**- திருவோணம்.

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம்** சமபலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு சுமாராக இருக்கும். எடுக்கும் முயற்சிகள் தடைப்படும். தேக சுகக் குறைவால் மருத்துவச் செலவுகள் உண்டாகும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் குறையும்.

**ரிஷபம்** சலனம் மிகுந்த நாள். பணவரவு குறையும். மனதில் சஞ்சல நிலை காணப்படும். உத்தியோகத்தில் வெறுப்பும், கவனக் குறைவும் உண்டாகும். வியாபாரத்தில் தொய்வு நிலை காணப்படும்.

**மிதுனம்** குழப்பமான நாள். பாணவரவு குறையும். மனதில் கவலை, யோசனை உண்டாகும். வியாபாரத்தில் போட்டிகள் அதிகரிப்பால் வருமானம் குறையும். உறவினர்களால் வீண் தொல்லைகள் உண்டாகும்.

**கடகம்** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் சுமாராக இருக்கும். செலவினங்கள் அளவுக்கதிகமாகும். தேக சுகம், குடும்ப சுகம் சீராக இருக்கும். வியாபாரம் ஏற்றமும், இறக்கமுமாக இருக்கும்.

**சிம்மம்** நன்மையான நாள். பணம் தாராளமாகப் புழங்கும். குடும்ப ஒற்றுமை பலப்படும். எண்ணிய கருமங்கள் துல்லியமாய் நிறைவேறும். உற்றார், உறவினருடன் அனுகூலமான சூழ்நிலை அமையும்.

**கன்னி** மேன்மையான நாள். பொருளாதாரம் ஏற்றம் அடையும். குடும்ப ஒற்றுமை மேம்படும். குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும். தொழில், வியாபாரத்தில் லாபத்தைப் பெறுவார்கள்.

**துலாம்** சஞ்சலமான நாள். பணவரவு குறையும். எந்தவொரு காரியத்திலும் சிந்தித்து செயல்படுவதே நல்லது. தேவையற்ற அலைச்சல், மனச் சஞ்சலம் அதிகரிக்கும். உடல் ஆரோக்கியம் பாதிப்படையும்.

**விருச்சிகம்** விருத்தியான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். குடும்பத்தில் நல்லுறவு வளரும். திருமணமாகாதவர்களுக்கு நல்ல வரன் கிடைக்கப் பெறும். தொழில் வியாபாரம் முன்னேற்றம் அடையும்.

**தனுசு** சுபீட்சமான நாள். தாராள தனவரவுகள் உண்டாகும். குடும்ப ஒற்றுமை சிறப்பாக இருக்கும். பொன், பொருள் சேரும். அசையாச் சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டாகும்.

**மகரம்** ஆக்கபூர்வமான நாள். பணம் சரளமாகப் புழங்கும். குடும்பத்தில் அந்நியோன்யம் அதிகரிக்கும். கொடுக்கல், வாங்கலில் சரளமான நிலை இருக்கும். உடலாரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

**கும்பம்** துன்பமான நாள். உடலாரோக்கியம் பாதிப்படையும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகளால் நிம்மதி குறையும். தேவையற்ற விரயம் உண்டாகும். நம்பியவர்கள் துரோகம் செய்வார்கள்.

**மீனம்** அதிர்ஷ்டமான நாள். தனலாபம் பெருகும். குடும்பத்தில் அனைத்து தேவைகளும் பூர்த்தியாகும். எடுக்கும் முயற்சிகள் வெற்றி தரும். புதிய வீடு, வாகன வசதிகள் பெருகும்.

சந்திராஷ்டம நாள்; **மிருகசீரிடம் 3 ஆம், 4ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1ஆம், 2ஆம், 3ஆம் பாதங்களில் பிறந்தோர் சுப கருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.**

# ரயிலுடன் மோதியது ஓட்டோ: சாரதி படுகாயம்!



கட்டுநாயக்க ரயில் நிலையத்திற்கும் கட்டுநாயக்க அபிவருத்தி வலய ரயில் நிலையத்திற்கும் இடைப்பட்ட ரயில்கடவையில் சிற்றுண்டி விற்பனையில் ஈடுபடும் ஓட்டோ ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

நேற்றுக் காலை 6 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. புத்தளத்தில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த ரயிலிலேயே இவ்வாறு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ரயில் கடவையில்சமிக்ஞை ஒலி எழுப்பப்பட்ட போதும் ஓட்டோ சாரதியின் கவனயீனத்தால் இவ் விபத்து நேர்ந்துள்ளது என விபத்தை அவதானித்தோர் தெரிவித்துள்ளனர்.

இதன்போது பலத்த காயங்களுக்கு உள்ளான ஓட்டோ சாரதி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்தை அடுத்து நேற்றுக் காலை புத்தளத்தில் இருந்து கொழும்பு நோக்கிய அனைத்து ரயில் சேவைகளும் தாமதமாகியமை குறிப்பிடதக்கது.

# மஹிந்தானந்த அளுத்கமகேவுக்கு வெளிநாட்டுக்குச் செல்ல அனுமதி



நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகேவுக்கு வெளிநாடு செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சீனாவில் நடைபெறவுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான பயிற்சி பட்டறையில் கலந்துகொவதற்காக வெளிநாடு செல்லவே கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சம்பத் அபேகோன் மூலம் இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அமைச்சராக இருந்த காலப்பகுதியில் முறையற்ற விதத்தில் பணத்தைப் பயன்படுத்தி பொரளை பகுதியில் வீடொன்றை பெற்றுக்கொண்டமை தொடர்பில் மஹிந்தானந்த அலுத்கமகேவிற்கு எதிராக வழக்குத் தொடரப்படுகின்றது.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வேளையில் பிரதிவாதியின் சட்டத்தரணியால் முன்வைக்கப்பட்ட வெளிநாடு செல்வதற்கான கோரிக்கைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி எதிர்வரும் மாதம் 9 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை மஹிந்தானந்த அலுத்கமகேவுக்கு வெளிநாடு செல்ல அனுமதி வழங்கிய நீதிபதி இந்த வழக்கு ஒக்டோபர் மாதம் 31 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என உத்தரவிட்டுள்ளார்.

# நல்லூர் ஆலய சூழலில் இன்று

## துர்க்கா மண்டபத்தில்

நல்லூர், ஓக.24

இலங்கை இளங்கலைஞர் மன்றம் நல்லூர்க் கந்தனின் உற்சவ காலத்தையொட்டி, தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடத்தும் தெய்வீகஇசையரங்கில்–

நல்லூர் துர்க்கா தேவி மண்டபத்தில் 6.45 - 8.45 மணி வரை நடைபெற்று வருகிறது.

இன்றைய இசைக் கச்சேரியில் முதலாவதாக –

பாட்டு:புண்ணியாசெல்வ முருகானந்தம், வயலின்: அ.ஜெயராமன், மிருதங்கம்: சதா.வேல்மாறன், கெஞ்சிரா: க.நந்தகுமார்.

இரண்டாவது இசைக் கச்சேரியில் –

பாட்டு:தர்ஷினி அருணானந்தம், வயலின்: எஸ். தியாகரன், மிருதங்கம்: வை.வேணிலான், கனடம்: மு.சுலக்சன், கெஞ்சிரா: கி.அனந்த கோபன்.

## ஆதீன மண்டபத்தில்

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில், நல்லூர் மகோற்சவத்தை முன்னிட்டு, நல்லை ஆதீன மண்டபத்தில் நடைபெறும் கந்த புராண எழுச்சி மற்றும் அருள் நெறி விழாவில் –

இன்று வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணி முதல் 8.30 மணி வரையான நிகழ்வில் உடுவில் கலாசார உத்தியோகத்தர் பொன்.சக்திவேல் 'நீதியால் உலகு அளிப்பதே அரசர் தம் நெறியே" என்ற தலைப்பில் அருளுரை ஆற்றுவார். (இ)

# என்டர்பிறைஸ் ஸ்ரீலங்கா கண்காட்சி எதிர்வரும் புதன்கிழமை!

என்டர்பிறைஸ் ஸ்ரீலங்கா கண்காட்சி எதிர்வரும் 29 ஆம் திகதி பிரதமர் ரணில் விக்ரம சிங்க தலைமையில் திறந்து வைக்கப் படவுள்ளது.

தேசப்பற்றுமிக்க புரட்சியின் மூலம் அபிவிருத்திக்கான போராட்டம் என்பது இதன் தொனிப் பொருளாகும்.

நாட்டை அபிவிருத்தி செய்யும் போராட்டம் மொனராகலையில் இருந்து ஆரம்பிக்கப்படும் என்று அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே அமைச்சர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

கண்காட்சியின் மூலம் வெல்லஸ பிரதேசம் மீண்டும் உயிரூட்டப்படும் என்று அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

இந்தக் கண்காட்சி மூன்று நாள்களுக்கு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 5,000 கண்ணீர் புகைக் குண்டுகளை இறக்குமதி செய்துள்ள பொலிஸார்!

கொழும்பு, ஓக. 24

இலங்கை பொலிஸார் கண்ணீர் புகைக் குண்டுகளை இறக்குமதி செய்துள்ளனர்.

நாட்டில் இடம்பெற்று வரும் போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்களை கட்டுப்படுத்தும் நோக்கில் கலகத் தடுப்புப் பொலிஸார், கண்ணீர் புகைக் குண்டுகளை இறக்குமதி செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது இருப்பில் உள்ள கண்ணீர் புகைக் குண்டுகளுக்கு மேலதிகமாக சுமார் 5000 கண்ணீர் புகைக் குண்டுகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன என உயர் பொலிஸ் அதிகாரியொருவர் கொழும்பு பத்திரிகையொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

கண்ணீர் புகைக் குண்டுகளுக்கு மேலதிகமாக முகத்தை மூடக் கூடிய நவீன ரக தலைக்கவசங்கள் சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

இலங்கையில் பொலிஸார் பயன்படுத்தப்படும் மரத்திலான பெட்டன்களுக்கு பதிலாக இறப்பர் பெட்டன்களும் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# இராணுவத்தின் மனிதாபிமான நடவடிக்கைக்கு சர்வதேச செஞ்சிலுவை சங்கம் ஒத்துழைப்பு



இலங்கை இராணுவத்தின் மனிதாபிமான நடவடிக்கைகளுக்கு தமது முழுமையான ஒத்துழைப்பை வழங்குவோம் எனச் சர்வதேச செஞ்சிலுவை சங்கம் தெரிவித்துள்ளது.

சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் இலங்கைக்கான புதிய தலைவர் லூக்காஸ் பெட்ரிடிஸ், இலங்கையில் ஒகஸ்ட் 6 ஆம் திகதியன்று தமது கடமைகளை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றார்.

இந்த நிலையில், சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் இலங்கைக்கான புதிய தலைவர், இராணுவத் தளபதி லெப். ஜெனரல் மகேஷ் சேனநாயக்கவை கடந்த செவ்வாய்க்கிழமை சந்தித்துள்ளார்.

இதன்போதே அவர் இந்த உறுதிமொழியை வழங்கினார் என இராணுவம் தெரிவித்துள்ளது.

இலங்கை இராணுவத்தினரால் வடக்கு, கிழக்கில் மக்களுக்காக முன்னெடுக்கப்படும் சுகாதார மற்றும் வாழ்வாதார அபிவிருத்தி உதவிகள், விவசாய உதவித் திட்டங்கள் குறித்து சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் இலங்கைக்கான புதிய தலைவருக்கு விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் எதிர்காலத் திட்டங்களுக்கு இலங்கை இராணுவம் ஆதரவளிக்கும் என்றும் இராணுவத் தளபதி இதன்போது உறுதியளித்துள்ளார்.

# இலங்கையில் கைத்தொலைபேசி பாவனையாளருக்கு எச்சரிக்கை

## அழைப்புகள் தொடர்பில் அவதானமாக இருங்கள்!

கொழும்பு, ஓக. 24

இலங்கையில் கைத்தொலைபேசி பாவனையாளர்களுக்கு விசேட எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. தொலைபேசியில் வரும் வித்தியாசமான அழைப்புகள் தொடர்பில் அவதானமாக இருக்குமாறு பொது மக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சமகாலத்தில் உலகம் முழுவதும் வாழும் மக்களுக்கு புதிய தொழில்நுட்பத்திலான கையடக்க தொலைபேசியைப் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்நிலையில் தமக்கு அறிந்த இலக்கத்தில் இருந்து வரும் தொலைபேசி அழைப்புகளுக்கு நாம் நிச்சியம் பதிலளிப்போம். எனினும் தற்போது புதிய ஏமாற்று நடவடிக்கை ஒன்று முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இணைய வசதி ஊடாக நமது தொலைபேசி இலக்கத்தில் இருந்து வேறு ஒரு நபருக்கு அழைப்பேற்படுத்தும் தொழில் நுட்பம் ஒன்று தற்போது உரு வாகியுள்ளது. அந்த தொழில்நுட்பத்தின் ஊடாக நமது குரல் மற்றும் பின்னணி குரல்களை மாற்றுவதற்கான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. அதற்கமைய நமது இலக்கத்தை பயன்படுத்திய நம்மை போன்று வேறு நபர் பேசுவதற்கான வாய்ப்புகள் உள்ளன.

இந்த மோசடியில் இலங்கை சமூக செயற்பாட்டாளர் ஒருவர் சிக்கியுள்ளார். அவரது இலக்கத்தில் இருந்து பொலிஸ் உயர் அதிகாரிக்கு அழைப்பேற்படுத்தி மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

எனினும் அவ்வாறான எந்த வொரு அழைப்பையும் அவர் மேற்கொள்ளவில்லை. கையடக்க தொலைபேசி நிறுவனத்திடம் பெற்றுக் கொள்ளப்பட்ட அறிக்கையிலும் பொலிஸ் அதிகாரிக்கு அழைப்பேற்படுத்திய மைக்கான பதிவுகளையும் கண்டு பிடிக்க முடியவில்லை.

இந்தச் சம்பவம் தொடர்பில் இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையத்திடம் அவர் முறைப்பாடு செய்துள்ளார்.

இலங்கை மக்களுக்கு வரும் அழைப்பில் ஏதேனும் சந்தேகம் இருந்தால் உடனடியாக, பொலிஸார் அல்லது தொலைத்தொடர்பு ஒழுங்கு முறை ஆணை யத்திடம் முறைப்பாடு செய்யுமாறு கேட்டுகொள்ளப் பட்டுள்ளது.

## ஆற்றிலிருந்து நான்கு வயது சிறுவன் சடலமாக மீட்பு : ஹற்றனில் சம்பவம்!

ஹற்றன் – ரொத்தஸ் பகுதியிலுள்ள ஆற்றிலிருந்து நான்கு வயது சிறுவனின் சடலம் நேற்றுமுன்தினம் மாலை கண்டெடுக்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஹற்றன் – ரொத்தஸ் பகுதியைச் சேர்ந்த ஸ்ரீதரன் சபித் என்னும் இந்த சிறுவன் நேற்றுமுன்தினம் மாலை 6 மணியளவில் காணாமல் போயிருந்த நிலையில் ஆற்றிலிருந்து சடலமாக கண்டெடுக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் ஹற்றன் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர், சடலம் பிரேத பரிசோதனைக்காக ஹற்றன் நீதிவானின் மேற்பார்வையின் பின்னர் நாவலப்பிட்டி ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.

## மீன் பிடிக்கச் சென்ற இளைஞன் சடலமாக மீட்பு!



மட்டக்களப்பு, ஓக. 24

மட்டக்களப்பு கரடியனாறு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கறுவாச்சோலை பல்லாவெளிக் குளத்தில் 24 வயதையுடைய சிவனேசன் விமல்ராஜ் எனும் வவுணதீவுப் பகுதியை சேர்ந்தவரே மீன் பிடிக்கச் சென்ற நிலையில், சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலம் பிரேத பரிசோதனைகளுக் காக செங்கலடி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ள. கரடியனாறு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## காயங்களுக்குள்ளான பாம்புக்கு சத்திர சிகிச்சை!





இலங்கையில் பெரும் காயங்களுக்கு உள்ளான மலைப்பாம்புக்கு சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

புல்லு வெட்டும் இயந்திரத்தில் சிக்கி பெரிய வெட்டு காயங்களுக்குள்ளான பாம்புக்கே சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சத்திர சிகிச்சையின் பின்னர் ஹியாரே மிருக வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்ட நிலையில், தற்போது குணமடைந்து வருகிறது என காலி வனவிலங்கு பாதுகாப்புச் சங்கம் தெரிவித்துள்ளது.

பட்டபொல பிரதேசத்தில் புள்ளு வெட்டு இயந்திரத்தில் சிக்கிய பாம்புக்கு வயிற்று பகுதியில் 3 காயங்கள் ஏற்பட்டுள்ளன என வன விலங்கு பாதுகாப்பு சங்கம் தெரிவித்துள்ளது.

அந்த மலைப் பாம்புக்கு 45 நிமிடங்கள் வரை சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது என வனவிலங்கு பாதுகாப்புச் சங்க அதிகாரி சிசிர ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

## நியூஸிலாந்தில் தொழில் பெற்றுத் தருவதாக கூறி இளைஞர்கள் பலரை ஏமாற்றிய பெண் கைது!

நியூஸிலாந்தில் தொழில் பெற்றுத் தருகிறேன் எனக் கூறி பல இளைஞர்களை ஏமாற்றிய பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாத்தளை பிரதேசத்தில் வாழும் 70 வயதுடைய பெண்ணே இந்த மோசடியில் ஈடுபட்டுள்ளார். அவர் நாட்டின் பல பிரதேசங்களில் மத தலைவர்களுடன் நுட்பமான முறையில் நட்புறவு ஏற்படுத்தி தான் நியூஸிலாந்து குடியுரிமை பெற்றவர் எனக் கூறி வந்துள்ளார்.

மத வழிபாட்டு தலங்களுக்கு வரும் மக்களுக்கு நியூஸிலாந்தில் தொழில் பெற்றுக் கொடுக்க முடியும் எனக் கூறி தனது மோசடியை ஆரம்பித்துள்ளார்.

அண்மையில் இந்த பெண் நுவரெலியா, பூண்டுலோயா பிரதேசத்தில் உள்ள விகாரையின் தேரர் ஊடாக 16 இளைஞர்களிடம் 56 லட்சம் ரூபா மோசடி செய்துள்ளார்.

தான் சிங்கப்பூரில் 8 வருடங்கள் இருந்தேன் என்றும் நியூஸிலாந்தில் 8 வருடங்கள் இருந்துள்ளேன் எனவும் அவர் கூறியுள்ளார். தனது வாழ் நாள் முழுவதும் உலகம் சுற்றி வந்துள்ளேன் என்றும், இதனாலேயே பயமின்றி தான் இவ்வாறு தொழில் பெற்றுக் கொடுத்து வருகிறேன் என்றும் அந்த பெண் குறிப்பிட்டுள்ளார்.

கடவுச்சீட்டுடன் தலா 3 லட்சம் பணத்தை பூண்டுலோயாவிலுள்ள இளைஞர்களிடம், இந்தப் பெண் பெற்றுள்ளார்.

இந்தப் பெண்ணுக்கு எதிராக நாடு முழுவதும் உள்ள பல நீதிமன்றங்களில் வழக்குகள் நடந்து வருகின்றன என்றும் தெரியவருகிறது.

# சர்வதேச இராணுவ மயமாக்கலுக்குள் அகப்பட்டுச் சிக்கித் தவிக்கும் இலங்கை

இரண்டாம் உலகப் போர் காலத்துக்குப் பின்னர் அமெரிக்க வரலாற்றில் மிக அதிகமான பாதுகாப்புச் செலவினமாக அமையப் போகும், 2019 ஆம் ஆண்டுக்கான பாதுகாப்பு நிதி ஒதுக்கீட்டு அங்கீகாரச் சட்டத்தில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட்ட்ரம்ப் அண்மையில் கையெழுத்திட்டிருந்தார்.

இதற்கமைய 681.1 பில்லியன் டொலர், 2019 ஆம் ஆண்டில் பாதுகாப்புநிதியாக ஒதுக்கப்பட்டுள்ளது. சீனாவுக்கும் ரஷ்யாவுக்கும் போட்டியாக அமெரிக்காவின் படைபலத்தை அதிகரிக்கும் நோக்கிலேயே டொனால்ட்ட்ரம்ப் நிர்வாகம் பாதுகாப்பு நிதி ஒதுக்கீட்டை கணிசமாக உயர்த்தியிருக்கிறது.

இந்த நிதி ஒதுக்கீட்டின் மூலம் அமெரிக்கா தனது படைபலத்தை மாத்திரம் வலுப்படுத்திக் கொள்ளப் போவதில்லை. தனது நட்பு நாடுகள், பூகோள அரசியல் நலன்களின் அடிப்படையில் தனக்கு வேண்டிய நாடுகளின் படைபலத்தையும் அதிகரிக்கப் போகிறது.

அமெரிக்காவின் கூடுதலான இராணுவ நிதியைப் பெறப் போகின்ற நாடுகளின் பட்டியலில் இலங்கை, இந்தியா உள்ளிட்ட நாடுகளும் உள்ளடங்கியிருக்கின்றன.

இந்தோ – பசுபிக் பிராந்தியத்தில் சீனாவின் இராணுவத் தலையீடு மற்றும் செல்வாக்கை ஓரம்கட்டுவதற்கு இந்தியாவையும் இலங்கையையும் தமது முக்கிய பங்காளராக சேர்த்துக் கொண்டிருக்கிறது அமெரிக்கா.

2009 தொடக்கம் 2014 வரை இலங்கை தொடர்பாக கடைப்பிடித்த இறுக்கமான போக்கை 2015 ஆட்சி மாற்றத்துக்குப் பின்னர் தளர்த்த ஆரம்பித்த அமெரிக்கா, இப்போது இன்னும் வேகமாக இலங்கைக்கு இராணுவ உதவிகளை வழங்க ஆரம்பித்துள்ளது.

2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கைக்கு இராணுவ உதவிகளை வழங்குவதை அமெரிக்கா இடைநிறுத்தியிருந்தது. மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான பயிற்சிகள் உள்ளிட்ட ஒத்துழைப்புகளை மாத்திரம் தொடர்ந்தது.

குறிப்பாக மனிதாபிமான அனர்த்த மீட்பு ஒத்துழைப்புகளையே தொடர்ந்து வந்த அமெரிக்கா 2015க்குப் பின்னர் இலங்கைக் கடற்படையை வலுப்படுத்துவதற்கான பயிற்சிகளை வழங்கத் தொடங்கியது. கூட்டுப் பயிற்சிகள், ஒத்திகைகள் என்று இப்போது அவை விரிவடைந்துள்ளன.

அண்மையில் கூட இலங்கைக் கடற்படையைச் சேர்ந்த 62 கொமாண்டோக்களுக்கு திருகோணமலையில் பலன்ஸ்ஸ்ரைல் 2018/1 என்ற திட்டத்தின் கீழ் அமெரிக்க கடற்படையின் சிறப்பு போர்ப்படை அதிகாரிகள் 3 வாரகால பயிற்சிகளை அளித்திருந்தனர்.

இந்தநிலையில் தான் அமெரிக்கா இலங்கையின் கடல்சார் கண்காணிப்பு பலத்தை அதிகரிக்கும் வகையில் இராணுவ நிதியை வழங்கப் போவதாக அறிவித்திருக்கிறது.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் கடந்த வாரம் வெளியிட்ட அறிவிப்பில் இலங்கைக்கு 39 மில்லியன் டொலர் இராணுவ நிதி வழங்கப்படும் என்று கூறப்பட்டிருந்தது. இந்த நிதி ஒதுக்கீட்டுக்கு அமெரிக்க நாடாளுமன்றம் இன்னமும் அங்கீகாரம் அளிக்கவில்லை.

இந்த நிதியை எவ்வாறு செலவிடுவது என்று இலங்கை அரசாங்கத்துடன் பேச்சு நடத்தப் போவதாகவும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

மிக நீண்ட காலத்துக்குப் பின்னர் அமெரிக்காவினால் இலங்கைக்கான இராணுவ நிதி அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதன் பெரும் பகுதி கடல்சார் கண்காணிப்புத் திறனை அதிகரிப்பதற்கே பயன்படுத்தப்படும்.

இந்தோ – பசுபிக் பிராந்தியத்தில் சுதந்திரமான திறந்த சட்டதிட்டங்களுக்கு அமைவான கப்பல் பயணங்களை உறுதி செய்வதே அமெரிக்காவின் இலக்கு. அதற்காகவே இந்த இராணுவ நிதியை இலங்கைக்கு வழங்கவுள்ளது அமெரிக்கா. இலங்கைக் கடற்படையின் பலத்தை அதிகரிப்பது இந்தத் திட்டத்தின் ஒரு கட்டம். இதற்காக அமெரிக்கா தனது கடலோரக் காவல் படையில் இருந்து நீக்கப்பட்ட போர்க்கப்பல் ஒன்றையும் இலங்கைக் கடற்படைக்கு வழங்கவுள்ளது.

யு.எஸ்.சி.ஜி. ஷேர்மன் என்ற பெயருடைய போர்க்கப்பலே இலங்கைக் கடற்படைக்கு வழங்கப்படவுள்ளது. ஹவாய் துறைமுகத்தில் தற்போது தரித்து நிற்கும் யுஎஸ்சிஜி ஷேர்மன் கப்பலின் மேற்தளத்தில் நடைபெறவுள்ள நிகழ்வில் இந்தக் கப்பல் இலங்கைக் கடற்படையிடம் கையளிக்கப்படும்.

378 அடி(115 மீற்றர்) நீளம் கொண்ட இந்தப் போர்க்கப்பல் 1967 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. வியட்நாம் போரின் போது பல கப்பல்களை மூழ்கடித்து சாதனை படைத்த இந்தப் போர்க்கப்பல் அமெரிக்க கடலோரக் காவற்படையில் 50 ஆண்டுகள் பணியாற்றிய நிலையில் கடந்த மார்ச் மாதம் சேவையில் இருந்து நீக்கப்பட்டது.

யு.எஸ்.சி.ஜி. ஷேர்மன் போர்க்கப்பல் இலங்கைக் கடற்படையினரிடம் கையளிக்கப்பட்டாலும் உடனடியாக அது கொழும்புக்கு கொண்டு வரப்படாது. அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதமே கொழும்புக்கான பயணத்தை அது ஆரம்பிக்கும்.

அதற்குள்ளாக கப்பலில் திருத்த வேலைகள் மற்றும் கருவிகள் பொருத்தும் பணிகள் இடம்பெறுவதுடன் இலங்கைக் கடற்படையின் மாலுமிகளுக்கும் அதில் பயிற்சிகள் அளிக்கப்படும். இதற்கான செலவுகளை இலங்கை அரசாங்கமே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

ஏற்கனவே அமெரிக்கா 2004ஆம் ஆண்டு கடற்படைக்கு கொடுத்த போர்க் கப்பல் இப்போதும் எஸ்.எல்.என்.எஸ். சமுத்ர என்ற பெயருடன் இயங்கிக் கொண்டிருக்கும் நிலையில் அடுத்த ஆண்டில் அமெரிக்காவின் இன்னொரு கப்பலும் கடற்படையில் இணைந்து கொள்ளப் போகிறது.

> பல்வேறு நாடுகளின் போர்க்கப்பல் கள் இலங்கைத் துறைமுகங்களுக்கு மேற் கொண்ட பயணங்களே இந்த இராணுவ மயமாக்கலுக்கான சாட்சி. 2009 தொடக்கம் 2017 வரை 398 வெளிநாட்டுப் போர்க்கப்பல்கள் இலங்கைத் துறை முகங்களுக்கு வந்துள்ளன.

சீனாவின் செல்வாக்கை உடைப்பதற்காக அமெரிக்கா போர்க்கப்பல் மற்றும் இராணுவ உதவிகளை இலங்கைக்கு அளித்து வருகின்ற நிலையில், சீனாவும் அதற்குப் போட்டியாக போர்க் கப்பல் ஒன்றை வழங்கப் போவதாக அண்மை யில் அறிவித்திருந்தது. எந்த வகையான போர்க்கப்பலை இலங்கைக் கடற்படைக்கு சீனா வழங்கப் போகிறது என்று சீனா இன்னமும் அதிகாரபூர்வமாக அறிவிக்கவில்லை.

எனினும் Type C28A அல்லது Type C 138 ரகத்தைச் சேர்ந்த போர்க்கப்பலாகவோ அல்லது அண்மையில் சீனக் கடற்படையில் இருந்து ஓய்வுபெற்ற Type 053 போர்க்கப்பலாகவோ அது இருக்கக் கூடும் என்று நம்புவதாக சீன இராணுவ ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த மூன்று வகை சீனப் போர்க் கப்பல்களும்தான் பொதுவாக ஏனைய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுபவை.

அல்ஜீரியா, பங்களாதேஷ், பாகிஸ்தான் போன்ற நாடுகள் இந்த வகை போர்க்கப்பல்களை வைத்திருக்கின்றன.

சீனாவின் இந்தப் போர்க்கப்பல் இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தக் கூடும் என்று இந்திய ஊடகங்களும் ஆய்வாளர்கள் சிலரும் புரளியைக் கிளப்பி விட்டிருந்தார்கள்.

ஆனால் அதற்குச் சீன ஆய்வாளர்களோ, இந்தியா எவ்வாறு இலங்கைக் கடற்படைக்கு போர்க்கப்பல்களைக் கொடுத்ததோ அவ்வாறு தான் சீனாவும் கொடுக்கிறது என்று பதிலடி கொடுத்திருக்கிறார்கள்.

ஏற்கனவே இந்தியாவும் இரண்டு ஆழ்கடல் ரோந்துக் கப்பல்களை இலங்கைக் கடற்படைக்கு கொடையாக வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



## பழைய யுத்தக் கப்பல்களை இலங்கைக்கு வாரி வழங்கும் சர்வதேச நாடுகள்

ஆனால் பழைய போர்க்கப்பல்கள் கொடையாக வழங்கப்பட்டாலும் கூட அவற்றை ஏற்றுக்கொள்ளக் கூடாது என்று முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் ஜயந்த கொலம்பகே இந்திய ஊடகம் ஒன்றிடம் அண்மையில் தெரிவித்துள்ளார்.

தாயகக் கடற்படைகளில் சேவையில் இருந்து நீக்கப்பட்ட பழைய போர்க்கப்பல்கள் கொடையாக வழங்கப்படும்

அல்லது விற்கப்படும். வயதான அந்தப் போர்க்கப்பல்களின் இயந்திரங்கள் ஏனைய கருவிகள் அடித்தளம் என்பன பழுது பார்க்கப்பட வேண்டியிருக்கும் அல்லது அடிக்கடி பராமரிப்புக்கு உட்படுத்தப்பட வேண்டியிருக்கும்.

அந்தக் கப்பல்களை கணிசமான காலத்துக்கு பழுதுபார்க்க வேண்டியிருக்கும். அதற்கான செலவுகளும் கப்பலின் பெறுமதியுடன் சேர்க்கப்பட வேண்டியிருக்கும். கப்பல் கொடையாக வழங்கப்பட்டிருந்தாலும் கூட அதனைப் பராமரிக்க அதிகம் செலவழிக்க வேண்டியிருக்கும்.

இலங்கை அதன் தேவைகளை கவனமாக மதிப்பீடு செய்ய வேண்டும். பொருத்தமான கொள்வனவுகளை மேற்கொள்ள வேண்டும். கொடையாக வழங்கப்படுகிறது என்பதற்காக ஏற்றுக் கொள்ளக் கூடாது.

போர்க்கப்பல்களை பல்வேறு நாடுகளில் இருந்து கொடையாக பெற்றுக் கொள்ளும் போது அவற்றில் பொருத்தக் கூடிய ஆயுதங்கள் தொடர்பாக பிரச்சினைகள் எழுக கூடும். ஏற்கனவே இருந்த ஆயுதங்கள் பதிலீடு செய்யப்பட வேண்டும்.

பயன்படுத்தப்படும் ஆயுதங்கள் நாட்டுக்கு நாடு வேறுபடக் கூடும். கையாளுதல் மற்றும் பல ஆயுதப் பொறிமுறைகளை இணைத்தல் ஒரு சவாலான பணியாக இருக்கும். உதிரிப்பாகங்களைப் பெற்றுக்கொள்வதும் பிர்ச்சினைக்குரிய ஒன்றாக இருக்கக் கூடும்.

இலங்கைக்கு இப்போது இராணுவத் தளபாடங்கள் தேவையில்லை. ஏனென்றால் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் அவர்களின் முழுமையான இராணுவத்திறனும் அழிக்கப்பட்டதுடன் நிறைவுக்கு வந்து விட்டது.

ஆனாலும் பிராந்திய மற்றும் பூகோள ரீதியாக சக்திவாய்ந்த நாடுகள் இலங்கைக்கு இராணுவத் தளபாடங்களை குறிப்பாக போர்க்கப்பல்களை கொடையாக வழங்கிக் கொண்டிருக்கின்றன.

இந்தியப் பெருங்கடலின் கட்டுப்பாட்டுக்காக மேற்குலகம் மற்றும் இந்தியா ஒரு பக்கமும் சீனா மற்றொரு பக்கமும் நடத்துகின்ற போட்டிக்குள் இழுத்துச் செல்லவே இவ்வாறு போர்க்கப்பல்களை கொடையாக வழங்குகின்றன.

உள்நாட்டுப் போர் நடந்து கொண்டிருந்த போது இலங்கைக்கு ஆயுதங்களை விற்க மறுத்த நாடுகள் இப்போது கொடையாக ஆயுதங்களை வழங்குகின்றன. இது ஏனென்றால் அவர்களின் பூகோள அரசியல் நலன்களை அடைவதற்காகவே என்றும் அவர் சாடியிருக்கிறார்.

அது மாத்திரமன்றி இலங்கையை இராணுவ மயமாக்கும் செயற்பாடுகளில் சர்வதேச நாடுகளே ஈடுபட்டிருக்கின்றன என்றும் அட்மிரல் ஜயந்த கொலம்பகே குற்றஞ்சாட்டியுள்ளார்.

இலங்கைத்தீவுடனான தமது இராணுவத் தொடர்புகளை அதிகரித்ததன் மூலம் இந்த நாடுகள் இலங்கையில் புதிய இராணுவ மயமாக்கலை ஆரம்பித்தன.

பல்வேறு நாடுகளின் போர்க்கப்பல்கள் இலங்கைத் துறைமுகங்களுக்கு மேற்கொண்ட பயணங்களே இந்த இராணுவ மயமாக்கலுக்கான சாட்சி. 2009 தொடக்கம் 2017 வரை 398 வெளிநாட்டுப் போர்க்கப்பல்கள் இலங்கைத் துறைமுகங்களுக்கு வந்துள்ளன.

இந்தியாவின் 82 போர்க்கப்பல்களும், பாகிஸ்தானின் 24 போர்க்கப்பல்களும், ஜப்பானின் 67 போர்க்கப்பல்களும், பங்களாதேஷின் 23 போர்க்கப்பல்களும், சீனாவின் 31 போர்க்கப்பல்களும், அமெரிக்காவின் 18 போர்க்கப்பல்களும், ரஷ்யாவின் 28 போர்க்கப்பல்களும் இந்தக் காலப்பகுதியில் இலங்கைத் துறைமுகங்களுக்கு வந்துள்ளன என்றும் அவர் கூறியுள்ளார்.

அட்மிரல் கொலம்பகேயின் கருத்து நிலையில் இருந்து பார்க்கும் போது சர்வதேச சக்திகளின் இராணுவ மயமாக்கல் நிகழ்ச்சி நிரலுக்குள் இலங்கை அகப்பட்டு விட்டது என்றே கருத வேண்டியுள்ளது.

இலங்கை அரசாங்கமே நினைத்தாலும் கூட இதிலிருந்து இலகுவில் வெளியே வந்துவிட முடியாது என்பதையே இது உணர்த்தி நிற்கிறது.

காலைக்கதிர்
Kalaikkathir





# கூட்டமைப்பின் பெயரில் பதவியில் இருப்பதற்கு

# முதலமைச்சர் விக்கிக்கு எந்தத் தகுதியும் இல்லை

## முன்னாள் சுகாதார அமைச்சர் மருத்துவர் சத்தியலிங்கம் காட்டம்

கூட்டமைப்பில் இருந்து கொண்டே கூட்டமைப்புக்கு எதிராகவும் அல்லது கூட்டமைப்புடன் ஒத்து இயங்குகின்ற தன்மையில் இருந்தும் கடந்த மூன்று வருடங்களுக்கு முதலே முதலமைச்சர் வெளியேறிவிட்டார்.

கூட்டமைப்பினுடைய மாகாண சபை அறுதிப்பெரும்பான்மையுடன் செயற்படுகின்ற இந்த சபையிலே தாங்கள் கூட்டமைப்பு இல்லை என்று சொல்லிக் கொண்டு அல்லது தாங்கள் கூட்டமைப்புக்கு வெளியே இருந்து செயற்படுபவர்களாகச் சொல்லிக் கொண்டிருப்பவர்கள் அந்த பதவியில் இருப்பதற்கு தகுதியற்றவர்கள். அவர்கள் கூட்டமைப்பு இல்லை என்று சொன்னால் அவர்கள் கூட்டமைப்பினுடைய சபையிலே இருப்பது என்பதும், பதவி வகிப்பது என்பதும் அநாகரிகமானது என முன்னாள் சுகாதார அமைச்சரும், வடமாகாண சபை உறுப்பினருமான ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் உள்ள அவரது 'தாயகம்' அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் மாலை விளையாட்டுக்கழகங்களுக்கான உதவித் திட்டத்தை வழங்கிய பின் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதில் அளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்–

வடக்கு மாகாணத்தில் இருக்கின்ற 38 உறுப்பினர்களில் முதலமைச்சர் உட்பட 30 உறுப்பினர்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்பைச் சார்ந்தவர்கள். ஆகவே முதலமைச்சர் அவர்கள் புதிதாக ஓர் அணியாக செயற்படுவாராக இருந்தால் அவர் எந்த அணிக்கு போகப் போகிறார் என்பது எல்லாம் எமக்குத் தெரியாத விடயம். அவர் கூட்டமைப்பில் இருந்து கொண்டே கூட்டமைப்புக்கு எதிராகவும் அல்லது கூட்டமைப்புடன் ஒத்து இயங்குகின்ற தன்மையில் இருந்தும் கடந்த மூன்று வருடங்களுக்கு முதலே அவர் வெளியேறிவிட்டார். தனக்கு என ஒரு வட்டத்தை வைத்துக் கொண்டு அந்த வட்டத்தின் ஆலோசனைகளுடன் தான் செயற்பட்டு அவர் கூட்டமைப்பில் இருந்து வெளியேறியுள்ள நிலைமை தான் உள்ளதாக நான் கருதுகிறேன்.



கூட்டமைப்பினுடைய மாகாண சபை அறுதிப் பெரும்பான்மையுடன் செயற்படுகின்ற இந்த சபையிலே தாங்கள் கூட்டமைப்பு இல்லை என்று சொல்லிக் கொண்டு அல்லது தாங்கள் கூட்டமைப்புக்கு வெளியே இருந்து செயற்படுபவர்கள் எனச் சொல்லிக் கொண்டிருப்பவர்கள் அந்த பதவியில் இருப்பதற்கு தகுதியற்றவர்கள். அவர்கள் கூட்டமைப்பு இல்லை என்று சொன்னால் அவர்கள் கூட்டமைப்பினுடைய சபையிலே இருப்பது என்பதும், பதவி வகிப்பது என்பதும் அநாகரிகமானது என்று கருதுகிறேன்.

முதலமைச்சர் மாத்திரமல்ல, மாகாண சபை உறுப்பினர்களான ஐங்கரநேசன், அனந்தி சசிதரன் போன்றோர் தாங்கள் எந்தக் கட்சியும் இல்லை என்று சொல்கிறார்கள். ஆனால் தேர்தலில் எந்தக் கட்சியும் இல்லாமல் அவர்கள் வாக்குக் கேட்டு மாகாண சபைக்கு வரவில்லை. இவர்கள் அனைவரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பில் போட்டியிட்டு வந்தவர்கள். அதற்கு ஒரு படி மேலே சென்று ஐக்கரநேசன் சொன்னார் என ஒரு பத்திரிகைச் செய்தியை பார்த்தேன்.

கூட்டமைப்பு என்பது ஒரு கூழ் முட்டை என்றும் அதை அடைகாப்பது பிரயோசனமற்றது என்றும் தெரிவித்துள்ளார் எனப் பார்த்தேன். அப்படியென்றால் அவரும் கூழ் முட்டை தான். கூழ் முட்டைக்குள் தான் அவரும் இருக்கிறார். கூட்டமைப்பினுடைய அங்கத்தவராக தான் இன்றும் பதவியில் இருக்கிறார். நான் இன்று சொல்வதைக் கேட்டு சில வேளை மாகாண சபை பதவியை அவர் தூக்கியெறியலாம். ஏனென்றால் மாகாணசபை நிறைவு பெறுவதற்கு இன்னும் குறிப்பிட்ட சில நாள்கள் தான் இருக்கிறது.

ஆகவே, வாக்குப் போட்ட மக்களுக்கு விசுவாசமாக இருக்க வேண்டும். எல்லா இடத்திலும் சரி பிழை வரும். அந்த சரி பிழைகளை திருத்திக் கொண்டு இந்த மாகாணசபை யைத் திறம்பட நடத்தி மக்களுக்குரிய சேவையை வழங்கியிருக்க வேண்டும். சில அமைச்சுக்கள், சில திணைக்களங் கள் மக்களுக்கு சிறந்த சேவையை வழங்கியிருக்கின்றன. ஆனால் இந்த மாகாண சபை திறம்பட செயற்படாமைக்கு அந்த மாகாண சபையினுடைய வழிகாட்டியாக இருக்கின்ற முதலமைச்சர் அவர்களே முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். முதலமைச் சரே தான் மாகாணசபையை கொண்டு நடத்துபவர். ஆகவே இந்த மாகாண சபையில் நாங்கள் பிழை விட்டிருந்தால், அந்தப் பிழைகளை ஏற்றுக் கொண்டு முன்னுக்கு போவதை பார்க்க வேண்டுமேயொழிய, அதை விடுத்து 2009 ஆம் ஆண்டு ஆயுத பலத்தை இழந்து அகிம்சைப் பலத்தில் செயற்பட வேண்டிய நிலையில் நாங்கள் உள்ளுக்குள் அரசியலுக்காக நாங்கள் பிரிந்து ஒருவர் மேல் ஒருவர் தூற்றி தமிழர்கள் ஒன்றாக இல்லை என்பதை காட்டுவோமாக இருந்தால் அது நிச்சயமாக தமிழ் மக்களை புதை குழியில் தள்ளுவதாக அமையும்.

> **நாங்கள் எல்லோரும் இந்த அரசியலுக்கு வந்தமைக்குரிய காரணம், 30 வருட யுத்தத்தில் சின்னாபின்னமாகி இருக்கின்ற எங்களது தேசத்தை மீள கட்டியெழுப்ப வேண்டும் என்பதற்காகவே. அந்த எண்ணத்தை எவ்வளவு தூரம் மனதில் வைத்துக் கொண்டு எமது அரசியல்வாதிகள் செயற்படுகின்றார்கள் என்பது கவலைக்குரிய விடயம்.**



ஆகவே, முதலமைச்சர் ஒரு புதிய அணியை உருவாக்குவதாக இருந்தால் அவர் யாருடன் புதிய அணியை உருவாக்கப் போகின்றார் என்ற வதந்திகள் இருக்கின்றன. தமிழ் தேசிய மக்கள் முன்னணியுடன் சேரப்போவதாக சொல்கிறார்கள். தமிழ் தேசிய மக்கள் முன்னணியுடன் சேர்ந்தால் அவர்கள் ஈ.பி.ஆர்.எல்.எவ். மற்றும் முன்னர் ஆயுதக்குழுக்களாக இருந்து தற்போது தமிழ் தேசியக் கூட்டமைப்பில் உள்ள புளொட், ரெலோ போன்ற கட்சிகளை உள்வாங்க கஜேந்திரகுமார் அவர்கள் விரும்பமாட்டார் என்றசெய்தியை பத்திரிகைகளில் காணக்கூடியதாக இருந்தது. ஆகவே அந்த புதிய கூட்டு என்பது தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு எதிரான அல்லது தமிழரசுக் கட்சிக்கு எதிரான ஒரு குழுவாக இயங்குவதற்கு அவர்கள் முயற்சிகள் எடுப்பார்கள் என நாங்கள் அறிகிறோம். அப்படியானதொரு புதிய அணியின் ஊடாக முதலமைச்சர் அவர்கள் வந்தாலும் மக்கள் அதற்குரிய தீர்ப்பை வழங்குவார்கள் என நான் நம்புகின்றேன்.

நாங்கள் எல்லோரும் இந்த அரசியலுக்கு வந்தமைக்குரிய காரணம், 30 வருட யுத்தத்தில் சின்னாபின்னமாகி இருக்கின்ற எங்களது தேசத்தை மீள கட்டியெழுப்ப வேண்டும் என்பதற்காகவே. அந்த எண்ணத்தை எவ்வளவு தூரம் மனதில் வைத்துக் கொண்டு எமது அரசியல்வாதிகள் செயற்படுகின்றார்கள் என்பது கவலைக்குரிய விடயம்.

முதலமைச்சர் ஆரம்பத்தில் தான் இரண்டு வருடம் தான் பதவியில் இருப்பேன். அதற்கு பின்னர் மாவை ஐயா இருக்கட்டும் என்று கூறியிருந் தார். தற்போது ஐந்து வருடம் கழித்தும் தான் திரும்பவும் வரத்தான் போகிறேன். கூட்டமைப்பினுடைய முதலமைச்சரா அல்லது கூட்டமைப்பு இல்லாத முதலமைச்சாரா என்று தீர்மானிக்க வேண்டிய பொறுப்பு கூட்டமைப்பிடம் இருப்பதாக கூறியதாக அண்மையில் பத்திரிகைளில் பார்த்தேன். கூட்டமைப்புக்கு ஊடாகவந்தாலும், யாருக்கு ஊடாக வந்தாலும் தாம் முதலமைச்சராக இருக்க விரும்புவதையே அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

என்னுடைய கேள்வி என்னவென்றால், இவர் திரும்பவும் முதலமைச்சராக வருவதற்குரிய காரணம் என்ன...?, என்ன வேலையை செய்து குறையில் விட்டுவிட்டு அதை முடிப்பதற்கு திரும்ப வருகிறீர்கள்...?, உங்களுடைய மாகாண சபையிலேயே செய்யப்பட வேண்டிய அபிவிருத்தி வேலைகள், ஏனைய வேலைகள், அரசியல் வேலைகள் என்பவற்றில் என்ன, என்ன வேலைகளை நீங்கள் செய்தீர்கள்? என்ன வேலையை முடித்திருக்கிறீர்கள்? எதனைச் செய்வதற்கு முதலமைச்சருக்குரிய ஒரு 5 வருடம் தேவையாக இருக்கிறது...? - இதனை முதலமைச்சர் வெளிப்படுத்துவாராக இருந்தால், அவை ஏற்றுக் கொள்ளத்தக்க வேலைத்திட்டங்களாக இருந்தால், அவருக்கு பின்னால் நிற்பதற்கு நாங்களும் தயாராக இருக்கிறோம்.

ஆனால் அதற்கு மாறாக கடந்த 5 வருடங்களிலே எந்தவிதமான முன்னேற்றங்களும் இல்லாத பல விடயங்களை குழப்பியடித்த நிலை இருக்கும் போது திரும்பவும் முதலமைச்சராக இருக்க 5 வருடம் கேட்பது என்ன நியாயத்தில், என்ன அடிப்படையில் என்பது புரியவில்லை.

நாங்கள் தொடர்ந்தும் மக்களை ஏமாற்ற முடியாது. நாங்கள் பதவிக்கு வந்தால் 30 வருட யுத்தத்தால் துன்பப் பட்ட மக்களது துன்பத்தை போக்குவதற்கான வேலைத் திட்டத்தை முன்னெடுக்க வேண்டும். அப்படி எம்மால் முன்னெடுக்கப்படாவிட்டால், அந்த திறன் எம்மிடம் இல்லை என்றால், அல்லது திறன் இருந்தும் பலர் எம்மை தடுக்கிறார்கள் என்றால் நாம் இதிலிருந்து ஒதுங்கி போவது தான் நல்ல விடயம். செய்யக் கூடியவர்கள் வந்து செய்வார்கள். அதை விடுத்து வெறும் பதவிக்காகவும், காழ்ப்புணர்ச்சிக்காகவும், அரசியல் போட்டிக்காகவும் மீண்டும் மீண்டும் வந்து இன்னுமொரு 5 வருடத்தை வீணாக்கி இந்த மக்களுக்களின் வாயில் மண் அள்ளிப் போடும் வேலையைச் செய்யக் கூடாது.

(உ -100)

# குழந்தைகளைக் கவனியுங்கள்: கைபேசிகளில் 'கேம்ஸ்' விளையாடுவது அவர்களை 'அடிமை'களாக்கி விடும்!



குழந்தைகள்கைத் தொலை பேசியில் விளையாட்டுக்களில் (கேம்ஸ்) தொடர்ச்சியாக ஈடுபடுவதன் காரணமாக அவற்றுக்கு அடிமையாகி விடுகின்றனர். விளையாட்டுகளால் குழந்தைகளுக்கு பலனுண்டு. ஆனால் இது பயனற்ற விபரீதமான விளையாட்டு! குழந்தைகளின் எதிர்காலத்தை முற்றிலுமாக தகர்க்கும் விளையாட்டு!

திருடனைப் பிடிப்பது மறைத்து வைத்திருக்கும் வெடிகுண் டுகளை கண்டறிவது மந்திரவாதிகளை ஒரு கை பார்ப்பது போன்ற அனைத்து விளையாட்டுகளிலுமே, விளையாடும் குழந்தைகளே 'ஹீரோ' ஆகிக்கொள்கிறார்கள். நண்பர்களோடு சேர்ந்து விளையாடும்போது ஒருவரை ஒருவர் வீழ்த்த பார்க்கிறார்கள்.

அவர்களை அடிமைப்படுத்தும் விதத்தில்தான் ஒவ்வொரு விளையாட்டும் வடிவமைக்கப்பட்டிருக்கிறது. வெற்றிபெற வேண்டும் என்ற வெறியை உருவாக்கும் விதத்தில் அது உள்ளது. மதுவுக்கு அடிமையாவது போன்ற சூழல் இல்லை என்றாலும், சில குழந் தைகளிடம் அதைவிட மோசமான பாதிப்பையும் இந்த விளையாட்டுகள் ஏற்படுத்தியிருக்கின்றன.

விளையாட்டில் அவர்களுக்கு வெறித்தனம் அதிகரிக்க அதிகரிக்க படிப்பு உட்பட்ட அவர்களது அன்றாட செயல்கள் அனைத்தையும் அது பாதிக்கும். முழு கவனமும் விளை யாட்டை நோக்கிச் சென்று குழந்தைகளை அடிமையாக்கும் முன்பு அவர் களை காப்பாற்றியாக வேண்டும்.

'எனது பிள்ளை கெட்டிக்காரன் அவன் ஒருபோதும் மொபைல் கேம்ஸுக்கு அடிமையாகமாட்டான்' என்று நீங்கள் நினைக்கிறீர்களா? தவறு!. அப்படி நினைக்காதீர்கள். எவ்வளவு புத்திசாலியான குழந்தை என்றாலும் இந்த விளையாட்டுக்கு அடிமையாகிவிடுவார்கள்.

பெற்றோர் அருகில் இல்லாத குழந் தைகளும், பெற்றோரின் கண்காணிப்பு குறைவாக உள்ள குழந் தைகளும் அதிகம் பாதிக் கப்படுவார்கள்.

மூளைப்பகுதியில் 'டோபாமின்' என்ற ஹோர் மோன் சில குழந்தைகளுக்கு அதிகம் சுரக்கும். அவர்கள் இந்த விளையாட்டுக்கு எளிதாக அடிமையாகிவிடுவார்கள். 'ஒன்லை னில்' குழந்தைகள் அதிக நேரம் விளையாடுவதும் ஆபத்துதான். அவை குழந்தைகளை தொடர்ச்சி யாக விளையாடவைக்கும். பிரச்சினைக்குரிய பெரியவர்களோடு தொடர்பினை ஏற்படுத்தி புதியதொந்தரவுகளையும் உருவாக்கும்.



## கல்வி உட்பட அன்றாட செயல்கள் அனைத்தையும் பாதிக்கும் ஆபத்து

உங்கள் குழந்தைகள் தினமும் ஒன்று அல்லது 2 மணித்தியாலத்துக்கு அதிகமாக மொபைலில் கேம்ஸ் விளையாடினால் உடனே அதை கட்டுப்படுத்துங்கள். ஒரு மணி நேரத்துக்கு மேல் விளையாட அனுமதிக்காதீர்கள். உங்கள் குழந்தை இந்த விளையாட்டுக்கு அடிமையாகி இருந்தால் உடனே விளையாட்டில் இருந்து விடுபடச்செய்ய முயற்சிக்க வேண்டாம்.

படிப்படியாக விளையாடும் நேரத்தின் அளவை குறைத்துக் கொண்டே, அதற்கு பதிலாக நல்ல பொழுதுபோக்கு களில் ஈடுபட ஏற்பாடு செய்யுங்கள். 'விளையாட்டில் இருந்து விலகி, முழு நேரமும் படிக்க வேண்டும்' என்பது போல் வற்புறுத்த வேண்டாம். 'அந்த விளையாட்டில் இருந்து விடுபட்டால் பூங்காக்கள், கடற்கரைக்கு உல்லாசம் மற்றும் நல்ல சினிமாக்களுக்கு கூட்டி செல்வேன். நீச்சல் போன்ற பயிற்சிக ளுக்கு அனுமதிப்பேன்' என்று கூறி, குழந்தைகளை ஊக்கு வியுங்கள்.

உங்கள் குழந்தை மொபைல் கேம்ஸ்களுக்கு அடிமையாகிவிட்டால் குழந்தைக்கு மட்டுமல்ல, பெற்றோர் களுக்கும் உளவள ஆற்றுப்படுத்தல் அவசியம். அதற்காக மனோதத்துவ நிபுணர்களின் ஆலோசனையைப் பெறுவதும் முக்கியம்.

# மூல நோய் பிரச்சினையால் அவதியா? குப்பைமேனி நல்ல தீர்வைத் தரும்!



குப்பைமேனி நெஞ் சுக்கோழையை நீக்கும். இருமலைக் கட்டுப் படுத்தும். விஷக்கடி, ரத்த மூலம், வாதநோய், நமச்சல், ஆஸ்துமா, குடற் புழுக் கள், மூட்டுவலி மற் றும் தலைவலி போன்ற நோய் களைக் குணப்படுத்தப் பயன்படுகிறது. இலை வாந்தி உண்டாக்கிக் கோழை அகற்றியாகவும். வேர் மல மிளக்கியாகவும் பயன்படுகின்றன.

இதன் சமூல சூரணம் 1 சிட்டிகை நெய்யில் காலை மாலை ஒரு மண்டலம் கொடுக்க 8 வித பவுத்திர நோயும் தீரும். வேர்சூரணம் 1 லீற்றர் நீரில் 1 பிடி போட்டு 8 இல் ஒன்றாய் காய்ச்சிக் கொடுக்க நாடா புழு, நாக்குப்பூச்சி நீங்கும். பேதியாகும் சிறுவர்களுக்குப் பாதியளவு கொடுக்கவும்.

மூலநோய் ஒரு சிக்கலான நோய். அறுவை செய்தாலும் வளரும். மூலத்திற்குக் குப்பைமேனி சிறந்த மருந்தாகும். பூத்த குப்பைமேனியை வேறுடன் பிடுங்கி நிழலில் உணர்த்தி சூரணம் செய்து இதில் 2.5 கிராம் அளவு பசும் நெய்யில் காலை மாலை சாப்பிடுக, 48 நாள் சாப்பிட எந்தவகை மூல மும் முற்றிலும் குணமாகும் மோரில் சாப்பிட வேண்டும். புளி, காரம் உணவில் சேர்த்துக் கொள்ளாவிட்டால் விரைந்து குணமடையும்.

குடற்புழுவான நாடாப்புழு, கீரிப் பூச்சி ஆகிய வற்றுக்கு, இதன் வேர் 50 கிராம்200 மி.லீ. நீரில் காய்ச்சி குடிநீராக அருந்த, பூச்சிகள் அனைத்தும் வெளியேறும்.

குப்பைமேனிச் சாற்றில் சுண்ணாம்பு கலந்து, நாய், பாம்பு, எலி, முதலியன வற்றின் கடிவாயில் தடவ குணமடையும். மேகப்புண்ணும் குணமடையும்.

ஆமணக்கெண்ணையில் இந்த இலையை வதக்கி இளஞ் சூட்டுடன் வைத்துக் கட்ட படுக்கைப் புண், மூட்டு வீக்கம், வாத வலி தீரும்.

குப்பைமேனி இலையின் பொடியை மூக்கில் பொடிபோல் இழுக்க நீர் வடிந்து தலைவலி உடனே குணமடையும். இதனை நசியமிடுதல் என்பர்.

குப்பைமேனி, மஞ்சள், உப்பு மூன்றும் அரைத்துப் பூசி ஒரு மணி நேரம் சென்று குளித்துவர சொறி, சிரங்கு, படை குணமடையும்.

எல்லா வகையான புண்களுக்கும் இதன் இலையுடன் மஞ்சள் வைத்து அரைத்துப் பூச குணமடையும், மேனி மீண்டும் எழிலோடு விளங்கும்.

# சுவாமி விவேகானந்தர் தந்த கங்கை நீருடனான ஜாடி

மேலைநாடுகளுக்கு சுவாமி விவேகானந்தர் இரண்டாம் முறையாகக் கப்பலில் புறப்பட்டார். 1899 ஜுன் 24 இல் கப்பல் சென்னை வந்து சேர்ந்தது. சுவாமி துரியானந்தரும் சகோதரி நிவேதிதையும் சுவாமிஜியுடன் பயணித்தனர்.

சென்னை மடத்தில் பூஜைக்காக கங்கை நீர் தேவைப்பட்டது. சுவாமிஜியிடம் சசி மகராஜ் அதைக் கேட்டிருந்தார். எனவே ஒரு பெரிய பீங்கான் ஜாடியில் சுவாமிஜி கங்கை நீரைக் கொண்டு வந்தார். அந்த சமயத்தில் துரதிர்ஷ்டவசமாகக் கல்கத்தாவில் பிளேக் என்னும் கொள்ளை நோய் பரவியிருந்தது. சுவாமிஜி கப்பலிலிருந்து தரையில் இறங்க அனுமதிக்கப்படவில்லை. ஆகையால் சசி மகராஜ் ஒரு படகை அமர்த்திக் கொண்டு கப்பலுக்கு அருகில் சென்றார். சுவாமிஜிக்காகத் தான் அன்புடன் கொண்டு சென்றிருந்த இனிப்புக்களையும் உணவு வகைகளையும் ஒரு கூடையில் வைத்தார். கூடை மேலே ஏற்றப்பட்டது. அதே கூடையில் கங்கை நீர் நிறைந்த பீங்கான் ஜாடி கீழே இறக்கப்பட்டது. அந்த ஜாடியை சுவாமிஜி ஒரு கயிற் றினால் அழுத்தமாகக் கட்டியிருந்தார்; அதை சசி மகராஜால் அவிழ்க்க முடியவில்லை. ஆகவே, சுவாமிஜி அதை அறுப்பதற்காக ஒரு கத்தியையும் கீழே போட்டார்.

திரும்புவதற்கு முன்னால் சசி மகராஜ் படகுக்காரனிடம் கப்பலை மூன்று முறை வலம் வருமாறு பணித்தார். இரண்டு பெரிய மகான்களின் பாதங்களை இன்று நம்மால் பணிய முடியவில்லை கப்பலை வலம் வந்தாவது நாம் திருப்தி அடைவோம் என்றார். சுவாமிஜி கொண்டுவந்தது என்பதற்காக அந்த ஜாடியையும் அவரது திருக்கரங்கள் பட்ட– என்பதற்காக அந்தக் கத்தியையும் சசி மகராஜ் பூஜையறையில் வைத்து வழிபடத் தொடங்கினார். அவை இன்றும் பாதுகாக்கப்படுகின்றன.

## நிறம் தீட்டலாம் வாங்க!



## விடுகதைகளும் விடைகளும்

* காற்றைக் குடித்து காற்றில் பறப்பான், அவன் யார்?
  பலூன்

* பச்சை நிற அழகிக்கு உதட்டுச் சாயம் பூசாமலே சிவந்தவாய் அவள் யார்?
  கிளி

* அம்மா படுத்திருக்க மகள் ஓடித்திரிவாள் அது என்ன?
  அம்மி குளவி

* கன்று நிற்க கயிறு மேயுது அது என்ன?
  பூசணிக்கொடி

# யாழில் இடம்பெற்றுவரும் வன்முறை செயற்பாடுகளின் பின்னணிகள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டுள்ளதா?

## டக்ளஸ் எம்.பி. அமைச்சர் ரஞ்சித் மத்துமபண்டாரவிடம் கேள்வி

கொழும்பு, ஓக. 24

யாழ். குடாநாட்டில் இடம்பெற்று வருகின்ற வன்முறை செயற்பாடுகளின் பின்னணிகள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டுள்ளனவா? என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ்தேவானந்தா பொது நிர்வாக, முகாமைத்துவ மற்றும் சட்டம் ஒழுங்கு அமைச்சர் ரஞ்சித் மத்துமபண்டாரவிடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

நாடாளுமன்றில் நடைபெற்ற கேள்வி நேரத்தின்போதே டக்ளஸ் எம்.பி. இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

யாழ். குடாநாட்டில் மீண்டும் சமூக விரோத செயற்பாடுகள் மிக கொடூரமாகவும், பரவலாகவும் அதிகரித்துள்ளன. இத்தகைய செயற்பாடுகளைக் கட்டப்படுத்தும் வகையில் தாங்கள் அண்மையில் யாழ் குடாநாட்டுக்கான நேரடி விஜயத்தை மேற்கொண்டு, உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாகக்கூறப்பட்ட போதிலும், யாழ் குடாநாட்டில் இத்தகைய சம்பவங்கள் குறைவின்றி தொடர்ந்த வண்ணமே இருக்கின்றன.

பட்டப் பகல் நேரங்களிலும்கூட பகிரங்கமாகவே இத்தகைய வன்முறைச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமையால், யாழ் குடாநாட்டு மக்கள் சட்டம் ஒழுங்கினைப்பேணக்கூடியவர்கள் மீது முழுமையாகவே நம்பிக்கை இழந்தவர்களாகக் காணப்படுகின்றனர்.

இந்த வகையில் யாழ். குடாநாட்டில் பரவலாக வாள்வெட்டு, கொள்ளை, வல்லுறவு, வாகனங்கள் மற்றும் சொத்துக்களுக்கு தீ வைப்பு, வர்த்தகர்கள் மீதான



அச்சுறுத்தல்கள் போன்ற சம்பவங்கள் சர்வ சாதாரணமாக இடம்பெற்று வருகின்றன. வாள்வெட்டுத் தாக்குதலுக்கு உள்ளாகி மருத்துவமனையில் சிகிச்சைப் பெறுவோரைக்கூட மருத்துவமனைக்கே சென்று தாக்கும் சம்பவங்களும் இடம் பெற்றுள்ளன. அதே நேரம், கடந்த 30 ஆம் திகதி யாழ்ப்பாணம்,வண்ணார் பண்ணை ஜே/100 கிராம சேவையாளர், ஒரு குழுவினரால் கழுத்தில் வாளை வைத்து அச்சுறுத்தப்பட்ட சம்பவமும் இடம்பெற்றுள்ளது. இந்தநிலையில், இத்தகைய வன்முறைச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற நபர்கள் கைது செய்யப்படாத நிலையும் தொடர்வதாகவே எமது மக்கள் தெரிவிக்கின்றனர்.

ஒரு சில நபர்கள் கைது செய்யப்படுவதாகக் கூறப்பட்டாலும், அந்த நபர்கள் உண்மையிலேயே மேற்படி சம்பவங்களுடன் தொடர்புகொண்டவர்களா? என்ற சந்தேகமும், மேற்படி சம்பவங்களுடன் தொர்புடையதாக ஆதாரங்களுடன் கைது செய்யப்படுகின்ற நபர்களைசட்டத்தரணிகளான உள்ளூர் அரசியல்வாதிகள் காப்பாற்ற முன்வரும் நிலைமைகளும் இருப்பதால், இத்தகைய அரசில் வாதிகளுக்கும் மேற்படி வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புகள் இருக்குமோ என்ற சந்தேகமும் எமது மக்கள் மத்தியில் இருந்து வருகின்றது.

இந்த நிலையில் தற்போது வட்டுக் கோட்டை, அராலி உள்ளிட்ட பகுதிகளில் ஒரு வகை குள்ள மனிதர்களின் சமூக அச்சுறுத்தல் செயற்பாடுகள் இரவு வேளைகளில் – குறிப்பாக – இரவு 7 மணி தொடக் கம் விடியும் வரையில் தொடர்ந்து மேற் கொள்ளப்படுவதாலும் எமது மக்கள் பெரும் பதற்றத்துடன் வாழவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

கடந்த காலத்தில் 'கிறீஸ் பூதம்' கிளம்பி எமது மக் களை பதற்றத்துக்கு உள்ளாக்கியிருந்த நிலையில், நேரடியாகவே அரசுடன் கலந்துரையாடப்பட்டு, அந்த செயற்பாடு இல்லாதொழிக்கப்பட்டது. அந்த வகை யில் இந்த 'குள்ளர்' வேலைத்திட்டமும் 'கிறீஸ்பூதம்' போன்றதொரு செயற்பாட் டின் பின்னணியா? என்ற சந்தேகம் எழுகின்றது.

தென்பகுதியிலும் கொலைகள், கொள்ளைகள் உள்ளிட்ட சட்டவிரோத செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதைக் காண முடிகின்ற போதிலும், யாழ்குடாநாட்டில் இத்தகைய வன்முறைச் செயற்பாடுகள் திட்டமிட்டே மேற்கொள்ளப்படுவதாகவே தெரிய வருகின்றது.

அந்த வகையில், யாழ் .குடாநாட்டில் இடம்பெற்று வருகின்ற வன்முறை செயற்பாடுகளின் பின்னணிகள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டுள்ளனவா?

மேற்படி வன்;முறைச் செயற்பாடுகளுடன் போதைப் பொருள் கடத்தல்காரர்களுக்கு, போதைப் பொருள் வர்த்தகர்களுக்கு தொடர்பு இருக்கின்றதா?

மேற்படி வன்முறைச் சம்பவங்களின் பின்னணியில் அரசியல் காரணங்கள் அல்லது அரசியல்வாதிகளின் தொடர்புகள் ஏதும் இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளனவா?

யாழ். குடாநாட்டு மக்களை அச்சுறுத்தி வருகின்ற குள்ள மனிதர்கள் தொடர்பில் ஆராயப்பட்டு, உரியநபர்கள் இனங்காணப்பட்டுள்ளனரா?

மேற்படி சம்பவங்களை கட்டுப்படுத்துவதற்கு இதுவரை எடுத்துள்ள நடவடிக்கைகள் உரிய பயன்களை அளிக்காமையினால் இத்தகையசம்பவங்கள் அதிகளவில் தொடர்கின்றன என்பதால், இத்தகைய சம்பவங்களை கட்டப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு உரிய நடவடிக்கைகள் என்ன எனக் கருதுகின்றீர்கள்? அத்தகைய உரிய நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப் படுகின்றனவா?

யாழ். குடாநாட்டில் சட்டம், ஒழுங்கு நடவடிக்கைகளை பேணுவதில் அசிரத்தையாக இருக்கும் அல்லது திறமை, ஆளுமையற்றிருக்கும்பொலிஸ் அதிகாரிகளை மாற்றி, திறமையும், ஆளுமையும் கொண்ட அதிகாரிகளை நியமித்து, இப்பிரச்சினையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியாதா? என அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டாரவிடம் டக்ளஸ்தேவானந்தா எம்.பி. கேள்வி எழுப்பியுள்ளார்.

(கு)

# கிளிநொச்சி புதிய சந்தைக்கு ரூ. 20 கோடி ரூபா நிதி விடுவிப்பு; கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் இப்படிக் கூறுகின்றார்

## ஆனால் அரச அதிபர் அப்படி ஏதும் இல்லை என்கிறார்

கிளிநொச்சி மாவட்டத்தின் புதிய சந்தை தொகுதி அமைப்பதற்கு முதற்கட்டமாக 20 கோடி ரூபா நிதி விடுவிக்கப்பட்டுள்ளது என கரைச்சி பிரதேசசபையின் தவிசாளர் அ.வேழமாலிகிதன் தெரிவித்துள்ளார்.

ஆனால், சந்தைதொகுதிஅமைப்பதற்கு இதுவரை எவ்வித நிதியும் விடுவிக்கப்படவில்லை என கிளிநொச்சிமாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் புதிய மாடி சந்தைக் கட்ட தொகுதி அமைப்பதற்கு நகர அபிவிருத்தி அதிகார சபையால் 76 கோடி 7 லட்சம் ரூபாவில் திட்டமிடல் மேற்கொள்ளப்பட்டு முதற்கட்டமாக இவ்வருடம் 20 கோடி ரூபா நிதியும் விடுவிக்கப்பட்டுள்ளது என கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் அ. வேழமாலிகிதன் சந்தை வர்த்தகர்களுடனான சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை மாலை கரைச்சி பிரதேச சபையில் சந்தை வர்த்தகர்களுடன் இடம்பெற்ற சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அங்கு தவிசாளர் மேலும் தெரிவிக்கையில் –

கிளிநொச்சி மாவட்டத்தின் சேவை சந்தைக்குமூன்று மாடிகளை கொண்ட புதிய சந்தை கட்டடத் தொகுதி அமைப்பதற்கு திட்டமிடல்கள் மேற் கொள்ளப்பட்டு அதனை அமைப்பதற்கு இந்த வருடம் 20 கோடி ரூபா நிதி விடுவிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்தும் மூன்று கட்டங்களாக நிதிவிடுவிக்கப்படும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

இது தொடர்பில் கிளிநொச்சி மாவட்ட அரசஅதிபர்சுந்தரம்அருமைநாயகம் தெரிவிக்கையில் –

புதிய சந்தை கட்டடம் அமைப்பதற்கான எவ்வித நிதியும் இதுவரை விடுவிக்கப்படவில்லை, ஆனால், அற்கான அமைச்சரவை அனுமதி மாத்திரமே கிடைத்துள்ளது எனத் தெரிவித்த அவர் இந்த சந்தைக்கான நிதி பெரும் நிதி என்பதனால் அவை மாவட்டச் செயலகத்திற்கு வழங்கக் கூடாது எனவும் அமைச்சுக்கே வழங்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

# தனியார் வைத்தியசாலைக்கான கட்டணங்களை ஒழுங்குறுத்தும் நடவடிக்கை அடுத்த வாரம்!

தனியார் வைத்தியசாலைகளுக்கான கட்டணங்களை ஒழுங்குறுத்தும் நடவடிக்கை அடுத்த வாரம் இடம்பெறும் என்று சுகாதார போசாக்கு மற்றும் சுதேச வைத்தியத் துறை அமைச்சர் டொக்டர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

கட்டணஒழுங்குறுத்தலுக்கான ஆவணத்தை விரைவில் தயாரிக்குமாறு அமைச்சர், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்தியர் அனில் ஜயசிங்கவுக்கு பணிப்புரை வழங்கியுள்ளார்.

இறுதி அறிக்கை இன்னும் இரண்டு நாள்களுக்குள் அமைச்சரிடம் கையளிக்கப்படவுள்ளது. அதைத் தொடர்ந்து இந்த யோசனை வர்த்தமானியில் பிரசுரிக்கப்படவுள்ளது. ஆய்வுகூட பரிசோதனை, மகப்பேறு, சத்திரசிகிச்சை என்பனவற்றுக்காக அறவிடப்படும் கட்டணங்கள் இதன்போது ஒழுங்குறுத்தப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# பிரபல நடிகை மாலினி பொன்சேகாவின் பாராட்டு விழா ஜனாதிபதி தலைமையில்

சிங்கள திரையுலகின் புகழ்பூத்த பிரபல நடிகையான மாலினி பொன்சேகாவின் திரையுலக வாழ்வில் 50 ஆண்டுகால சேவை பாராட்டு விழா ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் நேற்று முன்தினம் பிற்பகல் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

பல கதாபாத்திரங்களையும் படைப்புக்களையும் உயிரோட்டத்துடன், திரையொளியில் காண்பிக்கும் திரைக்காவியங்களில் தனது அற்புத நடிப்பை வெளிக்காட்டியதுடன் தனக்கே உரித்தான ஒரு நடிப்புப்பாணியை கலைத்துறையில் உருவாக்கிக் கொண்டு சிங்கள திரைப்படத்துறைக்கு அரும் பணியாற்றிய பிரபல சினிமா நடிகையான கலாநிதி மாலினி பொன்சேகாவின் ஐம்பதாண்டு கால கலை சேவையை பாராட்டும் முகமாக கலாநிதி மாலினி பொன்சேகா மன்றத்தினால் இந்த பாராட்டு விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பொன் விழா கொண்டாட்டத்தில் கலந்துகொண்ட ஜனாதிபதி மாலினி பொன்சேகாவுக்கு விசேட பரிசிலும் பண அன்பளிப்பும் வழங்கினார்.

பிரபல இந்திய திரைப்பட விமர்சகர் சோமா செட்டர்ஜி அம்மையார் இதன்போது நினைவுரை ஆற்றியதுடன் பிரபல திரைப்பட இயக்குநர் அசோக்க ஹந்தகம சிறப்புரை ஆற்றினார்.

இந்த விழாவில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சபாநாயகர் கரு ஜயசூரிய, அர்ஜுன ரணதுங்க, லசந்த அழகியவண்ண, பந்துல குணவர்தன உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகளும், ஜனாதிபதியின் செயலாளர் உதய ஆர்.செனவிரத்ன, அசேல இத்தவெவ, புத்திஜீவிகள், கலைஞர்கள் உள்ளிட்ட அதிதிகள் பலரும் கலந்து கொண்டனர்.

# மேலும் 50 'உதாகம்மான' கிராமங்களை அமைக்க 60 கோடி ரூபாவை வழங்க இந்திய அரசு இணக்கம்

கொழும்பு, ஓக. 24

இலங்கையில் 50 உதாகம்மான கிராமங்களை அமைப்பதற்காக வழங்கப்பட்டுள்ள 60 கோடி ரூபாவுக்கு மேலதிகமாக மேலும் 50 கிராமங்களை அமைக்க 60 கோடி ரூபாவை வழங்க இந்திய அரசு இணக்கம் தெரிவித்துள்ளது என அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை சூரியவெவ பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள சமன் மல்கம உதாகம்மான கிராமத்தை மக்கள் பாவனைக்காக கையளிக்கும் நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

# முன்னாள் எம்.பி. வீட்டில் தற்கொலைத் தாக்கு; ஈராக்கில் 6 பேர் உடல் சிதறிப் பலி; 7 பேர் காயம்!



திக்ரித், ஓக.24

ஈராக்கில் முன்னாள் எம்.பி. வீட்டில் மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் சன்னி இனத்தைச் சேர்ந்த பழங்குடி போராளிகள் 6 பேர் உடல் சிதறி பலியாகியுள்ளனர். 7 பேர் படுகாயம் அடைந்தனர்.

ஈராக்கின் சலாகுதீன் மாகாணத்தின் தலைநகரான திக்ரித்துக்கு வடக்கே சிர்கத் நகரம் உள்ளது. இதையொட்டிய ஆஸ்திரா என்ற கிராமத்தில், அந்த நாட்டின் முன்னாள் எம்.பி. அத்னன் அல் கானத் வீடு உள்ளது. நேற்று முன்தினம் அதிகாலை வேளை, இடுப்பில் வெடி குண்டுகள் பொருத்திய 'பெல்ட்' அணிந்து வந்த தற்கொலைப்படை பயங்கரவாதி ஒருவர், அங்கு சென்று குண்டுகளை வெடிக்க வைத்தார். பலத்த சத்தத்துடன் குண்டுகள் வெடித்துச் சிதறின.

இதில் அங்கு இருந்த சன்னி இனத்தைச் சேர்ந்த பழங்குடி போராளிகள் 6 பேர் உடல் சிதறி பலியாகினர். 7 பேர் படுகாயம் அடைந்தனர்.

இந்தச் சம்பவத்தை அடுத்து அங்கு விரைந்த மீட்பு படையினர் படுகாயம் அடைந்தவர்களை மீட்டு வைத்திய சாலைக்கு அனுப்பி வைத்தனர். இந்த தற்கொலைப்படை தாக்குதலுக்கு எந்த ஒரு பயங்கரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை.

இருந்தபோதிலும், சம்பவம் நடந்த பகுதியில் ஐ.எஸ். பயங்கரவாதிகள் இருந்து வருவதால், அவர்களே இந்த தாக்குதலை நடத்தி இருக்கக்கூடும் என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

சிர்கத் பகுதி 2014 ஆம் ஆண்டில் ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பினரின் கட்டுப்பாட்டில் இருந்தது. ஆனால் 2016 ஆம் ஆண்டு அதை அமெரிக்கப் படைகளின் ஆதரவுடனும், பழங்குடி போராளிகளின் உதவி யுடனும் ஈராக் படையினர் மீட்டு விட்டனர். ஆனாலும் அங்கு குறிப்பிட்ட எண்ணிக்கையில் ஐ.எஸ். பயங்கரவாதிகள் பதுங்கி இருந்து கொண்டு பயங்கரவாத செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பாகிஸ்தானில் ஜனாதிபதி தேர்தல்:
# இம்ரான் கானின் ஆளும் கட்சிக்கு எதிராக எதிரணிகளின் பொது வேட்பாளர் களத்தில்!



இஸ்லாமாபாத், ஓக.24

பாகிஸ்தான் ஜனாதிபதி பதவிக்கு நடக்க உள்ள தேர்தலில் பிரதமர் இம்ரான் கான் நிறுத்தியுள்ள வேட்பாளரை எதிர்த்து, நவாஸ் ஷெரீப் மற்றும் பிலாவல் பூட்டோ கட்சி பொது வேட்பாளரை நிறுத்த முடிவு செய்துள்ளன.

பாகிஸ்தானின் தற்போதைய ஜனாதிபதி மம்னூன் உசைனின் பதவிக்காலம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்துடன் முடிவடைய உள்ளது. இதனால், செப்டம்பர் 4 ஆம் திகதி ஜனாதிபதி தேர்தல் நடத்த அந்நாட்டு தேர்தல் ஆணையம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

சமீபத்தில் பிரதமராக பதவியேற்ற இம்ரான் கான் தனது பி.டி.ஐ. கட்சியின் மூத்த தலைவர் ஆரிப் அல்வியை வேட்பாளராக நிறுத்தியுள்ளார். அவருக்கு பல்வேறு சிறிய கட்சிகள் ஆதரவு அளிக்க முன்வந்துள்ளன.

இந்த நிலையில், பாகிஸ்தானின் முன்னாள் ஆண்ட கட்சிகளான நவாஸ் ஷெரீப்பின் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சி, பிலாவல் பூட்டோவின் பாகிஸ்தான் மக்கள் கட்சி இணைந்து ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளரை நிறுத்த முடிவு செய்துள்ளன.


# சந்திரனில் உறைந்த நிலையில் ஐஸ் படிமங்கள்: நாசா உறுதி

வொஷிங்டன், ஓக.24

சந்திரனில் உறைந்த நிலையில் ஐஸ் படிமங்கள் உள்ளதால் அங்கு தண்ணீர் இருப்பதற்கான சாத்தியம் உள்ளது என நாசா விஞ்ஞானிகள் உறுதி செய்துள்ளனர்.

சந்திரனில் ஆய்வு நடத்த கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவின் 'இஸ்ரோ' நிறுவனம் சந்திராயன் - 1 என்ற விண்கலத்தை அனுப்பியது.

அந்த விண்கலம் நடத்திய ஆய்வில் சந்திரனில் உறைந்த நிலையில் ஐஸ் படிமங்கள் இருக்கின்றமை கண்டு பிடிக்கப்பட்டது. அவை கறுப்பு நிறத்திலும், மிகவும் குளிராகவும் இருந்தது. எனவே இங்கு உறைந்த நிலையில் தண்ணீர் இருப்பதற்கான சாத்தியக்கூறு உள்ளது என இஸ்ரோ தெரிவித்தது.



அது குறித்து அமெரிக்காவின் 'நாசா' விஞ்ஞானிகள் ஆய்வுமேற்கொண்டனர். அதில் சந்திரனின் தென் துருவத்தில் பெரும்பாலான ஐஸ் படிமங்கள் மிகவும் கடினமான நிலையில் அடர்த்தியாக உள்ளன. அதே நேரத்தில் வடதுருவத்தில் உள்ள ஐஸ் படிமங்கள் பரந்து விரிந்த நிலையில் அடர்த்தியற்று இருக்கின்றமை தெரிய வந்துள்ளது.

எனவே சந்திரனில் சந்திராயன்-1 விண்கலம் கண்டுபிடித்தது ஐஸ் படிமங்கள்தான். ஆகவே அங்கு தண்ணீர் இருப்பதற்கான சாத்தியம் உள்ளது என நாசா விஞ்ஞானிகள் உறுதி செய்துள்ளனர்.

# நிதி மோசடி வழக்கில் உதவியாளர் குற்றவாளி என நீதிமன்றம் தீர்ப்பு

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்பின் பதவிக்கே உலை வைக்கலாம் என எதிர்பார்க்கப்பட்ட வழக்கில் அவரது முன்னாள் உதவியாளர் பால் மானபோர்ட் குற்றவாளி எனத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 2016 ஆம் ஆண்டு நடந்த ஜனாதிபதி தேர்தலில் ட்ரம்ப் வெற்றிக்கு ரஷ்ய உளவுத்துறை உதவியது என எழுந்த புகார் தொடர்பாக எவ்.பி.ஐ. அதிகாரி முல்லர் தலைமையிலான குழு விசாரித்து வருகிறது.

இதற்கிடையே, கடந்தாண்டு ஜனாதிபதி ட்ரம்பின் பிரசார குழு தலைவராக இருந்த பால் மனாபோர்ட், உதவியாளர் ரிக் கேட்ஸ் ஆகியோர் உக்ரைனைச் சேர்ந்த அரசியல்வாதி விக்டர் யானு கோவிச், அவரது ரஷ்ய ஆதரவு அரசியல் கட்சியிடமிருந்து பல மில்லியன் டொலர் நிதி திரட்டினர் என குற்றம் சாட்டப்பட்டது.

இவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டபோது, நிதிமோசடி, வங்கிக் மோசடி, வெளிநாட்டு வங்கிக் கணக்குகளை மறைத்தது உட்பட பல குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன. இதனை அடுத்து, தலா 50 லட்சம் டொலர் பிணையில் அவர்களை விடுவித்த நீதிமன்றம் வீட்டுக்காவலில் வைத்தது.




விர்ஜீனியாமாகாணத்தின் அலெக்ஸாண்ட்ரா நீதிமன்றத்தில் நடந்து வந்த பால் மானபோர்ட் மீதான வங்கி, வரி மோசடி வழக்குகள் மீதான விசாரணை முடிந்ததை அடுத்து, 8 வழக்குகளில் அவர் குற்றவாளி என நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. இது ஜனாதிபதி தேர்தலில் ரஷ்ய தலையீடு தொடர்பாக விசாரித்து வரும் முல்லர் குழுவுக்கு கிடைத்த முன்னேற்றமாக கருதப்படுகிறது.

மேலும், மானபோர்ட் மீதான மற்ற 10 வழக்குகளில் தீர்ப்பு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. தற்போது அவர் குற்றவாளி என அறிவிக்கப்பட்ட வழக்குகளில் குறைந்தது 80 ஆண்டுகள் சிறை தண்டனை கிடைக்கும் என கூறப்படுகிறது.

இந்தத் தீர்ப்பு ட்ரம்ப் தரப்பை அதிர்ச்சி அடைய வைத்துள்ளது. இந்த அதிர்ச்சி அவருக்கு தீருவதற்குள்ளாக இன்னொரு அதிர்ச்சி ட்ரம்ப்புக்கு கிடைத்தது. அவரது முன்னாள் வழக்கறிஞர் மைக்கேல் கோஹன் 2016 ஆம் ஆண்டு நடந்த ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்துக்கு பயன்படுத்திய நிதி தொடர்பாக சட்டத்தை மீறியதாக மான்ஹாட்டன் நீதிமன்றத்தில் குற்றத்தை ஒப்புக் கொண்டார்.

வேட்பாளரின் உத்தரவுக்கு இணங்க தேர்தல் முடிவுகளில் பாதிப்பு ஏற்படுத்துவதை நோக்கமாக கொண்டு தான் இவ்வாறு செய்தேன் என அவர் கூறினார். ட்ரம்புடன் தொடர்பு இருந்தது என குற்றம் சாட்டப்பட்ட பெண்களுக்கு ரகசிய மாகபணம் அளித்தமை தொடர்பாகவும் கோஹன் சாட்சியம் அளித்திருந்தார்.

இந்த வழக்கு விசாரணையில், கோஹன் வரி மற்றும் வங்கி பண மோசடி உட்பட 8 அம்சங்களில் நடந்த முறைகேடுகளை ஒப்புக் கொண்டுள்ளார். இதனால், அவருக்கும் சிறை தண்டனை கிடைக்க வாய்ப்பு உள்ளது.

மேற்கண்ட இரு சம்பவங்கள் முல்லர் குழுவுக்கு சாதகமாகவும், ட்ரம்ப்புக்கு பாதகமாகவும் அமைந்துள்ளன. இதனால், ட்ரம்ப்பின் பதவிக்கு ஆபத்து வரலாம் என அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# ரஷ்யா அமைதி பேச்சுக்கு அழைப்பு; தலிபான் ஏற்பு; நிராகரித்தது ஆப்கன்!

ஆப்கானிஸ்தான் அரசு மற்றும் தலிபான் பயங்கரவாதிகளுக்கு இடையேயான அமைதி பேச்சு தொடர்பாக ரஷ்யா விடுத்த அழைப்பை தலி பான்கள் ஏற்றுக் கொண்ட நிலையில், ஆப்கானிஸ்தான் அரசு அழைப்பை நிராகரித்துள்ளது.

தலிபான்களைப் பொறுத்தவரை ஆப்கானிஸ்தான் மீது சோவியத் யூனியன் எனப்பட்ட தற்போதைய ரஷ்ய படையெடுத்ததற்கு எதிராக அமெரிக்காவின் ஆதரவோடு உருவாக்கப்பட்ட ஒரு போர்ப்படை ஆகும். அப்போதைய ஆப்கானிஸ்தான் ஆட்சிக்கு ஆதரவாக சோவியத் யூனியன் செல்வாக்கு செலுத்த முயன்றதால் பாகிஸ்தான் அதிர்ந்தது.

இதனால், பாகிஸ்தானின் மதரசாக்களில் படித்துக் கொண்டிருந்த மாணவர்களுக்கு அமெரிக்காவின் துணையோடு ஆயுதப் பயிற்சி அளித்து சோவியத் யூனியன் படைகளை எதிர்த்துப் போரிடத் தயார் செய்தது பாகிஸ்தான் அரசு. அவர்களே பின்னாளில் தலிபான்களாக மாறினர்.

தலிபான்கள் என்றால் மாணவர்கள் என்று அர்த்தம். பின்னர், 90களில் அவர்கள் ஆப்கானிஸ்தானில் ஆட்சியைக் கைப்பற்றிய பிறகு அமெரிக்கா தொடர்ந்து அவர்களுக்கு உதவி செய்து வந்தது. இந்த காட்டுமிராண்டிக் கூட்டத்தின் கையில் சிக்கி நாடு சின்னாபின்னமானது. ஆனால், தலிபான்களின் மனித உரிமை மீறல் கொடுமைகளை அமெரிக்கா கண்டுகொள்ளவில்லை. ஆனால், இரட்டை கோபுர தாக்குதலுக்கு பின்னர் தான் அமெரிக்காவிற்கு எதிரியாக மாறிப் போனது தலிபான் அமைப்பு.

அப்போது முதலாக ஆப்கானிஸ்தானில் அரசு படைக்கும், தலிபான் பயங்கரவாதிகளுக்கும் இடையே சுமார் 17 ஆண்டுகளாக உள்நாட்டு போர் நடைபெற்று வருகிறது. நாட்டின் பல பகுதிகளை பிடித்து வைத்துள்ள தலிபான் பயங்கரவாதிகள் தினம்தோறும் பாதுகாப்பு படையினருடன் ஆக்ரோஷமாக சண்டையிட்டு வருகின்றனர்.

அவ்வப்போது ஆப்கானிஸ்தான் அரசு அறிவிக்கும் போர் நிறுத்தங்களுக்கும் சம்மதிக்காமல் ரத்த வெறியுடனே தலிபான் பயங்கரவாதிகள் சுற்றித் திரிந்தனர். சமீபத்தில் பக்ரீத் பண்டிகையை முன்னிட்டு மீண்டும் ஓர் இடைக்கால போர் நிறுத்தத்துக்கு ஜனாதிபதி அஷ்ரப் கானி கடந்த 19 ஆம் திகதி அழைப்பு விடுத்தார். ஆனால் அதை தலிபான்கள் நிராகரித்தனர்.

இந்நிலையில், ஆப்கானிஸ்தான் அரசுக்கும், தலிபான் அமைப்பினருக்கும் இடையே அமைதி பேச்சு நடத்த தேவையான உதவிகளை ரஷ்யா செய்யும் என அறிவிப்பு வெளியானது. இதற்காக அமெரிக்கா, ஆப்கானிஸ்தான் மற்றும் தலிபான் அமைப்பை சேர்ந்த பிரதிநிதிகள் பங்கேற்கும் பேச்சு கூட்டத்தை மொஸ்கோவில் நடத்த வுள்ளோம் என ரஷ்யா அறிவித்தது.

ஆனால், இந்த பேச்சில் பங்கேற்க விருப்பம் இல்லை என ஆப்கானிஸ்தான் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தலிபான் மற்றும் ஆப்கானிஸ்தான் அரசுக்கு இடையிலான பிரச்சினைகளை இரண்டு தரப்புமே நேரடியாக பேசி தீர்த்துக்கொள்ளும் இதில், மூன்றாவது நபரின் (நாட்டின்) தலையீடு தேவையில்லை என அந்நாடு ரஷ்யாவுக்கு தெரிவித்துள்ளது.

மேலும், ஆப்கானிஸ்தான் அரசு அழைக்கும் அமைதி பேச்சுவார்த்தையில் வேண்டுமானால் ஆக்கபூர்வமாக பங்கேற்க தலிபான் அமைப்புக்கு ரஷ்யா அழுத்தம் கொடுக்க முயற்சிக்கலாம் என கூறி ரஷ்யாவின் முயற்சிக்கு முட்டுக்கட்டை போட்டுள்ளது.

இதற்கிடையே, ரஷ்யாவின் அமைதி பேச்சை ஏற்றுக்கொள்வதாக அறிவித்துள்ள தலிபான்கள் அந்த கூட்டத்திற்கு தங்களது தரப்பின் மூத்த உறுப்பினரை அனுப்பி வைக்க உள்ளோம் என்றும் தெரிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் உள்ள தலிபான்களுக்கு ரஷ்யா வான்வழி உதவிகளை வழங்கி வருகிறது என சமீபத்தில் அமெரிக்க தளபதி ஒருவர் குற்றச்சாட்டை கூறியிருந்த நிலையில் இந்த அமைதி பேச்சுக்கு ரஷ்யா முயன்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# பிரதமர் மோடியை நான் கட்டித் தழுவியமையை காங்கிரஸ் கட்சியினரே விரும்பவில்லை!

நாடாளுமன்றத்தில் பிரதமர் மோடியை தாம் கட்டித் தழுவிய நிகழ்வை காங்கிரஸ் கட்சியில் உள்ள சிலர் விரும்பவில்லை என ஜேர்மனியில் நடைபெற்ற கூட்டத்தில் ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி 4 நாள்கள் பயணமாக ஜேர்மனி மற்றும் பிரிட்டன் நாடுகளுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார்.

நேற்று முன்தினம் ஜேர்மனி சென்றடைந்த அவர், ஹம்பர்க் நகரில் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்தில் பங்கேற்று கலந்துரையாடினார். அப்போது, மத்திய அரசின் மீது விமர்சனங்கள் மூலம் பல்வேறு தாக்குதல்களைத் தொடுத்தார்.

கலந்துரையாடலின் போது தன்னிடம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதிலளித்து பேசிய போது அவர் தெரிவித்தவை வருமாறு–


ஜேர்மனியில் ராகுல் காந்தி தெரிவிப்பு

பா.ஜ.க. அரசு செயல்படுத்திய மூன்று திட்டங்கள் இந்திய மக்களிடையே கோபத்தை உருவாக்கியுள்ளன. அந்த மூன்றும், சிறுபான்மையினர் மற்றும் தலித்கள் கும்பல்களால் தாக்கப்படுவது, பணமதிப்பிழப்பு மற்றும் ஜி எஸ்.டி ஆகியவை தான்.

இந்தியாவின் வளர்ச்சி மற்றும் மாற்றங்கள் எந்த ஒரு தனிப்பட்ட சமூகத்தை சேர்ந்த மக்களுக்கான வளர்ச்சியாக மட்டுமே இல்லாமல், நாடு முழுதும் உள்ள பல்வேறு மொழிகளை பேசும், பல்வேறு சமூகங்களை சேர்ந்த மக்களை உள்ளடக்கிய அனைவருக்குமான வளர்ச்சியாக இருக்க வேண்டும் என்ற அடிப்படை சித்தாந்தத்தை பின்பற்றியே சுதந்திரம் பெற்றது முதலாக கடந்த 2014 ஆம் ஆண்டுவரை மத்தியில் ஆட்சி செய்த முந்தைய அரசுகள் செயல்பட்டன.

ஆனால், இவ்வாறான வளர்ச்சிக்கு பல ஆபத்துக்கள் உள்ளன. தலித்கள் மற்றும் கீழ் தட்டு வகுப்பினருக்கு இவ்வாறான வளர்ச்சி மற்றும் மாற்றங்கள் கிடைக்க கூடாது. இவை அனைத்தும் ஒரு குறிப்பிட்ட உயர் வகுப்பினர்களுக்கு மட்டுமே கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் இந்த அரசு செயல்பட்டு வருகிறது.

கீழ் தட்டு வகுப்பினர் மற்றும் தலித் சமூகத்தின் வளர்ச்சிக்காக நடைமுறைப்படுத்தப்பட்ட சட்டங்களை தாக்கி வலிமை இழக்க செய்யும் முயற்சியில் இவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

எனது பாட்டி மற்றும் தந்தையை வன்முறையில் இழந்தவன் நான், எனவே வன்முறையினால் தனிப்பட்ட முறையில் நான் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளேன். இதில் இருந்து மீண்டு வர எனக்கு கிடைத்த ஒரே வழி தவறு செய்தவர்களை மன்னிப்பது தான்.

நம் மீது மற்றவர்கள் வெறுப்பை உமிழ்ந்தாலும் பதிலுக்கு நாம் வெறுப்பை தூண்டும் வகையில் பேசக் கூடாது. என் மீது வெறுப்பை தூண்டும் விதமாக பிரதமர் தொடர்ந்து பேசி வருகிறார். ஆனால், அவரைப் போலவே பதிலுக்கு நானும் பேசாமல் இந்த உலகம் மிகவும் மோசமானது அல்ல என்பதை அவரிடம் கூற விரும்பினேன்.

அதற்காகவே அவர் இருக்கும் இடம் சென்று அவரை கட்டித் தழுவினேன். இந்த நற்குணத்தை தான் நாம் மகாத்மா காந்தியிடம் இருந்து கற்றுக் கொண்டோம்.

நாடாளுமன்றத்தில் நான் பிரதமரை கட்டித்தழுவியது காங்கிரஸ் கட்சியில் உள்ள சிலருக்கு பிடிக்கவில்லை. ஆனாலும் அவர்களின் எண்ணத்தை நான் ஆதரிக்கவில்லை என்றும் ராகுல் தெரிவித்துள்ளார்.

# சித்தராமையாவுக்கு துணை ஜனாதிபதி பதவி? கர்நாடக ஆட்சியைப் பிடிக்க பா.ஜ.க. வியூகம்!

சித்தராமையாவுக்கு துணை ஜனாதிபதி பதவி வழங்கி அவரது ஆதரவாளர்களின் ஆதரவுடன் கர்நாடகத்தில் ஆட்சியை பிடிக்க பா.ஜனதா புது வியூகம் வகுத்துள்ளது என தகவல் வெளியாகியுள்ளது.

கர்நாடகத்தில் முன்பு சித்தராமையா தலைமையில் காங்கிரஸ் ஆட்சி இருந்தது. சித்தராமையா 5 ஆண்டுகள் பதவி காலத்தை முழுமையாக நிறைவு செய்தார். ஊழல் குற்றச்சாட்டுகள் இல்லாததாலும், பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தியமையாலும், சட்டசபை தேர்தலில் மீண்டும் காங்கிரஸே வெற்றி பெறும் என்று பெரும்பாலானவர்கள் கணித்தனர்.

ஆனால் தேர்தல் முடிவுகள் அவ்வாறு அமையவில்லை. இந்த தோல்வியில் இருந்து சித்தராமையாவால் மீள முடியவில்லை. 2 தொகுதிகளில் போட்டியிட்ட அவர் சொந்த தொகுதியில் அதிர்ச்சி தோல்வி அடைந்தார். பாதாமி தொகுதியிலும் மிக குறைந்த வாக்குகள் வித்தியாசத்திலேயே வெற்றி பெற்றார்.

எந்த கட்சிக்கும் தனிப்பெரும்பான்மை கிடைக்காததால், காங்கிரஸ் மற்றும் ஜனதா தளம்(எஸ்) கட்சிகள் கூட்டணி அமைத்து ஆட்சியை பிடித்துள்ளன. ஜனதா தளம்(எஸ்) கட்சி முன்னாள் தலைவர் குமாரசாமி முதலமைச்சர் பதவியில் அமர்ந்துள்ளார். தேவேகவுடாவும், சித்தராமையாவும் அரசியலில் எதிரெதிர் துருவங்களாக உள்ளனர். அவர்கள் அவ்வப்போது பேசிக்கொண்டாலும் இருவரும் அரசியலில் பரம எதிரிகளாகவே பார்க்கப்படுகிறார்கள்.

குமாரசாமி முதலமைச்சர் ஆனதை சித்தராமையா சிறிதளவும் விரும்பவில்லை என்று கூறப்படுகிறது. அதனால் கூட்டணி ஆட்சி அமைந்ததில் இருந்து இந்த அரசின் செயல்பாடுகள் பற்றியோ அல்லது அரசியல் பற்றியோ அதிகம் பேசாமல் சித்தராமையா சற்று ஒதுங்கியே இருக்கிறார். தனது ஆட்சியில் கொண்டுவரப்பட்ட திட்டங்களை கைவிடும் முடிவை எதிர்த்து குமாரசாமிக்கு 4, 5 கடிதங்களை சித்தராமையா எழுதினார். கூட்டணி ஒருங்கிணைப்பு குழு தலைவராக சித்தராமையா இருக்கிறார். இந்த குழுவின் கூட்டம் நடந்து ஏறத்தாழ ஒரு மாதம் ஆகிவிட்டது.

இந்த நிலையில் சித்தராமையா தனது குடும்பத்தினருடன் வருகிற செப்ரெம்பர் மாதம் முதல் வாரத்தில் ஐரோப்பிய நாடுகளுக்கு சுற்றுலா செல்ல திட்டமிட்டுள்ளார். அந்த நேரத்தில் அவரது ஆதரவு எம்.எல்.ஏ.க்கள் 17 பேர் பதவியை ராஜினாமா செய்வார்கள் என்று தகவல் வெளியாகியுள்ளது. அவ்வாறு 17 எம்.எல்.ஏ.க்கள் ராஜினாமா செய்தால், காங்கிரஸ்–ஜனதா தளம் (எஸ்) கூட்டணி ஆட்சியின் பெரும்பான்மை பலம் குறைந்துவிடும். இதனால் குமாரசாமியின் கூட்டணி ஆட்சி நீடிக்குமா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

அதே நேரத்தில் பா.ஜனதாவுக்கு தனிச்சையாகவே பெரும்பான்மை கிடைத்துவிடும். இதன் மூலம் கர்நாடகத்தில் பா.ஜனதா ஆட்சி அமையும் என்று சொல்கிறார்கள். இதுபற்றி தகவல் அறிந்து வைத்துள்ள குமாரசாமி, அந்த திட்டத்தை முறியடிக்க தன்னிடம் ஒரு திட்டத்தை தயாரித்து வைத்துள்ளார் என தகவல்கள் வெளியாகியுள்ளன. பா.ஜனதா எம்.எல்.ஏ.க்கள் சிலரை இழுத்து ஆட்சியை தக்க வைத்துக் கொள்ள குமாரசாமி திட்டமிட்டுள்ளார் என சொல்லப்படுகிறது.

கூட்டணி ஆட்சியைக் கவிழ்க்க சித்தராமையா ஏன் முயற்சி செய்கிறார் என்ற கேள்வி அனைவரிடமும் எழுகிறது. கர்நாடகத்தில் கூட்டணி ஆட்சி அமைத்தபோதும், அந்த ஆட்சி அமைந்த பிறகும் சித்தராமையாவை காங்கிரஸ் தொடர்ந்து புறக்கணித்து வருவதாக பேசப்படுகிறது. தன்னை புறக்கணித்த காங்கிரஸுக்கு தக்க பாடம் புகட்ட வேண்டும் என்பது தான் சித்தராமையாவின் எண்ணமாக உள்ளது என சொல்லப்படுகின்றன.

பா.ஜனதா சார்பில் பீகார் முதலமைச்சர் நிதிஷ்குமார், சித்தராமையாவை தொடர்பு கொண்டு பேசினார் என்றும் 2022 ஆம் ஆண்டில் துணை ஜனாதிபதி பதவியை வழங்க பா.ஜனதா தயாராக இருக்கிறது என அவர் கூறியுள்ளார் என்றும் பரபரப்பு தகவல்கள் வெளியாகியுள்ளன.

## கருணாநிதி சமாதி பேரணியில் ஒரு லட்சம் பேர் பங்கேற்பர்

மு.க அழகிரி அறிவிப்பு



செப்ரெம்பர் 5 ஆம் திகதி நடைபெறவுள்ள கருணாநிதி சமாதியை நோக்கி செல்லும் பேரணியில் சுமார் ஒரு லட்சம் பேர் பங்கேற்பார்கள் என முன்னாள் மத்திய அமைச்சர் மு.க. அழகிரி தெரிவித்துள்ளார்.

தி.மு.க. தலைவர் கருணாநிதி மறைவுக்கு பின்னர், அவரது மகனும் முன்னாள் மத்திய அமைச்சருமான மு.க அழகிரி தீவிர அரசியலில் ஈடுபட முடிவெடுத்துள்ளார். எதிர்வரும் செப்ரெம்பர் 5 ஆம் திகதி சென்னையில் கருணாநிதி சமாதியை நோக்கி பேரணி நடத்தப்படும் எனவும் அவர் அறிவித்தார்.

இந்நிலையில், மதுரை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் அழகிரி தெரிவிக்கையில்–

தற்போது தி.மு.கவில் என்னை இணைப்பதாக தெரியவில்லை. நேரம் வரும் போது எனது ஆதங்கத்தை தெரிவிப்பேன். எதிர்வரும் செப்ரெம்பர் 5 ஆம் திகதி நடைபெறும் கருணாநிதி சமாதியை நோக்கி செல்லும் பேரணியில் சுமார் ஒரு லட்சம் பேர் பங்கேற்பார்கள். பேரணிக்கு பின்னர் எனது முடிவை தெரிவிப்பேன் என அவர் தெரிவித்துள்ளார்.

## தேசிய பேரிடர் மேலாண்மை கொள்கையின்படி வெளிநாட்டு நிதியை ஏற்கலாம்: கேரள முதல்வர்!

தேசிய பேரிடர் மேலாண்மை கொள்கை 2016 இன் படி வெளிநாட்டில் இருந்து வரும் நிதியுதவியை ஏற்க வேண்டும் என மத்திய அரசுக்கு கேரள முதல்வர் பினராயி விஜயன் கோரிக்கை விடுத்துள்ளார்.


கேரள மழை வெள்ளத்துக்கு நிவாரணமாக ஐக்கிய அமீரக அரசு ரூ.700 கோடி வழங்குவோம் என கூறியது. ஆனால், பேரிடர் வேளைகளில் வெளிநாடுகளில் இருந்து நிதியுதவி பெறுவதில்லை என மத்திய அரசு கொள்கை முடிவு வைத்துள்ளது என கூறப்பட்டு ஐக்கிய அமீரகத்தின் நிதியுதவியை ஏற்க மறுத்துள்ளது என தகவல்கள் வெளியாகின.

இது தொடர்பாக கேரள முதல்வர் பினராயி விஜயன் தெரிவிக்கையில்–

கேரளாவில் மீட்பு மற்றும் நிவாரண பணிகளில் ஈடுபட்ட வீரர்களுக்காக ஓகஸ்ட் 26 ஆம் திகதி நன்றி தெரிவிக்கும் நிகழ்ச்சி நடைபெறும். மற்றொரு நாடு நல்லெண்ண அடிப்படையில் நிதியுதவி வழங்கினால் மத்திய அரசு ஏற்க வேண்டும்.

2016 தேசிய பேரிடர் மேலாண்மை கொள்கைப்படி வெளிநாட்டு நிதியை ஏற்றுக் கொள்ளலாம். எனினும், இது தொடர்பாக மத்திய அரசு பேச்சு மட்டுமே நடத்தி வருகிறது. முடிவெடுக்கும் போது பார்க்கலாம் என கூறியுள்ளார்.

# தமிழகத்தில் 6 இடங்களில் ஒரே வேளை வாஜ்பாயின் அஸ்தியை கரைக்க ஏற்பாடு


பா.ஜ.க. அறிவிப்பு

முன்னாள் பிரதமர் வாஜ்பாயின் அஸ்தி தமிழகத்தில் 6 இடங்களில் எதிர்வரும் 26 ஆம் திகதி ஊர்வலமாக எடுத்துச் சென்று கரைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து பா.ஜ.க. மாநிலப் பொதுச் செயலாளர் கே.எஸ்.நரேந்திரன் நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுளளவை வருமாறு–

முன்னாள் பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாயின் அஸ்தி, நேற்று முன்தினம் டில்லி மத்திய தலைமை அலுவலகத்தில் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் முக்கியத் தலைவர்களால் அனைத்து மாநில தலைவர்களிடம் ஒப்படைக்கப்படுகிறது.

அதனை, தமிழக பா.ஜ.க. தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் பெற்றுக் கொண்டு, டில்லியில் இருந்து விமானம் மூலம் சென்னைக்கு கொண்டு வருகிறார். பின்னர் பொதுமக்கள் அஞ்சலிக்காக பா.ஜ.க. தலைமை அலுவலகமான கமலாலயத்துக்கு அஸ்தி எடுத்து வரப்படுகிறது.

இன்று பொது மக்கள், முக்கியப் பிரமுகர்கள் அஞ்சலி செலுத்திய பிறகு, மாலையில் தமிழகத்தில் 6 இடங்களில் அஸ்தியைக் கரைப்பதற்காக பா.ஜ.க. மூத்த தலைவர்கள் தலைமையில் அஸ்தி எடுத்துச் செல்லப்படுகிறது. அதன்படி, கன்னியாகுமரி, ராமேஸ்வரம், மதுரை, திருச்சி, ஈரோடு (பவானி), சென்னை ஆகிய 6 இடங்களில் அஸ்தி ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு கரைக்கப்படும்.

தமிழக பா.ஜ.க. தலைவர் தமிழிசை சவுந்தரராஜன், மத்திய இணை அமைச்சர் பொன்.ராதாகிருஷ்ணன், முன்னாள் மாநிலத் தலைவர் இல.கணேசன், பா.ஜ.க. தேசிய செயலாளர் எச்.ராஜா, தேசிய செயற்குழு உறுப்பினர் சி.பி.ராதாகிருஷ்ணன், முன்னாள் மாநிலத் தலைவர் கே.என். லட்சுமணன், எம்.ஆர்.காந்தி ஆகியோர் தலைமையில் இந்த ஊர்வலங்கள் நடக்கின்றன. பொதுமக்கள், கட்சித் தொண்டர்கள் அனைவரும் ஆங்காங்கே அஞ்சலி செலுத்தும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. எதிர்வரும் 26 ஆம் திகதி காலை 11 மணிக்கு வாஜ்பாயின் அஸ்தி 6 இடங்களிலும் ஒரே நேரத்தில் கரைக்கப்படும் என அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## விக்னேஸ்வரனின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு நேற்றுப் பிற்பகல் நாடாளுமன்றக் கட்டடத்தில் எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையில் கூடியது.

அங்கு பேசப்பட்ட விடயம் தொடர்பாக கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.சு. சுமந்திரன் எம்.பி. தெரிவித்த தகவல்கள் வருமாறு:-

வடக்கு, கிழக்கு அபிவிருத்திச் செயலணி தொடர்பாக முதலமைச்சர் விக்னேஸ்வரன் தமக்கு எழுதிய கடிதத்தை சம்பந்தன் ஐயா நாடாளுமன்றக் குழுவிற்குச் சமர்ப்பித்தார்.

இந்தச் செயலணி தொடர்பாக ஜனாதிபதிக்குத் தாம் எழுதிய கடிதத்தையும் முதல்வர் விக்னேஸ்வரன் சம்பந்தன் ஐயாவுக்கு அனுப்பியிருந்தார்.

ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் தாம் அந்தச் செயலணியின் நடவடிக்கையில் பங்குபற்ற மாட்டார் எனக் குறிப்பிட்டிருக்கின்றமையை சம்பந்தன் ஐயாவுக்குச் சுட்டிக்காட்டிய முதல்வர், அதே வழியில் கூட்டமைப்பினர் அனைவரும் அந்தச் செயலணி நடவடிக்கையைப் பகிஷ்கரிக்க வேண்டும் எனத் தமது கடிதத்தில் கோரியிருந்தார்.

'அரசியல் தீர்வுக்குத்தான் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். அது வந்த பின்னரே அபிவிருத்திக் குறித்துப் பேச வேண்டும். இந்தச் செயலணிக் கூட்டத்தில் பங்குபற்றுமாறு கூட்டமைப்பின் பதினாறு எம்.பிக்களுக்கும் அழைப்பு அனுப்பப்பட்டிருப்பதாக அறிகிறேன். என்னைப் போல பதினாறு கூட்டமைப்பு எம்.பிக்களும் இதே நிலைப்பாட்டை எடுக்க வேண்டும். இந்தச் செயலணியை ஒட்டுமொத்தமாக எல்லோரும் சேர்ந்தே புறக்கணிக்க வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பு' – என்ற சாரப்பட முதல்வர் விக்னேஸ்வரன் தெரிவித்திருந்தார்.

ஆனால், கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு ஒட்டுமொத்தமாக – ஏகமனதாக – இந்தக் கோரிக்கையை நிராகரித்து விட்டது.

அரசியல் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டியது முக்கியமானதே. ஆனால் அதற்காக ஏனையவற்றை விட்டுவிட்டு பாராமுகமாக இருக்க முடியாது. எது மக்களுக்கு நிறையவே பிரச்சினைகள் உள்ளன.

நமது மக்களின் அன்றாட வாழ்வை அழுத்தும் நெருக்குவாரங்கள், சுமைகள் அனேகம் இருக்கின்றன. அவற்றைத் தாங்க முடியாது மக்கள் துடிக்கின்றார்கள். அரசியல் தீர்வுக்கு முயற்சிக்கின்றோம் என்று கூறி அந்த நெருக்கடிகளில் மக்கள் தொடர்ந்து அவலப்பட இடமளிக்க முடியாது.

வடக்கு மாகாண முதல்வர் இந்த ஐந்து வருடத்தில் பல அரசியல் விடயங்களைக் கையாண்டிருக்கின்றார். அச்சமயத்தில் எப்போதாவது எங்களுடன் கலந்துரையாடியிருக்கின்றாரா? எங்களுக்குத் தனது கருத்தை – நிலைப்பாட்டை – கூறியிருக்கின்றாரா? எங்கள் கருத்தை செவிமடுத்திருக்கின்றாரா? இப்போது மட்டும் – தமது பதவியின் முடிவு காலத்தின் போது மட்டும் – ஏன் இதனைக் கூறிக் கொண்டு எங்களுடன் கலந்தாலோசிக்கவும் சேர்ந்து செயற்படவும் முயற்சிப்பவர் போல காட்டுகின்றார் என நாடாளுமன்றக் குழு உறுப்பினர்கள் கேள்வி எழுப்பினர்.

'அவர் என்ன கூட்டமைப்புத் தலைவரா? தாம் பகிஷ்கரிப்பதால் எங்களையும் பகிஷ்கரிக்கக் கோருவதற்கு?' – என்றும் ஓர் உறுப்பினர் சீற்றத்துடன் கேட்டார்.

மாகாண சபைக்கு அவரைத் தெரிவுசெய்து அனுப்பியமை, மக்களின் அன்றாட பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு, அபிவிருத்தியைக் கவனிக்கவே. அரசியல் தீர்வு பற்றிய விடயங்களை நாடாளுமன்றத்தில்தான் பார்க்க வேண்டும். ஆனால் முதல்வர் விக்னேஸ்வரன் தலைமையில் இந்த விடயங்களை மாகாண சபையினால் கவனிக்கவே முடியவில்லை. ஆகவே, தீர்வு விடயத்துக்கு அப்பால் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளையும் நாடாளுமன்ற உறுப்பினர்களே பார்க்க வேண்டியுள்ளது என உறுப்பினர் அனைவரும் சுட்டிக்காட்டினர்.

எமது மக்களுக்கு காணி விவகாரம் மாத்திரம் அல்ல, பல உடனடிப் பிரச்சினைகள், அவசரமாகத் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள் நிறையவே உள்ளன. அவற்றை நாம் உதாசீனம் செய்ய முடியாது. ஏதேனும் வகையில் அரசுக்கு அழுத்தம் கொடுத்து, அந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண நாம் முயற்சித்தேயாக வேண்டும்.

வடக்கு, கிழக்கு அபிவிருத்திச் செயலணி அதற்கு ஒரு வாய்ப்பு. நாம் அதனைப் புறமொதுக்க முடியாது.

மயிலிட்டித் துறைமுக நிகழ்வில் மாவை சேனாதிராசா எம்.பி. பல விடயங்களை ஜனாதிபதிக்குச் சுட்டிக் காட்டினார். தீர்வு விடயத்தைத் தவிர மற்றைய பிரச்சினைகள் தொடர்பில் ஆக்கபூர்வமான பதிலை ஜனாதிபதி தந்துள்ளார். அவற்றை நாம் செய்தாக வேண்டும். நடைமுறைப்படுத்த வேண்டும். மேற்படி செயலணி போன்ற விடயங்களில் முழு ஈடுபாட்டுடன் நாம் பங்களித்தால்தான் அதனைச் செய்ய முடியும்.

இந்தத் தொனியில்தான் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கருத்து வெளியிட்டனர்.

முதலமைச்சரின் பகிஷ்கரிப்புக் கோரிக்கையை நிராகரித்து வடக்கு, கிழக்கு அபிவிருத்திச் செயலணியில் முழுமையாகப் பங்குபற்றுவது எனத் தீர்மானம் நேற்றைய கூட்டத்தில் ஏகமனதாக எடுக்கப்பட்டது.

– இப்படி எம்.ஏ.சுமந்திரன் எம்.பி. மேலும் தகவல் வெளியிட்டார்.

நேற்றைய நாடாளுமன்றக் குழு கூட்டத்தில் இரா.சம்பந்தன், மாவை சேனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன், சி.சிறிதரன், துரைரட்ணசிங்கம், சார்ள்ஸ் நிமலநாதன், வியாழேந்திரன், கோடீஸ்வரன், செல்வம் அடைக்கலநாதன், யோகேஸ்வரன், ஸ்ரீநேசன் ஆகிய பதினொரு எம்.பிக்கள் பங்கு பற்றினர்.

த.சித்தார்த்தன், சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா, ஈ.சரவணபவன், டாக்டர் சிவமோகன், சிவசக்தி ஆனந்தன் ஆகிய ஐவரும் பங்குபற்றவில்லை. (உ)

## பரந்தனில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்தை ஏற்படுத்திய பஸ் அவ்விடத்தைவிட்டு நகர்ந்து சென்றுள்ளதாகப் பொலிஸார் கூறினர்.

வீதியில் நின்ற இராணுவச் சிப்பாய் ஒருவரும் வேறு ஒரு பஸ்ஸின் நடத்துநருமே விபத்தில் காயமடைந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## வெடுக்குநாறி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழிபாடுகளில் ஈடுபட்ட அவர், தற்போதைய நிலைமைகள் தொடர்பில் ஆலய நிர்வாகத்தினரிடம் கேட்டறிந்தார்.

வெடுக்குநாறி மலையில் உள்ள ஆதிசிவன் ஆலயத்தைத் தொல்பொருள் திணைக்களத்தினர் தமது ஆளுகைக்குள் கொண்டுவர முற்பட்ட நிலையில் அப்பகுதி மக்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

கடந்த 21ஆம் திகதி வவுனியா பிரதேச மக்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் இணைந்து வவுனியா வடக்கு பிரதேச செயலகத்திற்கு முன்பாக இது தொடர்பில் ஆர்ப்பாட்டமொன்றை மேற்கொண்ட நிலையில் இன்று அமைச்சர் அனந்தி அங்கு சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## எல்லை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூடி மீண்டும் ஆராய்ந்து தீர்மானிப்பது என நேற்று முடிவு கட்டப்பட்டது.

எல்லை நிர்ணய அறிக்கை நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவோடு நிறைவேற்றப்பட்டால்தான் அது சட்டமாக முடியும்.

ஆனால் மாகாண சபைத் தேர்தலை ஐம்பது வீதம் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையிலும் எஞ்சிய ஐம்பது வீதம் தொகுதி வாரி முறையிலும் நடத்த வேண்டும் என முன்னர் தெரிவித்த கட்சிகள் எல்லாம் இப்போது கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் பட்டுத்தெளிந்த அறிவின் காரணமாக அந்த முறைமையை எதிர்க்கின்றன.

ஆனால், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மட்டும் அதனை ஆதரிக்கின்றது.

ஐ.தே.க., முஸ்லிம் காங்கிரஸ் உட்பட்ட முஸ்லிம் கட்சிகள், மனோ கணேசனின் கூட்டணி, ஈ.பி.டி.பி, ஜே.வி.பி, கூட்டமைப்பு போன்றவை எல்லாம் இந்த எல்லை நிர்ணய அறிக்கை சட்டமாவதை எதிர்க்கின்றன.

இந்தச் சூழலில் இந்த விடயத்தில் வாக்கெடுப்பு இடம்பெற்றால், தாம் தனித்துப் போய் பெரும் பின்னடைவை எதிர்கொள்வது அம்பலமாகும் எனக் கருதும் சுதந்திரக் கட்சி வாக்கொடுப்பு வேண்டாம் என்கிறது. மூன்றில் இரண்டு பங்கு எம்.பிக்கள் இதனை ஆதரிக்க மாட்டார்கள் என்பது உறுதி என்றால் ஏன் அதன் மீது வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என அக்கட்சி கேட்கிறது.

ஆனால் வாக்கெடுப்பு நடத்தப் பட வேண்டும் என ஏனைய கட்சிகள் ஒற்றைக் காலில் நிற்கின்றன.

எனவே, இன்று காலை முதல் இந்த எல்லை நிர்ணய அறிக்கை மீதான விவாதம் நாடாளுமன்றத்தில் நடக்கும் என்றும் –

அதன் மீது வாக்களிப்பு நடத்துவதா என்பதை கட்சித் தலைவர்கள் இன்று பிற்பகல் 3 மணிக்கு மீண்டும் கூடி ஆராய்ந்து முடிவெடுப்பர் என்றும் –

நேற்றைய கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இணக்கம் காணப்பட்டது. (உ)

## வாள்வெட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செல்லப்பட்ட மோட்டார் சைக்கிளே இவ்வாறு எரியூட்டப்பட்ட நிலையில் மீட்கப்பட்டது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொக்குவில் பிறவுண் பகுதியில் வைத்து இளைஞர் ஒருவரை வாளால் வெட்டிய வாள்வெட்டுக் கும்பல் அவரின் மோட்டார் சைக்கிளைப் பறித்துச் சென்றது எனக் கூறப்பட்டது.

பறித்துச் செல்லப்பட்ட மோட்டார் சைக்கிளே எரியூட்டப்பட்டுள்ளது.

காயமடைந்த மாணிப்பாயைச் சேர்ந்த இளைஞன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருகின்றார். (ஐ-7)

## குள்ள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவினால் நாடாளுமன்றத்தில் நேற்று எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கடந்த காலங்களில் கிறீஸ் பூதங்களால் அச்சுறுத்தப்பட்டு வந்த மக்கள் தற்போது குள்ள மனிதர்களின் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளனர். இதன் பின்னணி என்ன என டக்ளஸ் தேவானந்தா மன்றில் வினவினார்.

அத்துடன், யாழ்ப்பாணத்தில் அண்மைக் காலமாக அதிகரித்துவரும் சமூக விரோதச் செயற்பாடுகளினால், சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுபவர்கள் மீதான நம்பிக்கையை மக்கள் இழந்துள்ளனர் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதற்குப் பதிலளித்த சட்டம் ஒழுங்கு அமைச்சர், குள்ள மனிதர்களின் அச்சுறுத்தல் தொடர்பாக யாழ். பொலிஸ் நிலையங்களில் இதுவரை எவ்வித முறைப்பாடுகளும் பதிவு செய்யப்படவில்லை.

வடக்கில் இடம்பெறும் சமூக விரோதச் செயற்பாடுகளுக்கு எதிரான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. அதன்படி ஆவா குழுவுடன் தொடர்புடைய 38 பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர் – என்றார். (ஐ)

## பன்னீர்செல்வம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பற்றுவதற்காக யாழ் வருகின்றனர்.

தமிழக அரசினால் யாழ் பொதுநூலகத்துக்கு எனச் சேர்க்கப்பட்ட சுமார் ஒரு லட்சம் நூல்கள் அடங்கிய அன்பளிப்புத் தொகுதியைக் கையளிக்கும் நிகழ்வுக்காகவே அவர்கள் யாழ்ப்பாணம் வருகின்றனர்.

கடைசியாக, தந்தை செல்வநாயகத்தின் இறுதிக் கிரியைகளில் பங்குபற்றுவதற்காக தமிழகத்தின் பிரதிநிதியாக அங்கு இருந்து ஆற்காடு வீரசாமி யாழ் வந்திருந்தார். அதற்குப் பின்னர் தமிழக அரசின் சார்பில் யாழ்ப்பாணத்தில் பொது நிகழ்வு ஒன்றில் பங்குபற்றுவதற்காக தமிழகத் துணை முதல்வரும், கல்வி அமைச்சரும் இங்கு வருகை தருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் கல்வி இராஜாங்க அமைச்சர் வீ.இராதாகிருஷ்ணன் இந்த நிகழ்வை ஒழுங்குபடுத்துகின்றார். (உ)

## நேபாளத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒத்துழைப்பு அமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகளின் தலைவர்களின் உச்சி மாநாடு நேபாளத்தில் எதிர்வரும் 30ஆம், 31ஆம் நாள்களில் நடைபெறவுள்ளது.

காத்மண்டுவில் நடைபெறும் இந்த மாநாட்டில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட தலைவர்கள் பங்கேற்கவுள்ளனர்.

இந்த மாநாட்டின்போது, பக்க நிகழ்வாக, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் சந்தித்துப் பேச்சு நடத்துவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையில் அதிகரித்து வரும் சீனத் தலையீடுகள், இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்தல் உள்ளிட்ட விடயங்கள் குறித்து இதன்போது பேசப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுவதாக இராஜதந்திர வட்டாரங்கள் கூறின. (ஐ)

## பலாலியிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேரடி விமான சேவைகளை முன்னெடுப்பதால் பாதுகாப்புப் பிரச்சினைகள் உருவாகும் எனப் புலனாய்வுப் பிரிவினர் எச்சரிக்கை செய்துள்ளனர். பலாலி விமான நிலையத்தை விஸ்தரித்து, தமிழ் நாட்டுக்கும் பலாலிக்கும் இடையில் விமான சேவைகளை ஆரம்பிக்கும் நோக்கில், விமான நிலையத் தைக் கண்காணிப்பதற்காக மூவர் அடங்கிய இந்திய அதிகாரிகள் குழுவொன்று பலாலிக்கு விஜயம் செய்துள்ளது.

இந்த விமான நிலையத்தைப் பிராந்திய விமான நிலையமாக மாற்றும் நோக்கில் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளதாகவும் அந்த ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. (ஐ)

## விசேட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மஹிந்த ராஜபக்ஷவின் அலுவலகப் பிரதம அதிகாரி மற்றும் ஏனைய மூவருக்கு எதிரான விசாரணை இடம்பெறவுள்ளது.

இந்த விசாரணைக்கு ஆஜராகுமாறு சந்தேகநபர்களுக்கு ஏற்கனவே அறிவித்தல் அனுப்பப்பட்டுள்ளது.

லிட்ரோ காஸ் நிறுவனத்திற்குச் சொந்தமான 50 கோடி ரூபா பணத்தைத் தவறாகப் பயன்படுத்தினார்கள் எனப் பணச்சலவைச் சட்டத்தின் கீழ் இவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் முதலாவது விசாரணையாக இந்த விடயம் இடம்பெறவுள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதிகளான சம்பத் விஜேரத்ன, சம்பத் அபேகோன் மற்றும் ஜானகி ராஜரத்ன ஆகியோர் அடங்கிய ஆயத்தின் முன் இந்த விசாரணை இடம்பெறவுள்ளது.

கடந்த அரசின் ஆட்சிக்காலத்தில் இடம்பெற்றவை எனக் கூறப்படும் மோசடிகள் தொடர்பான வழக்குகள் கிடப்பில் போடப்பட்டுள்ளன எனக் குற்றஞ்சாட்டப்பட்டு வந்த நிலையில், அவை குறித்து துரித கதியில் விசாரணை நடத்தித் தீர்ப்பு வழங்கும் முனைப்பில் இந்த விசேட நீதிமன்றம் அமைக்கப்பட்டுள்ளது.

புதுக்கடை நீதிமன்ற கட்டடத் தொகுதியில் அமைக்கப்பட்டுள்ள விசேட மேல் நீதிமன்றத்தை, நீதியமைச்சர் தலதா அத்துக்கோரள கடந்த செவ்வாய்க்கிழமை திறந்துவைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# புதிய சாதனை படைத்த கோஹ்லி



இங்கிலாந்து அணிக்கு எதிரான 3ஆவது டெஸ்ட் போட்டியில் வெற்றி பெற்றதன் மூலம், இங்கிலாந்து மண்ணில் வெற்றி பெற்ற 6ஆவது இந்திய அணித் தலைவர் என்ற பெருமையை விராட் கோஹ்லி பெற்றுள்ளார்.

நொட்டிங்காமில் நடைபெற்ற இங்கிலாந்துக்கு எதிரான 3ஆவது டெஸ்ட் போட்டியில், இந்திய அணி 203 ஓட்டங்களில் அபார வெற்றி பெற்றது. இதன் மூலம் இங்கிலாந்து மண்ணில் அணித்தலைவராக கோஹ்லி முதல் வெற்றியைப் பெற்றுள்ளார்.

இதற்கு முன்பு இங்கிலாந்து மண்ணில் அஜித் வடகேர், கபில்தேவ், கங்குலி, ராகுல் டிராவிட், டோனி ஆகியோர் தலைமையிலான இந்திய அணி வெற்றி பெற்றுள்ளது.

கடைசியாக, கடந்த 2014ஆம் ஆண்டு டோனி தலைமையிலான இந்திய அணி, லார்ட்ஸில் நடைபெற்ற டெஸ்டில் வெற்றி பெற்றது. அதன் பின்னர், தற்போது கோஹ்லி தலைமையிலான அணி வெற்றி பெற்றுள்ளதால், இங்கிலாந்தில் டெஸ்ட் வெற்றியை பெற்ற 6 ஆவது இந்திய அணித்தலைவர் என்ற சிறப்பை கோஹ்லி பெற்றுள்ளார்.

# வெற்றியை மனைவிக்கு சமர்ப்பித்தார் விராட்



இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் வெற்றியை விராட் கோஹ்லி தனது மனைவிக்குச் சமர்ப்பித்துள்ளார்.

டிரென்ட் பிரிட்ஜில் இடம்பெற்ற மூன்றாவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணி வெற்றி பெற்ற பின்னர் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

விராட் கோஹ்லி மேலும் தெரிவித்துள்ளதாவது:

இந்த டெஸ்ட் போட்டியைத் திரும்பிப் பார்த்தால் எனக்கும் ரகானேக்கும் இடையிலான இணைப் பாட்டம் மிகவும் முக்கியமானது.

ரகானே முதலே் இனிங்சில் தெளிவான மனோ நிலையில் காணப்பட்டார். அவர் அவ்வாறு விளையாடும்போது பார்ப்பதற்கு அழகாக காணப்படுவார். அவரால் போட்டியின் போக்கை மாற்ற முடியும்.

விக்கெட்டுக்களை இழக்காமல் நீண்டநேரம் நிலைத்து நின்று விளையாடுவது முக்கியம்.

இங்கிலாந்து அணியின் பந்து வீச்சுக் குழாம் மிகவும் திறமை வாய்ந்தது. அவர்களுக்கு எதிராக ஓட்டங்களைப் பெறுவதற்கு உறுதிப்பாடும், துணிச்சலும் அவசியம்.

ரகானே முதல் இனிங்சில் அந்தக் குணாதிசயங்களை வெளிப்படுத்தினார். புஜாரா இரண்டாவது இனிங்ஸில் அவ்வாறு விளையாடினார். நான் 2014 தோல்விகளைப் பற்றி ஒருபோதும் நினைத்ததில்லை.

நான் என்னைத் தொடர்ந்து உற்சாகமூட்டி வரும் எனது மனைவிக்கு இந்த வெற்றியை அர்ப்பணிக்க விரும்புகின்றேன்.

இந்திய அணியின் நான்கு வேகப்பந்து வீச்சாளர்களும் சிறந்த உடற்தகுதியை வெளிப்படுத்தி வருகின்றனர். இங்கிலாந்து அணியினர் சுலபமாக ஓட்டங்களைப் பெறுவதை நாங்கள் அனுமதிக்க விரும்பவில்லை. – என்றார். (ஐ)

# இந்திய அணியில் இளம் வீரர்கள்



இங்கிலாந்துக்கு எதிரான 4 ஆவது மற்றும் 5 ஆவது டெஸ்ட் போட்டிக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது.

இதில் முதல் 2 டெஸ்ட் போட்டிகளில் படுதோல்விய டைந்த அடைந்த இந்திய அணி, 3 ஆவது டெஸ்ட் போட்டியில் 203 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இந்நிலையில் 4 ஆவது மற்றும் 5 ஆவது டெஸ்ட் போட்டிகளுக்கான இந்திய அறிவிக்கப்பட்டுள்ளது.

விராட் கோஹ்லி(தலைவர்), தவான், ராகுல், பிரித்வி, புஜாரா, ரகானே, ரிசப் பண்ட், பாண்டியா, அஸ்வின், ஜடேஜா, பும்ரா, இஷாந்த் சர்மா, மி, உமேஷ் யாதவ், சர்துல் தாகூர், கருண் நாயர், தினேஷ்கார்த்திக், ஹனுமா விஹாரி ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். முரளி விஜய், குல்தீப் யாதவ் நீக்கப்பட்டு பிரித்வி ஷா மற்றும் ஹனுமா விஹாரி இணைக்கப்பட்டுள்ளன.




அயர்லாந்துக்கு எதிரான இரண்டாவது போட்டியிலும் வெற்றி பெற்றுள்ளது ஆப்கானிஸ்தான் அணி.

ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணி, ஒருநாள் மற்றும் ரி – ருவென்ரி தொடரில் விளையாடுவதற்காக அயர்லாந்துக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது.

அங்கு சென்றுள்ள ஆப்கானிஸ்தான் அணி, மூன்று ஒருநாள் போட்டிகள் மற்றும் மூன்று ரி – ருவென்ரி போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது. இந்நிலையில் இரு அணிகளுக்கிடையிலான இரண்டாவது ரி – ருவென்ரி போட்டி, நேற்றுமுன்தினம் வட அயர்லாந்தில் உள்ள பிரடி கிரிக்கெட் கழக மைதானத்தில் நடைபெற்றது.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆப்கானிஸ்தான் அணி, முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. இதன்படி களமிறங்கிய ஆப்கானிஸ்தான் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 160 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டமாக, ஹஸ்ரதல்லாஹ் சசாய் 82 ஓட்டங்களை பெற்றுக் கொண்டார். பந்து வீச்சில் பீட்டர் சேஸ் 3 விக்கெட்டுகளையும், பொய்ட் ரன்கின் 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து 161 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய அயர்லாந்து அணி, 15 ஓவர்கள் நிறைவில் 79 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதனால் அயர்லாந்து அணி 81 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியைத் தழுவியது.

இதில் அயர்லாந்து அணி சார்பில், வில்லியம் போட்டர்பீல்ட் 33 ஓட்டங்களை அதிகபட்ச ஓட்டமாகப் பெற்றுக்கொண்டார். பந்து வீச்சில் ரஷித் கான் 4 விக்கெட்டுகளையும், முஜிப் உர் ரஹ்மான் 3 விக்கெட்டுகளையும் பெற்றுக் கொண்டனர்.

இந்த வெற்றியின் மூலம் ஆப்கானிஸ்தான் அணி, மூன்று போட்டிகள் கொண்ட ரி – ருவென்ரி தொடரைக் 2:0 எனக் கைப்பற்றியுள்ளது. இந்த இரு அணிகளுக்கிடையிலான மூன்றாவதும், இறுதியுமான ரி – ருவென்ரி போட்டி, இன்று வட அயர்லாந்தில் உள்ள பிரடி கிரிக்கெட் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

# தங்கள் அணியின் வீரர்களை விற்று ஆடுகளை வாங்கிய உதைபந்து அணி

துருக்கியைச் சேர்ந்த உதைபந்து கழக அணி ஒன்று, பொருளாதார நெருக்கடி காரணமாகத் தங்களது அணி வீரர்களை விற்று ஆடுகளை வாங்கியுள்ளது.

துருக்கி நாட்டைச் சேர்ந்த மிகச் சிறிய உதைபந்து கழக அணியான கல்ஸ்போர், பொருளாதாரத்தில் மிகவும் பின் தங்கிய நிலையில் உள்ளது. இதனால் கழக அணி தனது வருமானத்தைப் பெருக்க புது விதமான யுக்தியைக் கையாண்டது.

அதன்படி, தங்களது அணி வீரர்கள் 18 பேரை விற்று 10 ஆடுகளை வாங்கியிருக்கிறது. இந்த ஆடுகளின் மூலம் கிடைக்கும் பால், இறைச்சியை விற்று கிடைக்கும் வருமானத்தில் கழகத்துக்கான செலவுகளைச் சமாளிக்கும் திட்டத்தில் அணி நிர்வாகம் உள்ளது.

இது குறித்து கழகத் தலைவர் கெனான் பையுக்லெப்லெபி கூறுகையில், வீரர்களை விற்று ஆடுகளை வாங்கிய நடவடிக்கையால் உலகம் முழுவதும் பிரபலமாகிவிட்டோம். நாங்கள் பொருளாதாரத்தில் மிகவும் பின் தங்கிய நிலையில் இருக்கிறோம்.

எங்களுக்கு நிதியுதவி செய்வதற்கு விளம்பரதாரர்கள் கிடைப்பதில்லை. அரசும் எங்களை ஆதரிப்பதில்லை. அதனால் தான் எங்கள் வீரர்களை விற்று, அதில் கிடைக்கும் வருமானத்தை வைத்து ஒரு தொழில் ஆரம்பித்து, பிற்காலத்தில் இந்த கழகத்தில் உள்ள வீரர்களைச் சிறந்தவர்களாக உருவாக்க முடிவு செய்தோம்.

எங்களுக்கு வேறு வழி தெரியவில்லை. இந்த 10 ஆடுகளை வைத்து, அடுத்த சில ஆண்டுகளில் 140 ஆடுகளை உருவாக்குவதுதான் எங்களது குறிக்கோள். இப்போது எங்களுக்கு தேவை நிலையான வருமானம் தான்' எனத் தெரிவித்துள்ளார்.

இந்த கழக அணி 18 வீரர்களை இலங்கை மதிப்பில் 5,40,000 ரூபாவுக்கு விற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

# திருடர்களே தூற்றும் அளவுக்கு பலவீனமாகியுள்ளது நல்லாட்சி

## விஜித ஹேரத் எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக.24

திருடர்களைத் தண்டிக்கவில்லை எனத் திருடர்களே அரசாங்கத்தைத் தூற்றும் அளவிற்குத் தேசிய அரசு பலவீனமடைந்துள்ளது. குடும்ப ஏகாதிபத்திய ஆட்சியை வீழ்த்தி மக்கள் பாரிய எதிர்பார்ப்புக்களின் மத்தியிலே ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினர். ஆனால் மக்களின் எதிர்பார்ப்பு இதுவரை காலமும் நிறைவேற்றப் படவில்லை என ஜே.வி.பியின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத் குற்றஞ் சாட்டினார்.

ஜே.வி.பியின் அலுவலகத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் நாடாளுமன்றத்தில் எல்லை நிர்ணய அறிக்கை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. பழைய தேர்தல் முறைமைக்கு எதிர்ப்பு தெரிவித்து புதிய தேர்தல் முறைமையைக் கொண்டு வந்தவர்கள் இன்று சில அரசியல் விடயங்களை மையப்படுத்தி மாகாண சபைத் தேர்தலை பிற்போடுவதற்கு தேர்தல் திருத்த முறைமைகளை ஆயுதமாகக் கொண்டு செயற்படுகின்றனர்.

புதிய தேர்தல் முறைமையிலே மாகாண சபை தேர்தலை நடத்துவதற்கு ஜே.வி.பியினர் அன்று தொடக்கம் இணக்கம் தெரிவித்த வண்ணமே காணப்படுகின்றனர். எல்லை நிர்ணய அறிக்கை மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்படுவதற்கு நாம் ஆதரவு வழங்குவோம் .

மக்கள் விடுதலை முன்னணியினர் ஒரு கொள்கையின் நிமித்தமே அரசியலில் செல்வாக்குச் செலுத்தி வருகின்றனர். ஆனால் பிற கட்சிகள் தமது அரசியல் இருப்பைத் தக்க வைத்துக் கொள்வதற்காகக் காலத்திற்கு காலம் தமது கொள்கையில் மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்றன. குறிப்பாக ஐக்கிய தேசிய கட்சியைக் குறிப்பிடலாம்.

பழைய தேர்தல் முறைமையை இரத்து செய்து புதிய தேர்தல் முறைமையில் தேர்தல்கள் இடம்பெற வேண்டும் என்று ஐக்கிய தேசிய கட்சியே குறிப்பிட்டு புதிய தேர்தல் முறைமையை ஆதரித்தது. ஆனால் இன்று தேர்தல் மீதான பயத்தைக் கொண்டு மாகாண சபைத் தேர்தலை பிற்போட முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. மக்கள் மத்தியில் அரசின் மீது தற்போது ஏற்பட்டுள்ள விரக்தியை கண்டு அரசு அச்சமடைந்தமையினாலே தேர்தல்களைப் பிற்போடும் நோக்கத்திலே அது செயற்படுகின்றது.

தேசிய அரசு தோற்றுவிக்கப்பட்டு மூன்று வருடங்கள் பூர்த்தியாகிவிட்டது. குடும்ப ஆட்சியை வீழ்த்தி ஜனநாயக அரசைத் தோற்றுவிக்கும் நோக்கத்திலே மக்கள் 100 நாள் வேலைத்திட்டத்தில் குறிப்படப்பட்ட விடயங்களை நம்பி வாக்களித்தனர்.

இன்று அரசுக்கு எதிராகத் தொழிற்சங்கங்கள், எதிர்த்தரப்பினர் தொடர்ந்து போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். எதிர்த்தரப்பினர் அரசைப் பகிரங்கமாகச் சாடுகின்றனர். திருடர்களைத் தண்டிக்கவில்லை என்று திருடர்களே தூற்றும் அளவிற்கு அரசு இன்று பலவீனமடைந்து காணப்படுகின்றது.

மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேறாத பொழுது – மக்கள் அரசை விமர்சிக்கும்போது – 100 நாள் திட்டத்திற்கும் தனக்கும் எவ்வித தொடர்புகளும் கிடையாது என ஜனாதிபதி குறிப்பிடுவதும் கூட்டரசின் ஒற்றுமையை நன்கு புலப்படுத்தியது.

குடும்ப ஆட்சியில் காணப்பட்ட குறைப்பாடுகளே தேசிய அரசிலும் காணப்படுகின்றன. 2014ஆம் ஆண்டு வெளிப்படையாக இடம்பெற்றவை இன்று நல்லாட்சி என்ற பெயரில் இடம்பெறுகின்றன. இரண்டு அரசுக்கும் இடையில் பாரிய வேறுபாடுகள் ஏதும் கிடையாது. மக்களின் வாழ்க்கைச் செலவுகள் இன்று உயர்வடைந்துள்ளன. பொருளாதார ரீதியில் பாதிப்புற்ற நடுத்தர மக்கள் சட்ட விரோதத் தொழில்களை நாடுகின்றார்கள். இதற்கு அரசே பொறுப்புக் கூற வேண்டும். – என்றார். (ஐ)









யாழ்ப்பாணம் அச்சுவேலி கைத்தொழிற்பேட்டை வளாகத்தில் உருவாக்கப்பட்டுள்ள பாரிய கைத்தொழிற்சாலையாக அச்சுவேலி காகித உற்பத்தி ஆலை வைபவரீதியாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் மூன்றாவதும் வடகிழக்கு தமிழர் தாயகத்தில் இரண்டாவதுமான காகித உற்பத்தித் தொழிற்சாலையாக இந்த ஆலை உதயமாகியுள்ளது.

இந்த நிகழ்வில், USAID நிறுவனத்தின் சார்பில் எலிஸபெத் டாவேர்ன் மற்றும் மூத்த ஊடகவியலாளர் ராதேயன் ஆகியோர் காகித ஆலையைத் திறந்து வைத்தனர்.

நிகழ்வின் விருந்தினர்களாக USAID நிறுவனத்தின் சார்பில் எலிஸபெத் டாவேர்ன், லான்ட் ஓ லீக்ஸ் அமைப்பின் சார்பில் மைக்கேல் பார், ஐ.பி.சி தமிழ் ஊடக வலையமைப்பின் நிறுவன முதல்வர் கந்தையா பாஸ்கரன் மற்றும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியர் சத்தியமூர்த்தி உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

# வடக்கில் பாதுகாப்பைப் பலமாக்க தமிழ்ப் பொலிஸார் அதிகம் தேவை

## நாடாளுமன்றில் நேற்று அரசு அறிவிப்பு

கொழும்பு, ஓக.24

வடக்கில் சிவில் பாதுகாப்பைப் பலப்படுத்த தமிழ் இளையோர்கள் பொலிஸ் சேவையில் இணைந்து கொள்ளவேண்டும். அவர்களை பொலிஸ் சேவையில் இணைத்துக் கொள்ள நாம் தயாராக உள்ளோம். இந்தச் செய்தியை தமிழ் அரசியல்வாதிகள் வடக்கு இளைஞர்களிடம் எடுத்துச் செல்லவேண்டும்.

– இவ்வாறு நேற்று நாடாளுமன்றில் அறிவித்தார் சட்டம், ஒழுங்கு அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார.

வடக்கில் இடம்பெற்று வரும் குற்றச் செயல்களுடன் ஆவா குழு உள்ளிட்டவை தொடர்புபட்டுள்ளன எனக் குற்றச்சாட்டுக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அந்தக் குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 38 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

யாழ். குடாநாட்டில் ஏற்படும் சமூக விரோதச் செயற்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படுகின்றனவா? குள்ளமனிதர் போன்று சிலர் சட்டவிரோதச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். அவர்கள் தொடர்பில் என்ன செயற்பாடுகள் எடுக்கப்படுகின்றன? போதைப்பொருள் கடத்தல் குறித்து ஏதேனும் தகவல்கள் கிடைத்துள்ளனவா? அவற்றின் பின்னணியில் அரசியல் நடவடிக்கைகள் உள்ளனவா? நிலைமைகளைக் கட்டுபாட்டின் கீழ் கொண்டு வர முடியுமா? – என்று யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா சபையில் நேற்றுக் கேள்விகளை எழுப்பினார்.

அவற்றுக்குப் பதிலளிக்கும் போதே சட்டம், ஒழுங்கு அமைச்சர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார மேலும் தெரிவித்தவை வருமாறு:

வடக்கில் இடம்பெற்று வரும் குற்றச்செயல்களுடன் ஆவா குழு உள்ளிட்டவை தொடர்புபட்டுள்ளன எனக் குற்றச்சாட்டுக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அந்தக் குற்றச்செயல்களுடன் தொடர்புடைய 38 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

அவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் நீதிமன்ற விசாரணைகள் தற்போது நடத்தப்பட்டு வருகின்றன. சந்தேகநபர்கள் சிறையில் உள்ளனர் .

அதேபோல் போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புபட்ட நபர்கள் யார் என்பது குறித்து இன்னமும் தகவல் எதுவும் கிடைக்கவில்லை. அரசியல்வாதிகளின் பின்னணி உள்ளதா என்ற தகவல் இன்னும் கிடைக்கவில்லை. அது குறித்தும் ஆராயப்பட்டு வருகின்றது.

அரசியல்வாதிகள், சிவில் உறுப்பினர்கள், இராணுவம் உள்ளிட்ட அனைத்துத் தரப்புகளுடனும் பேச்சுக்கள் நடத்தி உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம். மக்கள் மீதான எந்த அழுத்தமும் இல்லை. அவர்கள் சுதந்திரமாக



செயற்படும் சூழலை உருவாக்கியுள்ளோம். மந்தமான நிலையில் வடக்கின் பாதுகாப்பு உள்ளது என்பதை எம்மால் ஏற்றுகொள்ள முடியாது.

குற்றவாளிகளைக் கைதுசெய்துள்ளோம். சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஆகவே எமது செயற்பாடுகள் சரியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

வடக்கில் தமிழ் மக்களைக் கையாளத் தமிழ் தெரிந்த பொலிஸார் இல்லை, தமிழ் மொழிமூலத் தேர்ச்சி பெற்ற பொலிஸார் இல்லாமை ஒரு பிரச்சினையே. 15 வீதமான பொலிஸார் மட்டுமே தமிழ் பேசுகின்றனர். முடிந்த அளவில் தமிழ் மக்கள் பொலிஸ் துறையில் இணைந்துகொள்ள வேண்டும்.

தமிழர்களை இணைத்துக் கொண்டு வடக்கில் சிவில் பாதுகாப்பைப் பலப்படுத்த நாமும் தயாராகவே உள்ளோம். ஆகவே தமிழ் அரசியல்வாதிகள் இந்தச் செய்தியை தமிழ் இளைஞர்களிடம் கொண்டு செல்லவேண்டும். – என்றார். (ஐ)

*(மற்றொரு செய்தி 11ஆம் பக்கத்தில்)*

# விக்கியின் அரசியல் எதிர்காலத்தை தென்னிலங்கை தீர்மானிக்க முடியாது

## சிவாஜிலிங்கம் காட்டம்

யாழ்ப்பாணம், ஓக.24

“வடக்கு மாகாண முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன் அரசியலில் இருந்து விலக வேண்டுமா இல்லையா என்பதை வடக்கு மக்களே தீர்மானிக்கவேண்டும். தென்பகுதித் தலைவர்கள் அதனைத் தீர்மானிக்க முடியாது.”

– இவ்வாறு தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம்.

வடக்கு மாகாண முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன் அரசியலில் இருந்து ஒதுங்கவேண்டும் என ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளமை தொடர்பாக வினவியபோதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் –

சம்பிக்க ரணவக்க தனது இனவெறித்தனத்தைப் பிரதிபலித்து வருகின்றார். வடக்கு மாகாண முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன் அரசியலில் இருந்து ஓய்வு பெறுவதா இல்லையா என்பதை அவரே தீர்மானிக்க வேண்டும் – அல்லது அவரைப் பிரதிநிதியாக நியமிப்பதா இல்லையா என வட பகுதி மக்களே தீர்மானிக்க வேண்டும். இது தொடர்பாகத் தெற்கில் உள்ள தலைவர்கள் எவரும் தீர்மானிக்க முடியாது என்பதை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

நீங்கள் உங்கள் இராணுவ வீரர்களுக்கு வைக்கும் நினைவுச் சின்னங்களே விடுதலைப் புலிகளின் வீர வரலாற்றை பறைசாற்றும் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். எவ்வாறு உங்கள் இராணுவம் கொல்லப்பட்டது என்பதைத் தெரிந்துகொள்ளவேண்டுமாக இருந்தால் அதில் எமது போராட்ட வரலாறும் கூறப்பட வேண்டும் என்பதை மறந்து வீடாதீர்கள். – என்றார். (ஐ–7)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.08.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.